


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 12 - மார்ச் - 2019*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் – 4

சொர்க்கத்துக்குப் போவதற்கு ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது பாதைகள்
மோ யான்
தமிழில்: யமுனா ராஜேந்திரன் – 13

கஞ்சித் தொட்டி ஆஸ்பத்திரி என்ற ஸ்டான்லி மருத்துவமனை
டாக்டர் சு.நரேந்திரன் – 23

பரிமேலழகர் எதிர்கொண்ட உலகாயதம்
கி.முப்பால்மணி – 29

வரலாற்று இயங்கியல் பார்வையில் முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்
சி.ஆர்.ரவீந்திரன் – 43

வட்டார இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்
பொன்னீலன் – 49

பண்பாட்டுச் செயல்பாட்டாளன் ஏ.எம்.சாலன்
எஸ்.கே.கங்கா – 53

குழந்தை இலக்கியத்தில் இதழ்கள்
சுகுமாரன் – 57

தாழ்த்தப்பட்ட மக்களின் குரலை ஒலிக்கும் மலையாள இலக்கியப் படைப்புகள் ஒரு பார்வை
ஏ.எம்.சாலன் – 61

தமிழ் வானில் ஒளிர்ந்த தாரகை திருவாசகமணி
இரா.மோகனசுந்தரம் – 67

உத்தமதானபுரம் வே.சாமிநாதையர்: சிறப்பினும் பெரிய தனிச்சிறப்புப் பெற்றவர்
முனைவர் இரா.வெங்கடேசன் – 70

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்



**பாலாடைக் கட்டியும் புழுக்களும்**
கார்லோ கின்ஸ்பர்க் (2013)

**The Cheese and the Worms**
Carlo Ginzburg (2013)
The Cosmos of a Sixteenth Century Miller
The Johns Hopkins University Press, Boltimore

எந்த ஒரு சமயத்திலும் அதைப் பின்பற்றும் சாமானிய மனிதர்களுக்கும் சமயத் தலைவர்களுக்கும் இடையே அவ்வப்போது முரண்பாடுகள் உருவாவது இயல்பான ஒன்று. இதுவே வளர்ச்சி பெற்று, புதிய சமயப்பிரிவுகள் உருவாகக் காரணமாக அமைவதும் உண்டு. இத்தகைய சூழல்களில் தம் அமைப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக, சில நடவடிக்கைகளை சமயத்தலைவர்கள் மேற்கொள்வர். இதுபோன்ற ஒரு நெருடிக்கடியை, போப்பாண்டவரின் உலகத்தலைமையை ஏற்றுக்கொண்டிருந்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை மூன்றாவது நூற்றாண்டு தொடங்கி பதினெட்டாவது நூற்றாண்டு வரையிலான காலங்களில் அய்ரோப்பாவில் எதிர்கொள்ள நேரிட்டது.

குறிப்பாக, மார்ட்டின் லூதரின் சமய சீர்திருத்த இயக்கமும் (Reformation Movement) கலை இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் புதிய சிந்தனைகள் உருவாகிப் பரவிய மறுமலர்ச்சி இயக்கக்காலம் (Renaissance Period), புத்தொளிக் காலம் (Age of Enlightment) என்பனவும், போப்பின் தலைமையை ஏற்றுச் செயல்பட்டு வந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு சவாலாய் அமைந்தன.

பல நூற்றாண்டுகளாக ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை அறிவுறுத்திப் பரப்பி வந்த சிந்தனை களுக்கு நம்பிக்கைகளுக்கு எதிரான போக்கு அதற்குள் உருவாகி வலுப்பெறத் தொடங்கியது. இதை எதிர் கொள்ள அது உருவாக்கிய ஓர் அமைப்பே “நம்பிக்கை புலனாய்வு மன்றம்” (Inquisition) ஆகும். ஒன்பதாம் கிரிகோரி என்ற போப் கி.பி. 232-இல் இவ் வமைப்பை நிறுவினார்.

கத்தோலிக்கத் திருச்சபை ஏற்றுக்கொண்டு கற்பிக்கும் கோட்பாடுகளுக்கு எதிராகக் கருத்துரைப் போரைத் தடுத்து நிறுத்தித் தண்டிக்கும் நோக்கி லேயே இது நிறுவப்பட்டது. இதன் செயல்பாடுகள் பின்வரும் கூறுகளைக் கொண்டிருந்தன. 1) இரகசியப் புலனாய்வு 2) ஆட்காட்டிகளை பயன்படுத்துதல் (Informer) (3) பொய்சாட்சிகளை உருவாக்கல் 4) சித்திரவதை செய்தல் 5) இம்மன்றம் தண்டிக்கும் மனிதனின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் 6) தண்டனைக்கு ஆளானவரின் உறவினரையும் பரம்பரையினரையும் கூடத் தண்டித்தல்.

இவ்விசாரணை முறையில் இருந்து பெண்களும், சிறார்களும் கூடத் தப்பவில்லை. நான்காம் இன்னசெண்ட் என்ற போப் கி.பி.1252-இல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சித்திரவதைகள் நிகழ்த்த அனுமதி வழங்கினார். தண்டனை வழங்கும் உரிமையை பெற்றிருந்த இவ்வமைப்பு பின்வரும் தண்டனைகளை வழங்கியது.

- உடலை வருத்தும்படியான ஆடை அணியச் செய்தல்
- பிரம்பு அல்லது சவுக்கால் அடித்தல்
- கடுமையான தண்டம் விதித்தல்
- சிறையில் அடைத்தல்
- வைக்கோல் போரில் வைத்து உயிருடன் எரித்தல்.


### அமைப்பு

இவ்வமைப்பின் செயல்பாடுகளுக்கு எதிரான சிந்தனைப்போக்கு பொதுமக்களிடம் உருவாகாதவாறு இதன் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். நம்பிக்கைப் புலனாய்வு மன்றத்தின் உயர் விசாரணை அதிகாரியாக கடவுளை அறிவித்திருந்தனர். எனவே இம்மன்றத்தை எதிர்ப்பது என்பது கட்புலனாகாத தலைவராக விளங்கும் கடவுளை எதிர்ப்பதற்கு இணையானது என்ற கருத்து மக்கள் உள்ளத்தில் பதியவைக்கப் பட்டது.

கடவுளின் சார்பில் கத்தோலிக்கத் திருச்சபையை நிர்வகிப்பவர் என்று அறியப்பட்ட போப் துணை அதிகாரியாக விளங்கினார். இதன் அடிப்படையில் நம்பிக்கைப் புலனாய்வு மன்றத்திற்கு எதிரான கருத்துநிலை என்பது கடவுளின் சார்பில் கத்தோலிக்கத் திருச்சபையின் கட்புலனாகும் தலைவராக விளங்கும் போப்பிற்கு எதிரானது என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது.

சாமிநாதர் சபை என்றழைக்கப்படும் டாமினிகன் (Dominicians) துறவற சபையைச் சார்ந்தவர்கள் நடை முறையில் விசாரணை நடத்துபவர்களாக விளங்கினர். அவ்வப்பகுதியில் உள்ள ஆயர்களின் அனுமதியைப் பெற்று நம்பிக்கைப் புலனாய்வு மன்றம் செயல் பட்டது.

சமய விதிமுறைகளை மீறுவோருக்கு எதிரான அமைப்பு என்று இது அறிவிக்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில், நிலவுடைமைக்கு எதிரான, மதச் சார்பற்ற மக்கள் இயக்கத்தை ஒடுக்குவதற்கு இவ்வமைப்பு பயன்படுத்தப்பட்டது. மறுமலர்ச்சி இயக்கக் காலமான 16, 17-ஆவது நூற்றாண்டுகளில் மனிதநேயவாதிகள், போப்பின் தலைமையை ஏற்றுக்கொள்ளாதவர்கள், பண்பாடு, அறிவியல் துறை சார்ந்த ஆளுமைகள் ஆகியோருக்கு எதிரான தண்டனை நடவடிக்கைகளை இவ்வமைப்பு மேற்



கொண்டது. புத்தொளிக்காலச் சிந்தனையாளர்கள், பிரெஞ்சுப்புரட்சி ஆதரவாளர்கள் ஆகியோருக்கு எதிராகவும் இவ்வமைப்பு செயல்பட்டது.

நம்பிக்கை புலனாய்வு மன்றம் குறித்த இச் சுருக்கமான செய்திகளின் பின்புலத்திலேயே 'பாலாடைக்கட்டியும் புழுக்களும்' என்ற நூலை அறிந்து கொள்வது பொருத்தமாய் இருக்கும்.

**நூலின் மையச்செய்தி**


இத்தாலி நாட்டின் மலைப்பகுதி ஒன்றில் உள்ள மாந்தேவில் என்ற சிறு நகரத்தில் பிறந்துவளர்ந்தவர் டொமினிசியோ சாகன் தலா. இவர் மெனுசியோ என்ற சுருக்கமான பெயரில் அழைக்கப்பட்டார். கி.பி.1532-இல் பிறந்த இவர் அரவை ஆலை நடத்தியும், தச்சுவேலை கட்டிட வேலைப்பணிகளை மேற்கொண்டும் வாழ்ந்துள்ளார். இவ்வேலைகளில் பெரும்பாலும் அரவை ஆலை வேலையையே இவர் பெரிதும் மேற்கொண்டிருந்தார். இதனால் அரவை ஆலைப் பணியாளர் உடையிலேயே காட்சியளித் துள்ளார். திருமணமான இவர் பதினோரு குழந்தை களின் தந்தையாவார். இக்குழந்தைகளில் நான்கு குழந்தைகள் இறந்துபோயின. இரண்டு அரவை ஆலைகளை வாடகைக்கு எடுத்தும் இரண்டு விளை நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தும் பொருளாதார நிலையில் ஏழையாகவே வாழ்ந்துள்ளார்.

1581-ஆவது ஆண்டில் மாந்தேவில் என்ற கிராமத்தின் மேயராகப் பணியாற்றியுள்ளார். அத்துடன் இதே கிராமத்தின் தேவாலய நிர்வாகியாகவும் இருந்ததாகத் தெரியவருகிறது. எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தமையே இப்பதவியை அவர் பெற துணை புரிந்திருக்க வேண்டும். ஓரளவுக்கு இலத்தீன் மொழி அறிவும் அவருக்கு இருந்திருக்க வேண்டும் என்பது நூலாசிரியரின் கருத்தாகும்.

இத்தகைய வாழ்க்கை வாழ்ந்துவந்த மெனுசியோ 1583 செப்டம்பர் 28-வது நாளன்று சமயவிரோத குற்றச்சாட்டுக்கு ஆளானார். இக்குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் மீது நடந்த வழக்கு, அதில் அவருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு, தமக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிரான அவரது மேல்முறையீடு, அதிலும் அவரது தண்டனை உறுதி செய்யப்பட்டமை என்பனவற்றை இந்நூல் விரிவாகக் கூறிச் செல்கிறது.

**நூலாசிரியர்**

இந்நூலாசிரியரான கார்லோ கின்ஸ்பர்க் 1939-ஆவது ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆவது நாளில் பிறந்தவர். இவரது பெற்றோர்கள் அறிவாற்றல் மிக்கவர்கள். இவரது தாய் நதாலியா கின்ஸ்பர்க்



நாவல் ஆசிரியர். தந்தை லியோனா கின்ஸ்பர்க், சொற்பிறப்பியல், வரலாறு, இலக்கியம் ஆகிய துறைகளில் நூல் எழுதியுள்ளார். மார்க் பிளாங் என்ற பிரான்ஸ் நாட்டு வரலாற்றறிஞரின் தாக்கம் கின்ஸ்பர்கிடம் உண்டு. இத்தாலியின் சிறந்த வரலாற்றாசிரியர்கள் வரிசையில் இவர் இடம் பெற்றுள்ளார். கின்ஸ்பர்க், இத்தாலி நாட்டின் போல்கோனா, அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா, பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றி யுள்ளார். 2010-ஆவது ஆண்டில் உலக அளவிலான பால்சன் விருதைப் பெற்றவர். 'இரவுச் சண்டைகள்: பதினாறு, பதினோராவது நூற்றாண்டுகளில் பில்லி சூன்யமும், வேளாண் வழிபாடுகளும்', 'புராணங்களும் வரலாற்று முறைகளும்' ஆகிய நூல்களின் ஆசிரியர்.

தன் ஆய்வின் பொருட்டு இத்தாலி நாட்டிலுள்ள யுடின் நகரிலுள்ள 'ஆஞ்சிலோ தெல்லா பூரியோ ஆர்சியூ கோவில்' என்ற ஆவணக்காப்பகத்தில் 1962-ஆவது ஆண்டில் ஆவணங்களைத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் பார்வையில் பட்ட ஓர் ஆவணமாக மேலே குறிப்பிட்ட மெனுசியோ மீதான வழக்கு ஆவணம் அமைந்தது. இந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதியதே இந்நூல்.

**நூல் கூறும் செய்தி**

மேலே குறிப்பிட்ட மெனுசியோ கத்தோலிக்கக் கிறித்தவர் என்றாலும் அவர் தமக்கென சில சுயேச்சையான சிந்தனைகளைக் கொண்டு வாழ்ந்தார்.

குறிப்பாக பிரபஞ்சம் (Cosmos) குறித்து கத்தோலிக்கத் திருச்சபை வெளிப்படுத்தி வந்த கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார்.

இதுவே நம்பிக்கைப் புலனாய்வு மன்றத்தின் பார்வைக்குள் அவரைக் கொண்டு வந்தது. 1583 செப்டம்பர் 28-வது நாளன்று கத்தோலிக்கத் திருச்சபையின் விசாரணைக்கு வரும்படி அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. கிறிஸ்துவுக்கு எதிராக புனிதமற்ற சொற்களைப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. தன் மதவிரோதக் கருத்துகளை அவர் போதித்ததாகவும், மதகுருவால் குற்றம் சாட்டப்பட்டார். இதை மறைமாவட்ட தலைமைக் குருவிடம் (விகார் ஜெனரல்) அவர் தெரிவித்தார். யாருடனாவது மதவிரோதக் கருத்து களை விவாதிப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்த தாகவும் மதகுருவிடம் கூட இவ்வாறு விவாதித்த தாகவும் குறிப்பிட்டனர். இதை உறுதிப்படுத்தும் வகையிலான சாட்சியங்களும் முன்வைக்கப்பட்டன. சமயக்கருத்துகள் தொடர்பாக மெனுசியோ தன்னுடன் விவாதித்தபோது, "நான் செருப்புத் தைப்பவன், நீ அரவை ஆலைக்காரன் கற்றறிந்தவன் அல்லன். நாம் இருவரும் விவாதிப்பதால் என்ன பயன்?" என்று கூறியதாக செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர் சாட்சியமளித்தார்.

சமயம் குறித்த அறிவு சராசரி மனிதனுக்கு உரியதல்ல. மதகுருக்களுக்கே உரியது என்ற சிந்தனைப்போக்கின் வெளிப்பாடாகவே இந்தச் சாட்சியம் அமைந்தது. கத்தோலிக்கத் திருச் சபைக்கு எதிரான சிந்தனைப்போக்குடையவராக மெனுசியோவைக் கருதியதாய் பலர் கருத்துத் தெரிவித்தனர். அவர் போதித்த கருத்துகளாக தலைமைக் குருவிடம் அவர்கள் கூறிய செய்திகள் நம்பிக்கைப் புலனாய்வு மன்றத்தின் விசாரணை ஆவணங்களில் பதிவாகியுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

> "காற்று நமது கடவுள். இந்த பூமி நமது தாய். யாரைக் கடவுளென்று நாம் கற்பனை செய் கிறோம். அவரை மனிதர்கள் எப்படிக் கற்பனை செய்த போதிலும் அவர் சிறிதளவு மூச்சுக்காற்று என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நாம் கண்ணால் காண்பதெல்லாம் கடவுள்தான். நாமும் கடவுள்தான். ஆகாயம், பூமி, கடல், காற்று, சொர்க்கம், நரகம் என அனைத்துமே கடவுள்தான். யேசு கிருத்து கன்னிமேரியிடம் பிறந்ததாக நம்புகிறீர்கள்! அவரைப் பெற்று விட்டு கன்னியாக அவர் இருக்கமுடியுமா? யேசு வானவர் நல்ல மனிதராகவோ நல்ல மனிதர் ஒருவரின் மகனாகவோதான் இருக்க முடியும். கத்தோலிக்கத் திருச்சபையால் தடைசெய்யப் பட்ட புத்தகங்கள் மெனுசியோவிடம் இருந்தன. குறிப்பாக வட்டார மொழியில் அமைந்த விவிலியம் அவரிடம் இருந்தது. (இலத்தீன் மொழி விவிலியத்தையே கத்தோலிக்கத் திருச்சபை பயன்படுத்த அனுமதித்திருந்தது).

தமக்கு எதிராகக் கூறப்பட்ட இக்குற்றச்சாட்டுகள் ஆபத்தை ஏற்படுத்தும் தன்மையன என்பதனை மெனுசியோ உணர்ந்து கொண்டார். இதை எதிர் கொள்ளும் வழிமுறை குறித்து அவர் சிந்திக்கலானார். அவரது குழந்தைப் பருவ நண்பரும் தேவாலயம் ஒன்றில் பங்குக் குருவாகப் பணியாற்றி வருபவருமான ஒருவரை அணுகி தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்துக் கூறினார்.

தாமாகவே முன்வந்து திருச்சபை அலுவலகத்திற்கு செல்லும்படி அவர் கூறினார். அல்லது அவர்கள் அறிய விரும்பும் செய்திகளைக் கூறுவதுடன் அதிகமாகப் பேசி விவாதிக்க வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

அவரைச் சந்தித்த முன்னாள் வழக்கறிஞர் ஒருவர், தாமாக முன்வந்து நீதிபதிகளைச் சந்தித்து தம் குற்றத்தை ஒத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தினார். அத்துடன் தாம் கூறியவற்றை ஒருபோதும் தாம் நம்பியதில்லை என்று வெளிப்படுத்தும்படியும் கூறினார்.

இதன்படி தமக்கு வந்த அழைப்பாணைகளை ஏற்று சமயநீதிமன்றத்திற்கு மெனுசியோ சென்றார். அதற்கு மறுநாள் நம்பிக்கைப் புலனாய்வு மன்றத்தின் நீதிபதியாகச் செயல்பட்ட பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த குருவானவர், மெனுசியோவைக் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தார். அதன்படி 1584 பிப்ரவரி ஏழாம் நாளன்று மெனுசியோ கைது செய்யப்பட்டு விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்டார்.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மேரி மாதாவின் கன்னிமை குறித்து தனக்கு சில அய்யப்பாடுகள் இருந்ததாகவும், இது குறித்து தனிமனிதர்கள் சிலரிடம் தன் கருத்தை வெளிப் படுத்தியதாகவும் மெனுசியா ஒத்துக்கொண்டார். அதே நேரத்தில் தான் கூறுவதையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவில்லை என்றும், உண்மையான வழி எதுவென்று தனக்கு அறிவுத்தும்படி வேண்டியதாகவும் கூறினார். கெட்ட ஆவியானது தன்னை இவ்வாறு நம்பச் செய்ததுடன் மற்றவர்களிடம் கூறும்படிச் செய்ததாகவும் குறிப்பிட்டார்.

பாலில் இருந்து உருவாக்கப்படும் பாலாடைக் கட்டியில் புழுக்கள் உருவாவது போல் நிலம், காற்று,



தண்ணீர், நெருப்பு என்பன குழப்பமான முறையில் கலந்துள்ளன என்றும் இவற்றில் இருந்தே தேவதைகளும் கடவுளும் உருவாகியுள்ளதாகத் தாம் கருதியதாகவும் குறிப்பிட்டார். இப்படி உருவான கடவுளே, லூசிபர், மிக்கேல், காபிரியல், ரபேல் ஆகிய நான்கு தளபதிகளைப் படைத்துக்கொண்டார். பின்னர் ஆதாம், ஏவாள் என்ற இருவரையும், அதிக எண்ணிக்கையிலான மக்கள் திரளையும் படைத்தார். கடவுளின் கட்டளைகளுக்கு இவர்கள் கீழ்ப்படி யாமையால் அவர் தனது குமாரனை அனுப்பினார். அவரைத்தான் யூதர்கள் சிலுவையில் அறைந்தனர். இவர் புனித ஜோசப்புக்கும், கன்னிமேரிக்கும் பிறந்தவர்.

★★★

இவ்விசாரணையின் போது, சாட்சியமளித்த மக்கள் மெனுசியோவின் கூற்றாகக் கூறிய செய்தி களின் அடிப்படையில், அவர் மனநிலை பிறழ்ந்த வராக இருக்கலாமோ என்ற அய்யம் எழுப்பப் பட்டது. பின்னர் தெளிவான மன நிலையிலேயே மெனுசியோ பேசியுள்ளார் என்ற முடிவுக்கு மறை மாவட்டத் தலைமைக்குரு வந்தார். இதன் அடிப் படையில் அவர் மீதான விசாரணை தொடர்ந்தது.

இவ்வாறு, பிரபஞ்சம் கடவுள் தொடர்பாக மெனுசியோ தெரிவித்த கருத்துகள் அவருக்கு எதிரான மனநிலையை கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகார வர்க்கத்திடம் உருவாக்கின. ஆனால் இந் நூலாசிரியர் இந்த எல்லைக்குள் மட்டும் நின்று இந் நூலை உருவாக்கி விடவில்லை. இதுவே இந்நூலின் சிறப்புக் கூறு எனலாம். இந்த இடத்தில் நம்பிக்கைப் புலனாய்வு மன்ற ஆவணங்கள் அடங்கிய ஆவணக் காப்பகத்தை ஆய்வாளர்கள் பயன்படுத்துவது தொடர்பாக அவர் மேற்கொண்ட முயற்சியைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இரண்டாவது ஜான்பால் என்பவர் போப் ஆக இருந்த போது வத்திகன் நகரில் இருந்த நம்பிக்கை புலனாய்வு மன்ற ஆவணக் காப்பகத்தை பயன்படுத்த ஆய்வாளர்களை அனுமதிக்கும்படி இந்நூலாசிரியரான கார்லோ கின்ஸ்பர்க் வேண்டுகோள் விடுத்தார். இதன் அடிப்படையில் 1979இல் ஆய்வாளர்கள் சிலருக்கு அனுமதி கிடைத்தது. இதன் அடுத்த கட்டமாக 1991 ஆவது ஆண்டில் இவ் ஆவணக்காப்பகத்தைப் பயன்

படுத்தும் உரிமை வரலாற்றாய்வாளர்களுக்கு வழங்கப்பட்டது. சமயநம்பிக்கைக்கு எதிரான செயல் பாடுகளைக் குறித்த விசாரணை என்ற எல்லையைக் கடந்து, குடியானவருக்கும் நிலவுடைமை ஆதிக்கத்தைக் கொண்டிருந்த கத்தோலிக்கத் திருச்சபைக்கும் எதிரான கருத்து முரண்பாட்டை வெளிப்படுத்த இவ் ஆவணங்கள் உதவின.

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக்கும் சராசரி, குடியானவர்களுக்கும் இடையிலான பண் பாட்டு உறவையும், திருச்சபையின் பொருளாதார மேலாண்மையையும் மெனுசியோ மீதான வழக்கை முன் வைத்து நூலாசிரியர் வெளிப்படுத்துகிறார்.

நுண் வரலாறு என்ற வரலாற்றுப் பிரிவு சார்ந்ததாக இந்நூலைக் கருதுவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணம்.

பிரபஞ்சம் கடவுளர் தொடர்பான கருத்துகளை அடுத்து மெனுசியோ வெளிப்படுத்திய கருத்து களில் சில இந்நூலில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டைக் குறிப்பிடலாம்.

- நிலங்கள் எல்லாமே பாதிரியார்களுக்கும் திருச்சபையினருக்கும் உரியதாக இருக்கிறது. அவர்கள் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். குத்தகைக்கு எடுத்து குடியானவர்கள் பயிரிடும் நிலங்கள் தேவாலயத்திற்கோ ஆயர், கார்டினலுக்கோ உரிமையானதாய் உள்ளன.
- திருச்சபையின் ஆட்சி மொழியாக விளங்கும் இலத்தீன் மொழியானது ஏழைகளை ஏமாற்றப் பயன்படுகிறது. வழக்குகளின் போது என்ன விவாதிக்கப்படுகிறது என் பதை இலத்தீன் மொழி அறியாத குடியான வனால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவன் ஏமாற்றப்படுகிறான். நான்கு வார்த் தைகள் கூறுவதற்குக் கூட வழக்கறிஞரின் உதவி தேவைப்படுகிறது.

* * *

கடவுளை நேசிப்பதை விட தன் அண்டை வீட்டுக்காரனை நேசிப்பது மேலானது என்ற கருத்தை விசாரணையின் போது மெனுசியோ வெளிப்படுத்தினார். இக்கருத்து விவிலியத்தில் (மத்தேயூ 25:31-46) பின்வருமாறு இடம் பெற்றுள்ளது:

வானதூதர் அனைவரும் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும் போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத் தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப் பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவது போல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார்.

பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன். என் தாகத்தை தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன். என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன். என்னை கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன்; என்னைத் தேடி வந்தீர்கள் என்பார்.

அதற்கு நேர்மையாளர்கள் ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம். அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடி வந்தோம்? என்று கேட்பார்கள்.

அதற்கு அரசர், ‘மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்’. எனப் பதிலளிப்பார்.

பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து “சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் (அலகை: பேய்) அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற, என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை: தாகமாயிருந்தேன், என்; தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆடை யின்றி இருந்தேன், நீங்கள் ஆடை அளிக்கவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை” என்பார்.

அதற்கு அவர்கள், ‘ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந் தோம்?’ எனக் கேட்பார்கள்.

அப்பொழுது அவர் மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை

என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை, அடையவும் நேர்மையாளர்கள் நிலைவாழ்வு பெறவும் செல்வார்கள்.

இவ்விவிலியத் தொடர் HISTORIA DEL GIUDICIO என்ற நூலில் இடம் பெற்றிருந்ததை விசாரணையின் போது மெர்சியோ முன் வைத்ததை நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இது மெனுசியோவின் சமூகக் கண்ணோட்டத்தை நாம் அறியச் செய்கிறது.

*12 ஜூலை 1599*இல் நிகழ்ந்த இரண்டாவது விசாரணையின் போது மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றுவது தொடர்பாக, தாம் கூறிய செய்தியொன்றை மெனுசியோ குறிப்பிட்டுள்ளார்:

*கடவுளாகிய தந்தையின் அன்பிற்கு உரியவர்களாக கிறித்தவர்கள், துருக்கியர், யூதர் எனப் பல குழந்தைகள் உள்ளனர். நான் கிறித்தவனாகப் பிறந்தமையால் கிறித்தவனாக வாழ்கிறேன். துருக்கியனாகப் பிறந்திருந்தால் துருக்கியனாக வாழ்ந்திருப்பேன். ஒவ்வொரு மனிதனும் தான் பின்பற்றும் சமயமே சரியானது என்று நம்புகிறான் ஆனால் எது சரியானது என்பது அவனுக்குத் தெரிவதில்லை. தன்னுடைய தாத்தா, அப்பா உறவினர் அனைவரும் கிறித்தவர் என்பதால் கிறித்தவனாக இருக்க விரும்புகிறான்.*

கிறித்தவமே உயர்வானது என்ற கருத்தின் அழுத்தம் மெனுசியோவிடம் இடம் பெறவில்லை என்பதை இக்கூற்று வெளிப்படுத்தியுள்ளது. வேறு ஒரு கேள்விக்கு விடையளிக்கும் போது கிறிஸ்து என்பவர் ஒரு மனிதர்தான் என்று அவர் கூறியதும் அவருக்கு எதிராக அமைந்தது.

உடலை வருத்தும் தண்டனைகளை வழங்கி அவரது சிந்தனையையொத்த சிந்தனையுடையவர்களின் பெயர்களைக் கூறும்படி கட்டாயப்படுத்தினர். அவ்வாறு கூறினால் அத்தண்டனையில் இருந்து விடுவிப்பதாகவும் கூறினார். ஆனால் மெனுசியோ யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை.

மெனுசியோவைப் போன்ற சிந்தனைப் போக்குடைய பிகினியோ என்பவரைப் பற்றிய குறிப்பும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இருவரும் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் இடைவெளியில் வாழ்ந்தவர்கள். ஒருவரையொருவர் சந்தித்ததும் கிடையாது.

நரகம், உத்தரிக்கும்நிலை* (Purgatory) என்பன உண்மையில் கிடையாது. பணம் ஈட்டுவதற்காகப் பாதிரியார்களும் துறவிகளும் கண்டுபிடித்தவை என்பது பிகினியோவின் கருத்தாகும்.

மெனுசியோவைப் போன்று எதிர்க்குரல் எழுப்புவோர் இத்தாலியில் வாழ்ந்துள்ளதை இச் செய்தியால் அறிய முடிகிறது.

நம்பிக்கைப் புலனாய்வு மன்ற ஆவணங்களின் துணையுடன் பதினாறாம் நூற்றாண்டு இத்தாலியில் சமயத்தின் பெயரால் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளை எடுத்துரைக்கும் இந்நூல், *1601* ஜூலை ஆறாம் நாளன்று மரணதண்டனைக்கு மெனுசியோ ஆட்படுவதுடன் முடிவடைகிறது.

மெனுசியோ என்ற வரலாற்றுப் பாத்திரத்தை மையமாகக் கொண்டெழுதப்பட்ட இந்நூல் அவரது வரலாறாக மட்டும் அமையவில்லை. சமய நம்பிக்கையைப் பாதுகாத்தல் என்ற பெயரால் நிகழ்ந்த, சிதைத்த மனித உரிமைகளையும், மனித மாண்புகளையும் மீறிய செயல்களின் ஆவணப் பதிவாகவும் அமைந்துள்ளது.

**துணை நின்ற நூல்கள் - கட்டுரைகள்**

1. A Dictionary for Believers and Non-believers.
2. Geoffrey Parrinder (2007) A Concise Encyclopedia of Christianity.
3. Mircea Eliade (1987) The Encyclopedia of Religion,Volume 7.
4. wikipedia

*சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையில் உள்ளதாக நம்பப்படும் இடம்.

# திருத்தம்

பிப்ரவரி மாத 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' இதழில் பிரசுரமான 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரசுரமான இந்தியாவைச் சுற்றிய சே.ப. நரசிம்மலு நாயுடுவின் பயண நூல்' என்ற கட்டுரையில் 1885 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 1985 என்றும், 1886 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 1986 என்றும் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறேன்

**- ந.முருகேசபாண்டியன்**




# மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ‘தேசிய அறிவியல் தினம்’

இந்த ஆண்டின் அறிவியல் தினம் 28.02.2019 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு சென்னிமலை எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் பொறியியல் கல்லூரியிலுள்ள சுத்தானந்தன் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநிலத்தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தலைமையேற்றார்.

சேலம் – மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியரும் பெங்களூரு ஜவகர்லால் நேரு ஆய்வு மையத்தின் POST - DOCTORAL FELLOWவுமான முனைவர் D.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.

எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் பொறியியல் கல்லூரியின் தாளாளர் வசந்தா சுத்தானந்தன், ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பொருளாதாரத் துறைத் தலைவர் முனைவர் என்.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் தொடக்கத்தில் கல்லூரி முதல்வர் முனைவர் பி.செங்குட்டுவன் வரவேற்புரையாற்றினார். நிறைவாக மக்கள் சிந்தனைப் பேரவையின் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி.சிவராமன் நன்றி கூறினார்.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




## வால்கா முதல் கங்கை வரை

விலை ₹ 350/-

**ராகுல சாங்கிருத்தியாயன்**

கி.மு 6000-2500 வரையிலான காலம் தொடங்கி 20ஆம் நூற்றாண்டு வரையிலான சமுதாயங்களின் வரலாறும் வளர்ச்சிப் படிநிலைகளும்கதை வடிவில் 20 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ள நூல்.

## வெகுளி




தமிழில் : ச. வின்சென்ட்


பதிப்பாசிரியர் : சா.ஜெயராஜ்

விலை ₹ 750/-

**ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி**

உலகத்தைப் புரிந்துகொள்ள முயலாமல் தன்போக்கில் ஆத்ம தரிசனத்தோடு ஆழமாக அன்பு செலுத்தவும், முற்றாக நேசிக்கவும் விரும்பும் அப்பழுக்கற்ற ஒரு மனிதனை இவ்வுலகம் எவ்விதமாகவெல்லாம் கேலி செய்கிறது என்பதோடு அவற்றைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து பயணிக்கும் பழிபாவமற்ற ஒரு மனிதனின் கதையே இந்நாவல்.

## மஹத்




முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்


தமிழில் : கமலாலயன்

விலை ₹ 550/-

**ஆனந்த் டெல்டும்ப்டே**

இந்நூலில் இந்திய சாதி அமைப்பு மற்றும் தீண்டாமை குறித்தும், இதற்கு எதிராகக் கடந்த காலத்தில் நிகழ்ந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் குறித்தும் பேசப்படுகிறது.

கடந்த காலத்தில் நிகழ்ந்த போராட்டம் ஒன்றின் பதிவாக மட்டுமின்றி தற்போதைய தலித் இயக்கங்களுடன் இணைத்தும் ஆராய்கிறது.




## காலனியத் தொடக்கக் காலம்


விலை ₹ 195/-

(கி.பி. 1500-1800) **எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**

இதுவரை தமிழில் எடுத்துக் கூறப்படாத தமிழகத்தின் காலனியத் தொடக்கக் காலம் பற்றி மிக விரிவாக, மூல ஆதாரங்கள் அடிப்படையில் இந்நூல் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

# சொர்க்கத்துக்குப் போவதற்கு

## ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது பாதைகள்



நோபல் பரிசு பெற்ற
சீன எழுத்தாளர்
மோ யானுடன்
ஓர் உரையாடல்

**மோ யான்**

அறிமுகமும் மொழிபெயர்ப்பும்

**யமுனா ராஜேந்திரன்**

***சீ***ன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும், ஷான்டாங்க் பிரதேசக் கட்சிச் செயலாளரும், சீன அரச ஆதரவாளருமான நாவலாசிரியர் மோ யான் இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றிருக்கிறார். சீனாவுக்கான தேசிய கௌரவமாக சீன அரசு இதனை இப்போது கொண்டாடுகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் சீனப் பிரதமரும் தனிப்பட்ட முறையில் மோ யானை வாழ்த்தியிருக்கிறார்கள். சீன அரசின் அதிகாரபூர்வ நாளிதழான மக்கள் தினசரி இந்தப் பரிசை சீன இலக்கியத்திற்கான முதல் நோபல் பரிசு எனக் குறிப்பிட்டிருக்கிறது. நீண்ட காலம் தாமதித்து வந்திருக்கிற பரிசு இது எனவும் மக்கள் தினசரி சொல்லியிருக்கிறது. 1956 ஆம் ஆண்டு ஷான்டாங்க் பிரதேசத்தில் விவசாயிகளின் மகனாகப் பிறந்த மோ யான் கலாச்சாரப் புரட்சியில் ஈடுபட்டவர். பின்னாளில் மக்கள் விடுதலை ராணுவத்தில் பணியாற்றியவர். மக்கள் விடுதலை ராணுவத்திற்கு இலக்கியம் பயிற்றுவித்தவர். எண்பதுகளில் முறைப்படியாக பல்கலைக்கழகத்தில் சீன இலக்கியம் பயின்றவர்.

சீனச் சிறுகதையாசிரியரான லூசுனது சமூக யதார்த்தமும் இலத்தீனமெரிக்க நாவலாசிரியர் கார்சியா மார்க்வசினது மாந்திரீக யதார்த்தமும் தனது இலக்கிய ஆதர்சங்கள் எனச் சொல்கிறார் மோ யான்.

ஷாங் இமு சீனாவின் புகழ்மிக்க திரைப்பட இயக்குனர். மோ யானின் நாவலான சிவப்பு மது ஷாங் இமுவினால் திரைப்படமாக்கப்பட்டுள்ளது. மோ யானைப் போலவே ஷாங் இமுவும் இன்றைய சீன அரச அதிகாரத்திற்கு அனுசரனையாளராக ஆகிப் போனவர். ஷாங் இமுவின் தந்தையார் சீன உள் நாட்டுப் போரில் ஷியாங்கே ஷேக்கின் தேசியப் புரட்சி ராணுவத்தில் அதிகாரியாக இருந்தவர். இதனது விளைவாக கலாச்சாரப் புரட்சி கால அனுபவம் என்பது ஷாங் இமுவுக்கு வலி நிறைந்த தாகவே இருந்தது. டு லிவ் போன்ற ஷாங் இமுவின் ஆரம்பகாலப் படங்களில் கலாச்சாரப் புரட்சியின் அனர்த்தங்கள் குறித்து அவர் பேசினார். பிற்பாடு ஹீரோ போன்ற படங்களில் மகோன்னத சீன தேசத்தின் ஒற்றுமை குறித்துப் பேசுபவராக அவர் ஆகினார். இன்றைய நாளில் மோ யான், ஷாங் இமு போன்ற இரு கலைஞர்களுமே இன்றைய சீனாவின் பெருமிதத்தைக் கொண்டாடும் ஆளுமைகளாகவே இருக்கிறார்கள்.

மோ யானின் சிவப்பு மது நாவல் ஐந்து அங்கங்கனால் ஆன, நூறாண்டுகள் விரிந்த, மூன்று தலைமுறைகளின் கதை சொல்லும் நாவல். நாவலின் முதல் இரு அங்கங்களை மட்டுமே கொண்டதாக ஷாங் இமுவின் திரைப்படம் உருவாகியிருக்கிறது. மோ யானின் சிவப்பு மது நாவல் எண்பதுகளில் வெளியானதையடுத்து ஷாங் இமு 1987 ஆம் ஆண்டு சிவப்பு மது நாவலுக்குத் திரைவடிவம் (Red Sorghum : 1987) தருகிறார். சிவப்பு மது நாவலே உலக அளவில் மோ யானின் பெயரை நிலைநாட்டியது. அதுபோலவே சிவப்பு மது எனும் தனது முதல் திரைப்படத்தின் மூலமே ஷாங் இமுவும் உலக சீனாவினுள் பிரவேசித்தார். சிவப்பு மது நாவலின் காலம் 1937 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான ஜப்பானிய ஆக்கிரமிப்பின் கீழான சீனக் காலம். சோளக் கதிர்களால் மூடுண்ட குவாங்க்சா பிரதேசத்தில் கதை நடக்கிறது. மோ யானின் கதை சொல்லல்முறை நாட்டுப்புறக் கதைப் பண்புகளினதும் மாயா யதார்த்தத்தினதும் கலவை யாக இருக்கிறது என நோபல் பரிசுக்குழு சொல் வதனை அவருடைய சிவப்பு மது கதைப்போக்கி லேயே நாம் காணமுடியும்.

சிவப்பு மது கதை துவங்கும்போது ஆண்கள் குழவினர் முரசங்களும் குழல்களும் அதிர இசை



யெழுப்பியபடி மணப்பெண்ணின் அலங்கரிக்கப் பட்ட சப்பரத்தைச் சுமந்து புழுதியெழுப்பியபடி ஒரு கிராமத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறார்கள். சப்பரத்தின் உள்ளிருக்கும் மணப்பெண்ணை மணமகன் வீடு கொண்டுசெல்லும்வரை குலுக்கிக் கொண்டே செல்லவேண்டும் என்பது சீன கிராமிய மரபு. சப்பரத்தை மணப்பெண்ணுக்குப் பீதியூட்டும்படி குலுக்கும் திறந்த மேனியுடனான ஆண்கள் மணப் பெண்ணை நையாண்டி செய்வதிலும் ஈடுபடுகிறார்கள். காரணம் வறிய இளம் பெண்ணான அவள் ஒரு கோவேறு கழுதைக்கான ஈடாக அவளது தந்தையால் மணமேடைக்கு அனுப்பப்படுகிறவள். மணமகன் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு முதியவன். அவனுக்கு மதுச்சாலையொன்றும் நிலங்களும் சொத்தாக இருக்கிறது. விரைவிலேயே மரணமுறப் போகும் தொழுநொய் கொண்ட முதிய நிலவுடமை யானின் சொத்துக்களின் வாரிசாகத் தனது மகள் ஆவாள் என்பது அவளது தந்தையின் எண்ணம். தவிர்க்கவியலாத சூழலில் அந்த இளம்பெண் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறாள் என்பது நமக்கு முதல் காட்சியிலேயே தெரிகிறது.

சப்பரம் குலுக்கப்படுகிற ஒவ்வொரு முறையும் திரை அசைகிறபோது தன்னைச் சுமந்து செல்லும், சதா தன்னை நையாண்டி செய்யும் இளைஞனொரு வனின் தினவெடுத்த வியர்வை துளிர்க்கும் தசை திரண்ட தோள்களை மோகத்துடன் இளம்பெண் கள்ளமாகப் பார்த்துக்கொண்டே வருகிறாள். தன்னை அவள் கள்ளமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவன் அறிவான் என்பதையும் அந்த இளைஞன் அவளுக்கு உரக்கத் தெரியப்படுத்தவும் செய்கிறான். மோகத்தினால் விளையும் இயல்பான கள்ளமின்மையின் குதூகலம் கொப்பளிக்கும் காமம் இங்கு முரசும் குழலும் கலந்து காமமாக வழிகிறது.

கதாநாயகியாக நடித்திருப்பவர் நடிகை காங் லீ. இயக்குனர் ஷாங் இமுவின் பெரும்பாலமான படங்களின் கதாநாயகி மற்றும் நிஜ வாழ்வில் அவரது காதலி காங் லீ. ஷாங் இமு தொடர்ந்து இயக்கிய ஜூ டு, ஷாங்காய் டிரையாட், ரெய்ஸ் த ரெட் லான்டர்ன், டு லிவ் போன்ற படங்களில் பெண்மையின் அதிகாரத்தையும் பெண் உடலின் நெகிழ்வையும் காமத்தின் உக்கிரத்தையும் திரையில் நிகழ்த்திக் காட்டிய அதியற்புதமான நடிப்பாற்றலும் அழகும் படைத்தவர் காங் லீ. தனது பாலுறவு ஆற்றலின் கீழ் ஆண்களை மண்டியிடவைக்கும் பாத்திரங்களையே பெரும்பாலுமான ஷாங் இமுவின் படங்களில் காங் லீ ஏற்றார். அதே பாலுறவு ஆற்றலின் உக்கிரவடிவமாகவே சிவப்பு மது திரைப்படத்திலும் காங் லீ தோன்றுகிறார். சிவப்பு மது நடிகையாகக் காங் லீயின் முதல் திரைப்படம்.

இடையீடற்ற மீக நீண்ட காட்சிகளைக் கொண்ட திரைப்படமாகச் சிவப்பு மது இருக்கிறது. பத்து அல்லது பன்னிரண்டு காட்சிகளால் ஆன தொண்ணூறு நிமிடத் திரைப்படம் சிவப்பு மது. கிராமத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் சப்பர ஊர்வலம் ஒரு அடர்ந்த சோளக்காட்டைக் கடந்து தான் கிராமத்தை அடையமுடியும். சோளக்காட்டின் மத்தியில் வரும்போது துப்பாக்கி ஏந்திய முகமூடிக் கொள்ளையன் ஒருவனால் சப்பரக் குழு எதிர் கொள்ளப்படுகிறது. சப்பரத்தைச் சுமக்கும் கூலிகளிடம் அவர்களது இடுப்புப் பட்டிகளையும் பணத்தையும் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கும் முக மூடிக்காரன் சப்பரத்தின் திரையை விலக்கி வண்ண மயமான காலணியினால் மூடப்பட்ட இளம் பெண்ணின் பாதத்தை தனது ஐந்து விரல்களாலும் அழுத்திப் பிசைகிறான்.

சப்பரத்திலிருந்து வெளியேறி அவளை சோளக் காட்டுக்கு உள்ளே போகச் சொல்கிறான். அவளுடன் கலவி செய்வது அவன் திட்டம். மௌனமாகச் சப்பரத்திலிருந்து இறங்கும் இளம்பெண் தான் கள்ளநோட்டமிட்ட தினவேறிய தோள்களுக்குச் சொந்தக்காரனை வைத்த கண் வாங்காமல் பார்க் கிறாள். லேசாக கண்ஜாடை காட்டவும் செய்கிறாள். அவனுக்கு ஆவேசம் வந்துவிடத் தனது தோழர் களுடன் சேர்ந்து முகமூடிக் கொள்ளையனை மடக்கி அடித்து மிதித்துக் கொல்கிறான். கொள்ளையன் ஒரு போலி. அவனது துப்பாக்கியும் ஒரு போலித் துப்பாக்கி. மணப்பெண் இப்போது தொழுநோய் முதியவனின் மதுச்சாலைக்கு வந்துசேர்ந்துவிட்டாள். படம் துவங்கி இந்த இருபது நிமிடங்கள் வரையிலு மானது ஒரே ஒரு காட்சி.

அடுத்த காட்சியில் தொழுநோய்க்காரனிடம் இருக்க விரும்பாது கோவேறு கழுதையில் அமர்ந்த படி தனது தந்தை நடந்துவர தனது கிராமத்திற்குத் திரும்பும் பயணம் மேற்கொள்கிறாள் இளம்பெண். பயணம் மறுபடி அடர்ந்த சோளக்காட்டைக் கடந்து செல்ல வேண்டும். மகள் சோளக்காட்டினுள் திடீரெனக் காணாது போய்விடுகிறாள். மகள் சிறுநீர் பெய்வதற்காகச் சோளக் காட்டினுள் போயிருப்பதாகக் கருதும் தந்தை அவளுக்காகக் காத்திருக்கிறார். நிஜத்தில் அவளது கோவேறு கழுதை சோளக்கட்டின் நாற்சந்தியில் வரும்போது முகமூடிக் கொள்ளையன் ஒருவன் அவளை சோளக்காட்டினுள் பலவந்தமாகக் கடத்திச் செல்கிறான். அவனிடமிருந்து தப்பி அவள் ஓங்கி உயர்ந்த சோளக் கதிர்களிடையில் ஓடிக்கொண்

டிருக்கிறாள். வந்தவன் முகமூடியை விலக்குகிறான். அவன் திண்தோள் இளைஞன். நட்டநடுக்காட்டில் அவளோடு உடலுறவு கொள்ள கால்களால் மிதித்து வட்டவடிமாக ஒரு சோளத்தட்டுப் படுக்கையை அவன் ஏற்பாடு செய்கிறான். கால்களை விரித்தபடி அதன் நடுவில் அவனுக்காக அவள் படுத்திருக் கிறாள். நீண்ட நேரம் படுத்திருக்கும் நமக்கு மேலாக சோளத்தட்டு இடையிடையில் சூரிய ஒளியைக் கசியவிட்டு நீண்ட நேரம் அசைந்து கொண்டிருக்கிறது. உடலுறவின் சுகத்தை பார்வையாளனுக்கு அந்த நீண்ட நேரம் அசையும் சோளத் கதிர்களின் அசைவில் கொண்டுவந்து விடுகிறார் இயக்குனர் ஷாங் இமு.

உடலுறவு முடிந்து புன்னகையுடன் சோளக் காட்டிலிருந்து வெளியே வரும் மகளை ஏன் சிறுநீர் பெய்ய இவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாய் என்கிறார் தந்தை. மகள் பதிலிறுக்காமல் தனக்குள் சிரித்துக் கொள்கிறாள். சொர்க்கத்துக்குப் போவதற்கு ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது பாதைகள், பெண்ணே ஏன் காத்திருக்கிறாய்? என ஒரு விரகதாபப் பாடலை சோளக்காட்டினுள் எங்கோயிருந்தபடி இசைக்கிறான் திண்தோள் இளைஞன். கெட்ட பாட்டா படிக்கிறாய் போக்கிரிப் பயலே என அவனைத் தேடுகிறான் மகளைப் பின் தொடரும் தந்தை. வீடு திரும்பும் மகளுக்கும் தந்தைக்கும் வாய்த்தர்க்கம் நடக்கிறது. தொழுநோயாளன் நல்லவன் எனவும், பணக்காரன் எனவும், அவன் நமக்கு கோவேறு கழுதையொன்று கொடுத்திருக் கிறான், அவன் இறந்தபின் நீயே அவனது வாரிசு என்றும் சொல்கிறான் தந்தை. வீட்டிலுள்ள பொருட் களை விசிறியடித்துவிட்டு தனது தொழுநோய்க் கணவனிடம் திரும்புகிறாள் பெண்.

அவள் கணவனது வீடு திரும்பும்போது கணவன் சுவடு தெரியாமல் காணாது போயிருக்கிறான். அவன் எங்கே போனான் எனவோ அவன் கொல்லப் பட்டானா எனவோ எவருக்கும் தெரியாது. கிடைத்த தெல்லாம் அவனது காலணி மட்டும்தான். அவன் கொள்ளையடிக்கப்பட்டதற்கான எந்தச் சான்றுகளும் இல்லை எனப் பேசிக் கொள்கிறார்கள் மதுச்சாலைத் தொழிலாளர்கள். தொழுநோய் நிலவுடைமை யாளனைக் கொன்றவன் தனது தாத்தாவாக இருக்கலாம் என்கிறான் கதை சொல்லி. தனது தாத்தா அதனைத் தன்னிடம் ஒரு போதும் சொன்னதில்லை எனவும் அவன் சொல்கிறான். சிவப்பு மது நாவலின் கதை ஒரு பேரனால் சொல்லப்படுகிறது. தனது தாத்தா பாட்டியிடம் இருந்து அவனது கதை துவங்குகிறது. நிலவுடைமையாளர்கள், வறிய விவசாயிகள், பாலுறுவுச் சுரண்டலுக்கு ஆளாகும் விவசாயப் பெண்கள், கொள்ளையர்கள், நாட்டுப் புறப் பாடல்கள், தொல்கதைகள், விவசாயத் தொழிலாளர்கள், சிவப்பு மதுவின் போதை என கிராமிய மாயா யதார்த்தமாகத் துவங்கிச் செல்லும் கதை சீனா மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்பு வரலாற்றின் காலத்தினுள் நுழையும்போது, தனி நபர்களின் பழிவாங்குதலும் மோகமும் துரோகமும் ஆன உலகத்திலிருந்து மரணமும் இரத்தச் சிந்துதலும் கம்யூனிசப் புரட்சியுமான நடைமுறை வரலாற்றினுள் கதை நுழைகிறது.

கதையில் தொழுநோயாளனும் பேரனும் இன்மைகளாக இருக்கிறார்கள். பாட்டி, மணப்பெண், தாத்தா திண்தோள் இளைஞன். கதைசொல்லியின் தகப்பன் இந்த இருவருக்கும் முறைதவறிப் பிறந்த மகன். இவனே கதையை நகர்த்திக் கொண்டு போகிறான். இவனது தந்தை சிவப்பு மது திரைப் படத்தில் குஞ்சாமணியை ஆட்டிக் கொண்டு திரியும் ஒரு அம்மணக்குண்டிச் சிறுவனாகவே இருக்கிறான். பேரழிவின் முடிவில் கதையின் இறுதியின் அவன் பாட்டி மரணமெய்திவிட அவனது தாத்தாவும் அவனது தந்தையான சிறுவனும் மட்டுமே மிஞ்சு கிறார்கள். தொழுநோய் நிலவுடைமையாளனின் மரணத்துடன் கதையின் இரண்டாம் பகுதி தொடங்குகிறது.

அதுவரையிலும் வீட்டினுள் செல்லாமல் முற்றத்தில் படுத்திருந்த மணப்பெண் நிலவுடைமை யாளனின் மதுச்சாலை உதவியாளனின் உதவியுடன் மரணமுற்ற தொழுநோயாளி தொட்ட அனைத்தையும் எரியூட்டுகிறார்கள். மதுச்சாலையைத் தொடர்ந்து நடத்த முடிவெடுத்து நிர்வாகப் பொறுப்பேற்கிறாள் பெண். இப்போது குடிபோதையுடன் திரும்பும் திண்தோள் இளைஞன் போதையில் இவளை நானே பூப்பெய்த வைத்தேன், முதன் முதலாக அவளுடன் உடலுறவு கொண்டவன் நானே, அவள் என்னைத் தன்னுடையவனாக ஏற்றுக் கொள்கிறேன் எனச் சோளக்காட்டில் என்னுடன் படுத்திருக்கையில் உறுதி கொடுத்தாள் என்கிறான். பலவந்தமாக அவளது இருப்பிடத்தினுள் நுழைகிறான். உள்ளிருந்து நெட்டித்தள்ளப்படும் அவனை அங்கிருந்து வெளி யேற்றுமாறு தனது தொழிலாளிகளிடம் கோருகிறாள் பெண். அவன் பென்னாம்பெரிய மதுசேமிப்புத் தொட்டிக்குள் வீசப்படுகிறான். மூன்று நாட்கள் இரவும் பகலும் அதனுள் அவன் கிடக்கிறான். இந் நேரத்தில் கொள்ளையர் கூட்டம் அவளைக் கடத்து கிறது. பிணைத் தொகை கேட்கிறது. மதுச்சாலையின் விசுவாசமான உதவியாளன் பணத்தை ஏற்பாடு செய்து அவளை மீட்டு வருகிறான். முகத்தில் காயங் களுடன் உதடு கிழிந்த நிலையில் சோர்வுடன் அவள் திரும்புகிறாள். அவள் கொள்ளையர்களால்

வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருகிறாள் எனச் சினமுறும் திண்தோள் இளைஞன் கொள்ளையர்கள் வழமையாக வரும் மதுவிடுதிக்குப் போகிறான். அவர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்படுகிறது. கொள்ளையன் தொழுநோயாளனுடன் உறவு கொண்டவளை நான் எப்படித் தொடமுடியும்? என்கிறான். கொள்ளையர்களிடம் இருந்து தப்பு வதற்கு தான் முதியவனுடன் உறவு கொண்டதாக இளம்பெண் சொல்லியிருக்கிறாள் என்பது இப்போது இவனுக்குப் புரிகிறது. தள்ளாடியபடி அவளது இருப்பிடம் நோக்கி வருகிறான்.

முதல் முதலாக அவள் தீமூட்டச் செஞ்சோளக் கதிர்களிலிருந்து வடிக்கப்படும் சிவப்பு மது கொதி யூட்டப்பட்டு வடிக்கப்படுகிறது. அவள் முதல் முதலாகச் சுவைக்க தொழிலாளர்கள் அனைவரும் அவளைத் தொடர்ந்து மதுவைச் சுவைக்கிறார்கள். போதையுடன் அங்கு வரும் திண்தோள் இளைஞன் அவளையும் அங்கு நிற்கும் அனைவரையும் ஏளனத் துடன் பார்க்கிறான். நிரப்பப்பட்ட நான்கு பெண்ணாம் பெரிய மதுசேமிப்புக் கலயங்களை வரிசையாகக் கொண்டு வைத்து வைத்து எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க அவற்றினுள் அவன் சிறுநீர் கழிக் கிறான். திமிராகச் சிறுநீர் கழித்துவிட்டு அமைதியாக நின்றிருக்கும் அவளது இடுப்பில் கைநுழைத்து தலைகீழாக அவளைத் தூக்கிக் கொண்டு அவளது அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்கிறான். தொழிலாளர்கள் ஒவ்வொருவராகக் குனிந்த தலை களுடன் அவ்விடத்திலிருந்து அகல, விசுவாசமான உதவியாளன் சிறுநீர்கழித்த மதுக்கலயத்திலிருந்து மதுவைச் சுவைத்துப் பார்க்கிறான். மது இப்போது உன்னதமான சுவையுடன் இருப்பதாக அவனுக்குத் தெரிகிறது. தனது எஜமானியிடம் சென்று இந்த விசேஷமான மதுவுக்கு என்ன பெயர் வைப்பது எனக் கேட்கிறான். பதினான்கு மைல் மது எனப் பெயர் வை என உள்ளிருந்து குரல் வருகிறது. அன்றிரவு அந்த விசுவாச ஊழியன் அவளிடம் சொல்லாமல் அங்கிருந்து மறைந்து போகிறான். இப்போது மதுச் சாலை எஜமானிக்கும் அவளது முறை சாரா காதலனுக்கும் ஒரு மகன் பிறக்கிறான். கொண்டாட்டமும் களிப்புமாக நகர்ந்துகொண் டிருக்கிறது அவர்களது வாழ்வு.

இப்போது காணாது போன விசுவாச ஊழியன் திரும்பி வந்து தூரத்திலிருந்து மதுச்சாலையைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மௌனமாகத் திரும்பிச் செல்ல அவனைப் பின்தொடர்கிறாள் மதுச்சாலை எஜமானி. இப்போது அந்த விசுவாச ஊழியன் ஒரு கம்யூனிஸ்ட் போராளி. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் முன்னணி வீரன். இவனது பிரவேசத்தைத் தொடர்ந்து அந்தக் கிராமப்புறத்தினுள் பிரவேசிக்கிறது ஜப்பானிய



ஆக்கிரமிப்பு ராணுவம். நான்கு இலட்சம் சீனக் கிராமப்புற மக்கள் சோளக் காடுகளை அழிப்பதற்காக கட்டாய உடலுழைப்பில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சோளத் தட்டுகளின் மீது நடந்து சோளக்காடுகளை அவர்கள் ஜப்பானியப் படையின் முன்னேற்றத் திற்கான சமதளமாக உருவாக்குகிறார்கள். அந்தக் கிராம மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த கொள்ளையர் தலைவனை உள்ளூர் மதுவிடுதி நடத்தியபடி மாடுகளின் தோலுரிக்கிற வேலையைச் செய்பவனை உயிருடன் தோலுரிக்குமாறு கட்டளை யிடுகிறான் ஜப்பானியப் படைத்தளபதி. பிற்பாடு அவன் சுட்டுக் கொல்லப்படுகிறான். விசுவாச ஊழியனான கம்யூனிஸ்ட்டைத் தோலுரிக்கும் பிறிதொரு மதுவிடுதி ஊழியன் அதனை முடித்தபின் மனம் பேதலித்தவனாகிறான். ஜப்பானியப் படைக்கு எதிராகச் செயல்படுகிறவர்களுக்கு இததான் கதி என்கிறான் ஜப்பானியப் படைத்தலைவன்.

தமது மதுச்சாலையின் முன்னாள் விசுவாச ஊழியனும் இன்னாள் கம்யூனிஸ்ட் போராளியுமான வனின் மரணத்திற்குப் பழிவாங்க நினைக்கிறாள் கள்ளங்கபடமற்ற மணப்பெண்ணாக கிராமத்தினுள் பிரவேசித்து, முறைசாரா உறவினால் இப்போது ஒரு மகவுக்கும் தாயாகிய மதுச்சாலை எஜமானி. ஜப்பானிய வாகனங்கள் வரும் சோளக்காட்டுப் பாதையில் சிவப்பு மதுக் கலயங்களை வெடி பொருளாகப் புதைக்கிறார்கள். அவர்கள் புதைத்து மடித்து அயர்ச்சியில் பசியுடன் தூங்கிப் போகிறார்கள். அவர்கள் தமது வேலை முடிந்துவர வீட்டில் விருந்து தயார்செய்து கொண்டிருக்கிறாள் பெண். அவளது மகனான அம்மணச் சிறுவன் சென்றவர்கள் பசியோடு இருப்பதாக ஓடிவந்துசொல்கிறான். அவர்களுக்கு இரு தோள்களிலும் உணவெடுத்துக்கொண்டு செல்லும் அவள் அப்போதுதான் சோளக்காட்டுப் பாதையினுள் பிரவேசிக்கும் ஜப்பானிய வாகனத்தை எதிர்கொள்கிறாள்.

ஜப்பானிய ராணுவத்தினரது துப்பாக்கிகள் அவளது உடலைத் துளைக்கின்றன. கொண்டு வந்த உணவுக் கலயங்களுடன் அவளது செங்குருதி சிதறிக் கலக்கிறது. மதுச்சாலைத் தொழிலாளர்களுக்கும் ஜப்பானிய ராணுவத்தினருக்கும் இடையில் உக்கிர மான சமர் நடக்கிறது. ராணுவ வாகனங்கள் வெடித்துச் சிதறுகின்றன. முழுத் தொழிலாளர்களும் மரணமடைகிறார்கள். இருவர் மட்டுமே மிஞ்சி நிற்கிறார்கள். கதைசொல்லியின் தாத்தாவும் தந்தையும் தான் அவர்கள். இரத்த நிறத்தில் திரை நிறைகிறது. செஞ்சூரியன். சிவப்புச் சோளக் கதிர்கள். சிவந்த வானம். வெஞ்சினத்தினதும் போதையினதும் கொண்டாட்டத்தினதும் காமத்தினதும் மரணத்தினதும் நிறம் சிவப்பு. சீனாவின் கிராமப்புறங்களிலெங்கும் அடர்ந்து செழித்திருந்த செஞ்சோளக் கதிர்களிலிருந்து வடிக்கப்பட்ட சிவப்பு மது அந்தக் கொந்தளிப்பான வாழ்வின், வரலாற்றுக் காலத்தின் நிரந்தரமான குறியீடாக நமக்குள் தங்கி நிற்கிறது.

ஜப்பானிய ராணுவ வாகனங்களைத் தகர்க்கச் சோளக் காட்டுப் பாதையில் புதைக்கும் சிவப்பு மதுக் கலங்களில் வெடி கொழுத்தும் முன்பாகத் தனது மகனின் சிறுநீரைக் கால்தூக்கிக் கழிக்கச் செய்கிறான் தந்தை, கதைசொல்லியின் மூதாதை... கண்ணீரும் நாடகீயமும் மாந்திரீகமும் தர்க்கம் மீறிய சடங்கு களும் உலகெங்கிலும் கிராமிய வாழ்வின் சாரமாக இருக்கிறது. சிவப்பு மதுவில் சிறுநீர்கழித்தல் பெறும் அற்புதமான இடத்தை வேறு எவ்விதமாக எம்மால் புரிந்து கொள்ள முடியும்? சீன கிராமிய வாழ்வின் பழமொழிகளும் சொலவடைகளும் கொச்சைகளும் சிவப்பு மது நாவலிலும் திரைப்படத்திலும் எங்கெங்கும் விரவிக் கிடக்கிறது. சிவப்பு மது திரைப்படத்தின் இறுதியில் மகன் தனது மரணமுற்ற தாய்க்கு ஒரு பாட்டுப் பாடுகிறான். அது ஒரு சீன நாட்டுப்புறப் பாடல். அன்னையே, அன்னையே, தென்மேற்கு திசை நோக்கிச் செல். குதிரை காத்திருக்கிறது, செல்வம் கொட்டிக்கிடக்கிறது, கலம் புறப்படக் காத்திருக்கிறது. செல்வச் செழிப் புடன் வாழ அன்னையே, அன்னையே தென்மேற்கு திசை நோக்கிச் செல்...

நோபல் பரிசு தொடர்பான அரசியல் விவாதங்கள் அனைத்தையும் தாண்டி கலைஞர்களாக மோ யானும் ஷாங் இமுவும் சிவப்பு மது படைப்பில் சேர்ந்து நிமிர்ந்திருக்கிறார்கள். மாவோவின் கலாச்சாரப் புரட்சி உணர்ச்சிகரமான வாழ்வும் நாடகீயமான சோகக் கதைகளும் தேடிய சீன மக்களின் முன் தோற்றுப்போயிருக்கிறது எனத் தான் உணர்ந்ததாகச் சொல்கிறார் மோ யான். 1972 ஆம் ஆண்டு தி பிளவர் கேர்ள் எனும் வடகொரியத் திரைப்படம் பார்ப் பதற்காக எல்லைதாண்டி வடகொரியா போனபோது தான் இதனைத் தனது சொந்த அனுபவத்தில் உணர்ந்ததாகச் சொல்லியிருக்கிறார் அவர். கலாச்சாரப் புரட்சி உச்சத்தில் இருந்தபோது வெளியான இந்தக் கண்ணீர் சினிமாவைப் பார்ப்பதற்காக தொகை தொகையாக எல்லைகடந்து சீன மக்கள் சென்றார்கள். திரைப்படம் பார்த்துவிட்டுத் தமது வீடுகளுக்குக் கண்ணீருடன் திரும்பினார்கள். நானும் கிம் இல் சுங் கதை எழுதிய அத்திரைப்படத்தைப் பார்த்து அழுது கொண்டுதான் ஊர் திரும்பினேன் என்கிறார் மோ யான்.

தியானன்மென் சதுக்க மாணவர் எழுச்சியை ஆதரித்துச் சீனாவில் மனித உரிமை, அரசியல்

சீர்திருத்தம் போன்றவற்றுக்காகக் குரல் கொடுத்ததற்காக இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற லீ சியாபோ என்பவர் சீன அரசினால் பதினொரு ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். லீ சியாபோவுக்கு சமாதானத்துக்கான நோபல் விருது வழங்கப்பட்டபோது சீனா நோர்வே அரசுடன் ராஜதந்திர உறவை முறித்துக் கொள்வதாக மிரட்டியது. நோபல் பரிசுகளில் சமாதானத்துக்கான பரிசை மட்டும் நோர்வேயும் இலக்கியம் உள்ளிட்ட பிற துறைகளுக்கான பரிசுகளை ஸ்வீடன் நாட்டின் நோபல் நிறுவனமும் அளித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. சீனாவிலிருந்து வெளியேறி பிரான்சில் குடியுரிமைபெற்று வாழும் காவோ ஜிங்ஷியாங் எனும் சீன நாவலாசிரியர் இரண்டாயிரமாம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றபோது அதனைச் சீனாவுக்கு எதிரான பரிசாகவே சீன அரசு கருதியது. கடந்த பதினோரு ஆண்டுகளாகச் சிறையில் வாடும் பிறிதொரு நோபல் பரிசாளரான லீ சியாபோ பற்றி ஒரு போதும் பேசியிராத மோ யான் தனக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதனையடுத்து லீ சியாபோ விரைவிலேயே விடுதலை செய்யப்படவேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

சீன அரச ஆதரவாளரான மோ யானுக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டதைக் கண்டித்திருப்பவர் பிறிதொரு சீனக் கலைஞரும் சீனாவிலிருந்து 2012 ஆம் ஆண்டு வெளியேறிய ஓவியருமான அய் வீவீ. பூகம்பமொன்றில் கொல்லப்பட்ட பள்ளி மாணவர்கள் குறித்த சீன அரசின் பொறுப்பின்மையை உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக சீன அரசினால் கைது செய்யப்பட்டு, இரண்டு மாதம் சிறையில் அடைக்கப்பட்டு, நீலப்படக் குற்றச்சாட்டு, வரிஏய்ப்புக் குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றிலிருந்து தப்பி வாழ்பவர் அய் வீவீ. 2008 ஆம் ஆண்டு நடந்த சீன ஒலிம்பிக் திடலை வடிவமைக்க ஒப்புக்கொண்டு பிற்பாடு அதிலிருந்து வெளியேறியவர். சீனாவின் படைப்பாளர் சுதந்திரமும் மனித உரிமையும் குறித்து அக்கறைப்படாதவர், சக அறிவுஜீவியான லீ சியாபோவின் விடுதலை குறித்துக் கவலைப் படாதவர் என இப்போது நோபல் பரிசு பெற்றிருக்கும் மோ யான் குறித்து விமர்சித்திருக்கிறார் ஓவியரான அய் வீவீ. அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் மனித உரிமைக்கும் அதிகாரத்திற்கும் உள்ள உறவு பிரிக்க முடியாதது என்பதற்கு வேறு வேறு காலகட்டங்களில் மூன்று சீன ஆளுமைகளுக்கு அளிக்கப்பட்ட இந்த மூன்று நோபல் பரிசுகளும் சான்றுகளாக இருக்கின்றன.

★★★

**பெரும்பாலான உங்களது நாவல்களின் கதைகள் உங்கள் சொந்த நகரமான கோமி பிரதேசத்தை அடிப்படையாக வைத்த பாதி புனைவான பிரதேசத்தில் நிகழ்கிறது. இன்னும் சொல்லப்போனால் வில்லியம் பாக்னர் அமெரிக்காவின் தெற்குப் பிரதேசத்தை எவ்வாறு தன் கதைகளில் பாவித்தாரோ அவ்வாறு இருக்கிறது. இவ்வாறு பாதி புனைவான வெளிக்கு உங்களைத் திரும்பச் செய்தது எது? உலக அளவிலான வாசகர்களின் உங்கள் மீதான கவனம் ஏதேனும் இப்பிரச்சினையில் பாதிப்புச் செலுத்தியிருக்கிறதா?**

நான் எழுதத் துவங்கும்போது எனது கதைச் சூழல் முழுக்கவும் நிஜமானது. எனது அனுபவங்களும் எனது சொந்த அனுபவங்கள். எனது தொகையான படைப்புக்கள் வெளியான பின்பு எனது அன்றாட



*வாழ்வனுபவங்கள் முடிவுக்கு வந்துகொண்டிருந்தன. இப்போது நான் கொஞ்சம் கற்பனையைப் போட வேண்டியிருந்தது. சில வேளைகளில் மாயத் தன்மையையும் போட வேண்டியிருந்தது. அதுதான் பிற்பாடு என் கதைகளில் இடம்பெற்றது.*

**சில சமயங்களில் உங்கள் படைப்புக்கள் குந்தர் கிராஸ், வில்லியம் பாக்னர் மற்றும் கார்சியா மார்க்வஸ் போன்றவர்களை ஞாபகப்படுத்துகிறது. நீங்கள் எழுத ஆரம்பித்த வேளையில் சீனாவில் இவர்களது படைப்புக்கள் உங்களுக்குக் கிடைத்தனவா? உங்களது படைப்புக்களின் மீதான பிறரது பாதிப்புக்கள் குறித்து எங்களுக்குச் சொல்வீர்களா?**

*நான் எழுத ஆரம்பித்த 1981 ஆம் ஆண்டு நான் வில்லியம் பாக்னரையோ அல்லது கார்சியா மார்க்வசையோ நான் வாசித்திருக்கவில்லை. 1984 ஆம் ஆண்டுதான் இவர்களது படைப்புக்களை நான் வாசித்தேன். சந்தேகமில்லாமல் இவர்கள் இருவரும் என் மீது மிகப்பெரும் பாதிப்பைச் செலுத்தினார்கள். எனது வாழ்க்கை அனுபவங்கள் இவர்களது அனுபவங் களுடன் ஒத்திருப்பதை நான் கண்டேன். பிற்பாடு தான் இந்த ஒப்புமையை நான் கண்டுபிடித்தேன். இவர்களது படைப்புக்களை நான் முன்பாகவே வாசித்திருந்தால், நான் ஏலவே அவர்கள் சாதித்தது போல உன்னதப் படைப்புக்களைப் பெற்றிருந் திருப்பேன்.*

**உங்களது ஆரம்ப நாவல்கள், குறிப்பாக ரெட் சொர்கம் போன்றன முழுமையாகக் கடந்தகால வரலாறு சார்ந்ததாகவும், அதனோடு பலர் கருதுவது போல மனோரதியம் கொண்டதாகவும் இருந்திருக் கின்றன. ஆனால், சமீப ஆண்டுகளில் உங்களது நாவல்கள் அதிகமாகச் சமகாலம் சார்ந்ததாகவும், சமகாலப் பிரச்சினைகள் சார்ந்ததாகவும் இருக் கின்றன. இந்த மாற்றம் உங்களது பிரக்ஞைபூர்வமான தேர்வா?**

*நான் ரெட் சொர்கம் நாவலை எழுதியபோது எனக்கு முப்பது வயதுக்கும் குறைவு. ஒப்பீட்டளவில் மிக இளம் வயது. எனது மூதாதையர்களோடான எனது உறவை வைத்துப் பார்க்கிறபோது எனது வாழ்வு மனோரதியமான மனஅமைவைக் கொண்டு தான் இருந்தது. நான் அவர்களது வாழ்வை எழுதினேன். அவர்களைக் குறித்து அதிகமாக எனக்குத் தெரியாது. ஆகவே அவர்களது பாத்திரப் படைப்பில் பல்வேறு கற்பனைகளைக் கலந்தேன். லைப் அன்ட் டெத் வியரிங் மீ அவுட் நாவலை நான் எழுதியபோது எனக்கு நாற்பது வயதாக இருந்தது. நான் இப்போது மத்தியதர வயது மனிதனாக ஆகியிருந்தேன். எனது வாழ்க்கை இப்போது வித்தியாசமானது. எனது வாழ்வு அதிகமாக நிகழ்காலம் சார்ந்ததாக, சமகாலம் சார்ந்ததாக ஆகியது. சமகாலத்தின் உக்கிரமான குரூரம் என்பது நான் ஒரு போது கொண்டிருந்த எனது மனோரதியத்தை மட்டுக்குள் கொண்டு வந்தது.*

**நீங்கள் அவ்வப்போது பொதுமக்களின் மொழியில், ஷான்டாங்க் பிரதேசமொழி வழக்கில் எழுதிக்கொண் டிருந்தீர்கள். கச்சாவான கூர்மையை அந்த மொழி உங்களுக்கு வழங்கியது. உங்களது பிரதேசத்தின் பழமொழிகளும் சிலேடைகளும் ஆங்கில மொழி பெயர்ப்பில் சரியாக வரவில்லை என நீங்கள் வருத்தப் பட்டது உண்டா? அல்லது உங்களது மொழிபெயர்ப் பாளர் ஹவார்ட் கோல்பிளேட் அவர்களுடன் இணைந்து இதனைக் களைந்து கொண்டீர்களா?**

*நிஜத்தில் நான் சொல்லத்தக்க அளவில் உள்ளூர் வழக்கையும் பழமொழிகளையும் சிலேடைகளையும் எனது ஆரம்பப் படைப்புக்களில் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் நான் - சீனாவும் - வளர்ச்சியடைந்திருக்கவில்லை. வளர்ச்சி என்பது பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டு வந்தது. எடுத்துக்காட்டாக சூழலியல் பிரச்சினைகள் மற்றும் உன்னதமான விழுமியங்களின் வீழ்ச்சி போன்றன. எனது படைப்புக்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன என்பதனை மனங்கொண்டதில், இப்படியான மொழி எனது மொழிபெயர்ப்பாளர் களுக்கு நிறைய சிரமம் தருகிறது என்பதை நான் உணர்ந்தேன். ஆனால், உள்ளூர் மொழியையும் பழமொழிகளையும் சிலேடைகளையும் பாவிக்காத மொழி எனக்குச் சரிவராது; ஏனெனில் பழமொழி சார்ந்த மொழி என்பது கூர்மையானது; உக்கிரமான வெளிப்பாட்டுத்தன்மை கொண்டது; அதனோடு ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனின் அடையாளம் கொண்ட மொழிக்கு இது தவிர்க்கவியலாத சாராம்சமாக இருப்பது. ஒரு பக்கத்தில் எனது பழமொழிகள், சிலேடைகள் கொண்ட மொழியை ஓரளவு நான் மாற்றித் தகவமைத்துக்கொண்டு பாவித்தேன், மறுபக்கம் எனது மொழிபெயர்ப்பாளர்கள் தமது மொழியில் எனது வழக்குமொழிகளை எதிரொலி செய்யுமாறும் பார்த்துக் கொண்டேன் - இது ஒரு சாத்தியமான இலட்சிய நிலை.*

**உங்களது பல நாவல்களில் உறுதிமிக்க பெண்கள் உள்ளார்ந்து வாழ்கிறார்கள் – எடுத்துக்காட்டாக பிக் பிரஸ்ட்ஸ் அன்ட் வைட் ஹிப்ஸ், லைப் அன்ட டெத் வியரிங் மீ அவுட் மற்றும் ஃபிராக் போன்ற நாவல்கள் – நீங்கள் உங்களைப் பெண்ணிலைவாதி எனக் காண் கிறீர்களா அல்லது பெண்களின் பார்வையில் பிரச்சினை களைச் சொல்கிறீர்கள் என்று காண்கிறீர்களா?**

*முதலாவதாகப் பெண்களை நான் ஆராதிக்கிறேன்; மரியாதை கொள்கிறேன். அவர்கள் மேன்மையான*

*வர்கள் என நான் கருதுகிறேன். வாழ்வில் அவர்களது அனுபவங்களும் அவர்கள் எதிர்கொள்கிற கஷ்டங் களும் ஒரு ஆண் எதிர்கொள்வதைக் காட்டிலும் மிகப் பெரிது என நான் கருதுகிறேன். பேரழிவுகளை நாம் எதிர்கொள்ளும்போது ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மனபலம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கே உரிய தகைமையான, அன்னையர் களாகவும் அவர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இதற்கான காரணம் என நான் கருதுகிறேன். இந்த உணர்வு அவர்களுக்கு அளிக்கிற வலிமையை நாம் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. எனது நூல் களில் பெண்களின் மிதியடிகளுக்குள் நான் என்னை நுழைத்துக் கொள்கிறேன். அறுதி நிஜம் யாதெனில் நான் பெண் அல்ல; ஒரு ஆண் எழுத்தாளன். ஒரு பெண்ணாக இருந்தால் எவ்வாறு பார்ப்பேனோ அவ்வாறு நான் எனது நாவல்களில் உலகை வியாக்யானப்படுத்துவதென்பது பெண்களால் தம்மளவில் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படாமல் போகலாம், ஆனால் அதற்காக அதன்பொருட்டு என்னால் ஏதும் செய்ய இயலாது என்பதாக எனது முயற்சி ஆகிவிடாது. நான் பெண்களை விரும்புகிறேன்; ஆராதிக்கிறேன்; ஆனால் நான் ஒரு ஆண்தான்.*

**தணிக்கையைத் தவிர்ப்பது என்பதனை எழுத்தில் 'சூட்சுமம்' தொடர்பான கேள்வி எனக் கருது கிறீர்களா? அல்லது மாயா யதார்த்தம் அனுமதிக்கும் படைப்பு வெளி, அதுவல்லாது மரபான பாத்திரச் சித்தரிப்பு போன்றன எந்த அளவுக்கு விவாதங் களுக்கு உட்படாமல் ஆழ்ந்த அக்கறைகளை வெளிப் படுத்த உதவ முடியும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

*ஆமாம். அப்படித்தான். இலக்கியத்தின்பாலான பல அணுகுமுறைகள் அரசியல் நோக்கைக் கொண்டு தான் இருக்கும். எடுத்துக்காட்டாக, எமது நிஜவாழ்வில் பல உணர்ச்சிகரமான கூர்மையான பிரச்சினைகளை எவரும் தொட விரும்புவது இல்லை. இம்மாதிரி நிலைமைகளில் எழுத்தாளன் அந்தப் பிரச்சினை களை வாழ்விலிருந்து தனிமைப்படுத்துவதற்காகத் தனது கற்பனைகளைச் செலுத்துகிறான் அல்லது அதீதப்படுத்தப்பட்ட சூழல்களைக் கட்டமைக்கிறான் - நிஜ உலகின் அடையாளம் கொண்ட அச்சமற்ற, நுட்பமான சித்தரிப்புகள் இருக்குமாறும் பார்த்துக் கொள்கிறான். ஆகவே, நடைமுறையில் இந்த மட்டுப்படுத்தல்கள், தணிக்கைகள் என்பது இலக்கிய ஆக்கத்திற்குச் சிறந்தது என நான் நம்புகிறேன்.*

**ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட, ஜனநாயகம் என்பது குறித்த உங்களது சுருக்கமான ஒரு நினைவு கூர்தலில் அந்நிலைமை உங்களது சொந்த அனுபவத்தில் நீங்கள் ஒரு வாலிபனாகவும், வளர்ந்த ஆணாகவும் இருந்த யுகத்தின் இறுதி என்பதாகப் பதிவு செய்திருந் தீர்கள். அதில் மனச்சோர்வின் தொனி இருந்ததாக எங்களுக்குப்பட்டது. மேற்கத்திய சிந்தனையிலிருந்து வந்த எங்களுக்கு அது ஆச்சர்யமாக இருந்தது. முன்னேற்றம் என்பது குறித்துப் பேசும்போது நாங்கள் அதை எப்போதும் வளர்ச்சி என்றுதான் பார்ப்போம். ஆனால், உங்களது நினைவுகூர்தல் எதனையோ இழந்து விட்டதாகச் சொல்கிறது. இது நியாயமான மதிப்பீடுதானா?**

*ஆம், எனது அந்த நினைவுப்பதிவு முழுமை யாக எனது சொந்த அனுபவங்கள். எனது அன்றாட வாழ்வு. அதனோடு சில விஷயங்கள் கற்பனா பூர்வமானது. நீங்கள் சொல்கிற மனச்சோர்வுத் தொனி நிஜத்தில் துல்லியமானது. அந்தக் கதை ஒரு நாற்பது வயது மனிதன் தனது கடந்துபோன காலம் குறித்துச் சிந்திப்பது பற்றியது. எடுத்துக்காட்டாக, நீங்கள் இளமைநாட்களில் இருந்தபோது ஒரு பெண்ணின் மீது மையல் கொண்டிருந்திருப்பீர்கள்; இப்போது அவள் பிறிதொருவரின் மனைவியாக இருப்பாள். அந்த நினைவுகள் துயரமானதுதான். கடந்த முப்பதாண்டுகளாக சீனா முக்கியமான மாற்றங் களுக்கு உள்ளாகி வந்திருக்கிறது. எமது வாழ்க்கைத் தரத்தில், அறிவுத்தளத்தில், எமது குடி மக்களின் ஆன்மீகத் தளத்தில் வளர்ச்சி என்பது ஸ்தூலமாக இருக்கிறது. ஆனால், பல விஷயங்களில் எமது அன்றாட வாழ்வில் நாங்கள் திருப்தியில்லாமல் இருக்கிறோம். நடைமுறையில், சீனா வளர்ச்சியடைந் திருக்கிறது. அந்த வளர்ச்சியானது பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது. குறிப்பாகச் சூழலியல் பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கிறது. மேன்மையான மனித விழுமியங்கள் வீழ்ச்சியடைந் திருக்கின்றன. நீங்கள் குறிப்பிட்ட எனது மனச் சோர்வுக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, என்னுடைய இளமைநாட்கள் முடிந்து விட்டன. இரண்டாவதாக, இன்றைய சீன நிலைமை என்னைக் கவலையுற வைக்கிறது, குறிப்பாக நான் திருப்தியுறமுடியாத பல்வேறு பிரச்சினைகள் என்னைச் சோர்வுற வைக்கின்றன.*

**ஆங்கிலத்தில் வெளிவரவிருக்கிற உங்களது அடுத்த புத்தகம் என்ன?**

*சான்டல்வுட் பெனால்டி.*

***(இலண்டனில் நடைபெற்ற புத்தக விழாவுக்கு வந்திருந்த மோ யானுடன் இலண்டனிலிருந்து வெளியாகும் கிரண்டா இலக்கிய இதழின் ஆசிரியர் ஜான் பிரீட்மேன் நடத்திய உரையாடல்.)***

●

# அமோக விற்பனையில்...
# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**தமிழகத்தில் சாதி உருவாக்கமும் சமூக மாற்றமும்**
(பொ.ஆ.800-1500)
நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு

₹ 70/-





**இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்**
ந.முத்துமோகன்

₹ 370/-





**பிராமண போஜனமும் சட்டிச் சோறும்**
இடைக்காலத் தமிழகத்தில் வைதீகமும் சாதி உருவாக்கமும்
ஆ.சிவசுப்பிரமணியன்

₹ 75/-





**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்

₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை

₹ 155/-




**சோமநாதர்**
வரலாற்றின் பல குரல்கள்
ரொமிலா தாப்பர்
தமிழாக்கம் கமலாலயன்

₹ 300/-

# கஞ்சித் தொட்டி ஆஸ்பத்திரி என்ற ஸ்டான்லி மருத்துவமனை

டாக்டர் சு. நரேந்திரன்




**கருப்பர் நகரம்**

வட சென்னை மக்களின் வாழ்வோடு கலந்துவிட்ட ஸ்டான்லி மருத்துவமனை சுமார் 200 ஆண்டுகள் பழைமையானது. கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் 17ஆம் நூற்றாண்டில் மதராசில் குடியேறியபிறகு அவர்களுக்கு வேலை செய்வதற்காகப் பெரும்பாலோர் கோட்டையைச் சுற்றி உள்ள பகுதிகளுக்கு வரத் தொடங்கினர். அப்படி வந்தவர்களால் உருவானதுதான் அன்றைய கருப்பர் நகரம் என அழைக்கப்படும் இன்றைய ஜார்ஜ் டவுனும் முத்தியால்பேட்டையும் பெத்தநாயகன்பேட்டையும் சேர்ந்து பிளாக் டவுன் (கருப்பர் நகரம்) என்றாயிற்று.

ஆங்கிலேயர்கள் சென்னையில் கால் ஊன்றியதும் தங்களுக்கான தேவைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் பூர்த்தி செய்து கொண்டே வந்தனர். அந்த வரிசையில் நோய்வாய்ப்பட்ட ஆங்கிலேயர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகக் கோட்டைக்குள் மருத்துவர்களுடன் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதே சமயம் கோட்டைக்கு வெளியில் இருக்கும் சென்னை பூர்வகுடி மக்களுக்கு, வந்தேறிகளுக்கு மருத்துவம் பார்க்க நவீன மருத்துவர்கள் யாரும் இல்லை. நாட்டு மருத்துவர்கள்தான் அவர்களின் நோய்களுக்கு மருந்து கொடுத்து வந்தனர். எனவே, அவர்களுக்கென ஒரு நவீன மருத்துவமனைக்கான தேவை மெல்ல உணரப் பட்டது.

### உள்ளூர்வாசிகளுக்கு மருத்துவமனை தேவை

இதற்கான செயலுக்கு முன் முயற்சி எடுத்தவர், கர்னல் கிரான்போர்ட் (Gran Ford) கூற்றின்படி, சர்ஜன் வில்லியம் கார்டன்தான். இவர் மதராஸ் சுதேசிகளுக்கு ஒரு மருத்துவமனை தேவை என்ற ஒரு புதுக்கருத்தைத் தெரிவித்தார். இவர் 1787 நவம்பர் 19ஆம் தேதி இதற்கான ஒரு விண்ணப்பத்தைக் கவுன்சில் கவர்னர், மெடிகல் போர்டு மற்றும் கர்நாடக நவாப் ஆகியோரிடம் அளித்தார். இதனால் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. ஆனால், 10 ஆண்டுகள் கழித்து 1797இல் உதவி மருத்துவரான ஜான் ஹோலன் அண்டர்வுட் (John Holen Underwood) தானே ஒரு மருத்துவமனை நிறுவுவதாகவும், அதற்கு அரசு புரசைவாக்கத்தில் நிலம் தந்து உதவுவதோடு, 100 பக்கோடாக்கள் மாத வாடகை தர வேண்டும் என்று கூறி விண்ணப்பித்தபொழுது, அரசு இசைவளித்து, கட்டடத்தைப் பொதுமக்கள் அன்பளிப்புடனே கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு மருத்துவரை வேலைக்கு வைத்துக்கொள்ளவும் அங்கீரித்தது. ஆனால் புரசைவாக்கத்தில் நிலம் ஒதுக்காது 40 ஏக்கர் மற்றோர் இடத்தில் ராயபுரத்தில் ஒதுக்கியது.

இக்காலகட்டத்தில் 1781இல் மதராசில் மிக மோசமான பஞ்சம் தலை விரித்தாடியது. மதராசின் சொந்த மக்கள் சோற்றுக்கு வழியில்லாமல் பரிதவித்தனர். இவர்களில் பெரும் பாதிப்புக்கு உள்ளானவர்களில் முக்கியமானவர்கள் கருப்பர் நகரத்தினர். இவர்களுக்கு உதவுவதற்கு இன்றைய ஸ்டான்லி மருத்துவமனை இருக்கும் இடத்தில் ஒரு கஞ்சித்தொட்டி திறக்கப்பட்டது. இது 1782இல் மாகாண அரசும், கோட்டையிலுள்ள செயின்ட் மேரி தேவாலயமும் இணைந்து இந்தியாவில் முதன் முறையாக ஓர் அறக்கொடைக்கான அமைப்பு, பஞ்சம் துயர்நீக்கும் குழு ஒரு வாடகை கட்டடத்தில் கருப்பர் நகரத்தின் சுவருக்கு அருகில் தொடங்கியது. பஞ்சம் குறைந்தபிறகு மணியக்கார சத்திரத்தில் உணவு வழங்கப்பட்டது. பிறகு, இதுவே கஞ்சித் தொட்டி என அழைக்கப்பட்டது. இவ்விடம் அக் காலத்தில் பழம் காய்கறிகள் விளையும் இடமாக இருந்தது. இந்த வாடகை வீடே பஞ்சம் சற்று குறைந்த பிறகு சத்திரமாக (உள்ளூர் நோயாளிகள் தங்குமிடமாக) மாறியது. (A Madras Miscellany, P. 807)

### மணியக்காரர் சத்திரம்

1784ஆம் ஆண்டுவரை இந்த இடம் பெயரில்லாச் சத்திரம் ஒன்றுமில்லாதவர்களின் புகலிடமாக இருந்தது. பஞ்சம் குறைந்தபிறகும்கூட, நடை பெற்றது. ஆனால், பிறகு எப்படி மணியக்காரர் சத்திரம் (Monegar choultry) என்று பெயர் வந்தது என்பது இன்றும் புதிராகவே உள்ளது.

இந்த மணியக்கார சத்திரத்திலேயே இணைந்து மருத்துவமனை கட்டப்பட்டவுடன், இதற்கு யார் முயற்சி செய்தாரோ அவரே 1799இல் (அண்டர்வுட்) கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டு, 80 படுக்கை களுடன் மருத்துவக்குழுவால் மேற்பார்வையிடப் படும் என்ற விதியுடன் மருத்துவமனை நடைபெற்றது.




இந்த மருத்துவமனை 1799இல் 9800 பக்கோடாக் களுக்குக் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடம் செங்கல் சுண்ணாம்பினால், இரண்டு வளாகங்களில் 4 வார்டுகள் எல்லாப் பக்கங்களிலும் தாழ்வாரங் களுடன் கட்டப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் மருத்துவம் பெற இங்கு வர ஆர்வமற்றவர்களாகப் பிராமணர்கள் இருந்ததனால், இதிலிருந்து ஒரு வார்டு தனியாகப் பிரிக்கப்பட்டு உயர்ஜாதியினர் மருத்துவம் பெற்றனர். (Op. Jaggi, p. 78)

இது சிறப்புற நடைபெற ஆர்காட் நவாப்பும் மற்றும் வணிக நிறுவனங்களும் மிகவும் உதவினர். இந்நோயாளிகள் உறைவிடம் மூன்றுவிதமான அமைப்புகளுடன் நடைபெற்றது. அவைகள் (1) வெளிப்புற நோயாளிகளுக்கான மருந்தகம், (2) உள்நோயாளிகளுக்கான ஆறு கொட்டகைகள் (3) நாட்பட்ட நோயாளிகளுக்கான சிறப்பு படுக்கைக் கூடம் ஆகியவைகளாகும். ஒரு மாதத்திற்குள்ளாகவே 89 உள்நோயாளிகள் மருத்துவம் பெற்றனர்.

பலர் உள்நோயாளிகளாகத் தங்க இடம் போதாத குறையால் திருப்பி அனுப்பப்பட்டனர். ஆகவே ஒரு வரைமுறையுடன் உள்நோயாளியாக 80 நபர் களுக்கும், வெளிநோயாளிகளாக 100 நபர்களுக்கும் மருத்துவம் அளிக்கப்பட்டது.

டாக்டர் அண்டர்வுட்டிற்கு மருத்துவமனை சீர்படுத்தவும், வாடகைக்காகவும் 150 பக்கோடாவும் மருத்துவம் புரிவதற்கும் ஊதியமாக மாதத்திற்கு 100 பக்கோடாவும் வழங்கப்பட்டது. (Op. Jaggi 78)

1807ஆம் ஆண்டு கடைசியில் மருத்துவமனை குழுமம் அரசிற்குத் தனக்குக் கிடைக்கும் அன்பளிப்பு மற்றும் உதவித்தொகை மிகவும் குறைந்துவிட்ட தாகவும், அதற்காக அரசு நிதி அதிகமாக ஒதுக்கவும் வேண்டி, இது ஒரு கிராமத்திற்கான நிதி அளவு இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. இதன்படி மணியக்கார சத்திரமும், உள்ளூர் மருத்துவ மனையும் 1809 நவம்பர் 1ஆம் தேதி இணைந்தன.

நோயாளிகளையும், உதவித்தொகையையும் இப்புதிய நிறுவனத்திற்கு அளித்த அரசுதான் மேலாண்மையைச் செலுத்தியது.

இந்தப் புதிய நிறுவனம் மதராஸ் நோயாளி உறைவிடம் மற்றும் சுதேசி ஏழைகள் காப்பகம் (Madras Infirmary and Native Poor Asylum) எனப் பெயரிடப்பட்டு மருத்துவர் சர்வுட் (Shar wood) 80 பக்கோடா ஊதியமாகவும், 20 பக்கோடா பல்லக்குக்கான உதவிப் பணமாகவும் கொடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டார்.

இத்துடன் இங்குக் கால் ஊனமுற்றோர், குருடு, மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்குக் காப்பகம், தொழுநோய் மருத்துவமனை மற்றும் கேட்பாரற்று கண்டெடுக்கும் குழந்தைகளுக்கான வார்டும் தொடங்கப் பட்டன. இச்சமயத்தில் மணியக்கார சத்திரத்தின் இயக்குநர்கள், இந்த நோயாளிகளின் உறைவிடம் கருப்பர் நகரத்தார் அனைவருக்குமான மருத்துவ மனையாக விளங்குவதால், மருத்துவருக்குக் கொடுக்கும் ஊதியத்தை மற்ற இடங்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போல அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஒரு விண்ணப்பத்தை வைத்தார்கள். அது அரசால் 1858 ஜூலையில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இச்சத்திரத்தில் 1868இல் பல புதிய மாறுதல்கள் நிகழ்ந்தன. பெண்களுக்காகப் புதிய வார்டுகள் 40 படுக்கை வசதியுடன் கட்டப்பட்டன. இத்துடன் பல பிரமுகர்களின் உதவித் தொகையில் பல வார்டுகள் கட்டப்பட்டன. இதில் முக்கியமானது, நார்த்கோட் வார்டு இதில் ஒன்று ஆணுக்கும், மற்றொன்று பெண்ணுக்கும் மாகாணச் செயலர் சர் ஸ்போர்ட் நார்த்கோட்டினால் ரூ. 1000 அன்பளிப்பினால் கட்டப்பட்டன. இதேபோல் கவர்னர் நேப்பியரின் உதவியால் நேப்பியர் வார்டு திறக்கப்பட்டது. 1882இல் விஜயநகர ராஜா ரெட்ஹில்ஸ்- இலிருந்து மருத்துவமனைக்குத் தண்ணீர் கொண்டுவரும் செலவை ஏற்றுக்கொண்டார்.

மருத்துவமனைகள் பற்றிய 1876ஆம் ஆண்டு அறிக்கையில் சர்ஜன் ஆர்.வி. பவர் இந்த மருத்துவ மனை வடக்கு கறுப்பர் டவுன் மருத்துவமனை என்றே குறிப்பிடுகிறார். 1873-74இல் 9608 பேர் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 9579 பேர் குணமடைந்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பல்வேறு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும் அவரது அறிக்கை அறிவிக்கிறது.

**ஸ்டான்லியுடன் ஆர்.எஸ்.ஆர்.எம்.**

1880இல் ராஜா சர் ராமசாமி முதலியார் நோயாளிகள் தங்கும் மருத்துவமனை இவர் பெயரைத் தாங்கி இம்மருத்துவமனையுடன் இணைத்துக் கொண்டது. இதுவே இன்றும் ஸ்டான்லி மருத்துவ மனையுடன் இணைந்த மகப்பேறு மருத்துவ மனையாக ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

1910ஆம் ஆண்டு இந்த நிறுவனம் அரசு கட்டுப்பாட்டின் கீழ்வந்தது.

மணியக்கார சத்திரத்தில் கட்டடங்களைக் கட்டிப் பெரிதாக்க எண்ணிய அரசு அதன் பெயரை அரசு இராயபுரம் மருத்துவமனை என மாற்றி வெங்கடகிரி ராஜா சத்திரத்திற்கு அருகில் வரிசையாக கட்டடங்களைக் கட்டியது. (Madras discovered P. 335)

கட்டடம் கட்ட மறைமுகமாக உதவியவர் அப்போது கண்காணிப்பாளராகச் சத்திரத்தில் பணிபுரிந்த கோஷன் (Coshan) என்பவராவார். ஏனெனில் இவரே இச்சத்திரத்திற்கு மருத்துவம் பார்க்க வரும் நோயாளிகளின் எண்ணிக்கைகளைப் புள்ளி விவரத்தோடு பட்டியல் தயாரித்து மருத்துவ மனையைப் பெரிதாக்க வேண்டிய தேவையை

அரசினருக்கு உணர்த்தி நம்ப வைத்தவர். இதற்கு அச்சமயத்தில் சிறப்புடன் பணிபுரிந்த ஆட்சிப் பொறுப்பாளர் சர்ஜன் ஜெனரல் வில்லியம் பானர்மேன், நேருதவி செயலர் சர் அலெக்சாண்டர் கார்டியூ ஆகிய இருவரும் பெரிய அளவில் மருத்துவ மனை உருவாக்க உதவி செய்தனர்.

இப்புதிய மருத்துவமனையை உருவாக்க சத்திரத்திற்கு அருகில் பெரிய அளவில் இடமும், துணை இராயபுரம் மருத்துவப்பள்ளியும் (1877) இருந்தது மேலும் பயன் அளித்தது. இப்பள்ளியில் தான் மருந்தாளுநர்களுக்கும், சப் அசிஸ்டண்ட் மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. மிகக் குறைந்த வசதிகளுடன் அதாவது பாடம் கற்பிக்க இரண்டு மைக்கிராஸ்கோப்புகளுடன் இருந்தது. இதில் ஒன்று மாவட்ட மருத்துவர் மட்டும் பயன்படுத்தும் விதத்தில் பூட்டு சாவியுடன் இருந்தது.

### கவர்னர் கார்மிஷல் உத்தரவும் பயனும்

சத்திரத்தின் பழைய கட்டடத்தில் 51 படுக்கைகள் ஆண்களுக்கும், 24 பெண்களுக்கும் இருந்த நிலையில் கவர்னர் லார்ட் கார்மிஷல் (Carmichael) 1912ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்பார்வையிட வந்த பொழுது இம்மருத்துவமனை பழைமையானதாக நவீன வசதியின்றி நடைபெறுவதாகக் கூறியதோடு மட்டுமின்றி, புதிய கட்டடங்களைக் கட்டி மருத்துவ மனையை நவீன வசதிகளுடன் நடைபெற வேண்டும் என்று கூறியதன் விளைவாக, 135 படுக்கைகளுடன், ஒரு நவீன அறுவை அரங்குடன் ஒரு நடுத்தர மருத்துவ மனை கட்ட மூன்று லட்சம் ரூபாய் அளிப்பதாக அரசு ஒப்புதல் அளித்தது.

### 1913இல் அடிக்கல் நாட்டவில்லை என்றால் இன்று ஸ்டான்லி என்னவாகி இருக்கும்?

அதன்படி 1913ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று ஆளுநர் பென்லாண்ட், ராயபுரம் மருத்துவமனைக்கும் மருத்துவப் பள்ளிக்கும் அடிக்கல் நாட்டினார். அந்த ஆண்டு அடிக்கல் நாட்டப்படாது போயிருந்தால் ஸ்டான்லி மருத்துவமனை என்று இன்று கொடி கட்டிப் பறக்கும் மருத்துவமனை ஒரு கனவாகிப் போயிருக்கும். இது ஏன் என்பதற்கான காரணத்தை 1913இல் மருத்துவராகப் பணியில் சேர்ந்து பிறகு ராயபுரம் மருத்துவப் பள்ளிக்குக் கண்காணிப்பாளரான கர்னல் ஆர். பிரைசன் (Bryson) கூறுகிறார்: "அடிக்கல் மட்டும் நடப்படாமல் இருந்திருப்பின் 1914இல் முதல் உலகப் பெரும் போரின் நெருக்கடியான காலத்தின் காரணமாக நிச்சயமாக இது முழுவதுமாகக் கைவிடப்பட்டிருக்கும். மேலும் பழைய தோட்டா தொழிற்சாலையில் (ராயபுரம் மருத்துவப்பள்ளியில்) படிப்பவர்களுக்கும் இது பயன் தந்திருக்காது." என்று காலத்தின் விளைவை விளக்குகிறார். (Shobana Menon, p. 9)

1917ஆம் ஆண்டு மருத்துவமனை ரூ 3,56,750க்குக் கட்டிமுடிக்கப்பட்டு, இதன் முதல் கட்டடமான பென்லாண்ட் (Pentland) வளாகம் லார்ட் பென்லாண்டால் 1917 ஜூலை 17ஆம் தேதி 72 ஆண், 72 பெண், 16 குழந்தைகள் படுக்கை வசதியுடன் திறக்கப்பட்டது. இதுபோல வெளிநோயாளி பிரிவில் பழைய கருப்பர் நகரம் மருந்தகம் என்றிருந்தது ஜார்ஜ் டவுன் மருந்தகமாகப் பெயர் மாறியது. பிறகு பல மாறுதல் வார்டுகள் அமைப்பதில் நிகழ்ந்தன. இதில் குறிப்பிடத்தக்கது இரண்டாவது வளாகம் பனகல் அரசரால் திறக்கப்பட்டதாகும்.

### துணை மருத்துவப்பள்ளி - இராயபுரத்தில்

இப்பள்ளி 1957இல் மதராசில் ஏற்பட்ட பஞ்சத்தின் பொழுது குறைவுபட்ட கீழ்மட்ட மருத்துவப் பணியாளர் சூழாமை வலுப்படுத்த தொடங்கப்பட்டது. இது 1879இல் மதராஸ் மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருந்தது. பிறகு 1883 மருத்துவக் கல்லூரியில் இக்கீழ் மட்ட பணியாளர் துறை ஒழிக்கப்பட்டு, மருத்துவமனை உதவியாளர்களை (Hospital Assistants) உருவாக்க நிரந்தர நிறுவனத்தை நிறுவியது. இவர்கட்குக் கற்பிக்க முறையே ஒரு கண்காணிப்பாளர், அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவத்திற்குப் பேராசிரியர்களும் மற்றும் ஐந்து போதகர்களையும் நியமித்தது. மருத்துவமனை உதவியாளர்கள் போட்டித் தேர்வு மூலமாகவே படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவர்கள் மூன்று ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்னரே, மருத்துவமனை உதவியாளர்கள் நிலைக்குத் தகுதி யடைந்தனர். இவர்களுக்கு ராயபுரத்தில் மருத்துவ மனையும், மணியக்கார சத்திர மருத்துவமனையும் மருத்துவம் கற்க உதவின. 1833-34இல் இங்கு 86 மாணவர்கள் பயின்றனர். (Madras Presidency Manual, Vol. II P. 554)

ராயபுரம் துணை மருத்துவப் பள்ளியைப் போலவே, மதராஸ் மருத்துவப் பள்ளியிலும், இராணுவத்திற்காக, 1835 மருத்துவக் கீழ் பணியாளர் களை உருவாக்க, திறக்கப்பட்டுப் பிறகு 1856இல் இது கல்லூரி ஆகி அபோதகிரி. டிரசர் என்ற மருத்துவ உதவியாளர்களை உருவாக்கியது. இதை 1910இல் நிறுத்தி மருத்துவமனை உதவியாளர் என்ற பொது பெயருடன் பயிற்சியளித்தது. இந்தத் துறை மருத்துவக் கல்லூரியிலிருந்து ராயபுரம் துணை மருத்துவப் பள்ளிக்கு 1882இல் மாற்றலாகி 1887 வரை நடைபெற்றது. பிறகு மீண்டும் மதராஸ் மருத்துவக் கல்லூரிக்கு மாற்றலாகி, திரும்பவும் 1903 ராயபுரம்

மருத்துவப் பள்ளி என்ற புது நிர்வாகத்திற்கு மாற்றலானது. இந்த ராயபுரம் மருத்துவப் பள்ளி கிழக்கிந்திய கம்பெனியின் பழைய தோட்டா தொழிற்சாலையில் செய்த சில அடிப்படை மாறுதல்களுக்குப் பிறகு நடைபெற்றது. இதன் பிறகு இது மிகவும் பிரபலமாகி தனியார் பலர் இதில் மாணவர்களாகச் சேர்ந்தனர். 1911ஆம் ஆண்டில் மருத்துவ உதவியாளர்கள் என்பது சப் அசிஸ்டண்ட் சர்ஜன் என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்டது. அதன் பிறகு, 1912ஆம் ஆண்டு இந்தப் பள்ளியில் தேர்வானவர்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் எல்.எம்.பி, (Licensed Medical Practitioner) என்று போட்டுக் கொள்ளலாம் என்று அரசு அறிவித்தது.

இப்படிப்பு படிக்கக் குறைந்த அளவு எஸ்.எஸ்.எல்.சி., தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை 1915ஆம் ஆண்டிலிருந்தே அமல்படுத்தப் பட்டது. பள்ளி ஆரம்பித்த காலத்தில், எல்லாருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும் இவர்கள் பட்டம் பெற்ற பிறகு, அரசில் பத்து ஆண்டுகள் கட்டாயம் வேலை செய்ய வேண்டும். தவறினால் ரூ. 1000 கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். ஆனால் அரசிற்கான தேவை குறைந்தபிறகு, சொந்தமாக மருத்துவம் பார்க்கும் ஆர்வம் அதிகரித்ததினாலும், பணி முறை சாராத தனிப்பட்ட மாணவர் சேர்க்கை அதிகரித்தது. இதன் காரணமாக அரசில் வேலை செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்கான விதி 1920 நீக்கப்பட்டது. (The Higher Education in South India, p. 232)

இந்தப் பள்ளியில் 1904-1920 வரை பர்மா மருத்துவ சேவைக்கும் இங்கே பயிற்சி அளிக்கப் பட்டது. பிறகு ரங்கூனில் மருத்துவப் பள்ளி 1920இல் ஆரம்பிக்கப்பட்டபின், இங்கு ரங்கூன் மாணவர்கள் வருகை நிறுத்தப்பட்டது.

ராயபுரம் மருத்துவப் பள்ளியில் 1933இல் அரசு 5 ஆண்டு டி.எம். & எஸ். (D.M.&S) தரம் உயர்ந்த படிப்பைத் துவங்கியது. ஏனெனில் இது இங்கிலாந்து ராயல் கல்லூரியில் பெறும் பட்டச் சான்றிதழுக்கு இணையானதாக இருக்க வேண்டும் என்பதினாலாகும். இந்தப் பட்டச் சான்றிதழ் படிப்பை மதராஸ் மாகாண ஆளுநர் சர் ஜார்ஜ் ஃபிரடெரிக் ஸ்டான்லி தொடங்கி வைத்தார். இத்துடன் ராயபுரம் மருத்துவப் பள்ளி என்ற பெயரை ஸ்டான்லி மருத்துவப் பள்ளி என மாற்றவும் இசைவளித்தார். இதன்படி அரசாணை எண் 792 பொது சுகாதாரம் (G.O. No. 792, P.H.) 1941 பிப்ரவரி 25ஆம் தேதி ஆணைப்படி எல்.எம்.பி., என்பது டி.எம். & எஸ். (Diploma in Medical and Surgery) என்று மாற்றப்பட்டது.

ஸ்டான்லி மருத்துவப் பள்ளியின் அடுத்த மைல் கல்லாக 1938இல் ஸ்டான்லி மருத்துவப் பள்ளி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியாக மலர்ந்தது. கல்லூரியின் தொடக்கவிழா இக்கல்லூரியின் பழைய மாணவரான அப்போதைய மதராஸ் மாகாண காங்கிரஸ் அரசின் நலவாழ்வுத் துறை அமைச்சரான டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜனால் 1938 ஜூலை 2ஆம் தேதி திறக்கப்பட்டது. இதன் பிறகு கல்லூரி மதராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, டி.எம். & எஸ். பட்டச்சான்றிதழ் படிப்பு நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் ஐந்தரை ஆண்டு எம்.பி.பி.எஸ். படிப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் 1 இராணுவ மாணவரும், 60 சுதேசி மாணவர்களும், (பெண்கள் உட்பட) அனுமதிக்கப்பட்டனர்.

கல்லூரி தொடங்கிய காலத்தில் அதற்கு வேண்டிய கட்டடங்கள் இல்லை. ஆகவே உடல்கூறு, உடல் இயங்கியல், உயிர் வேதியல், கரிம வேதியல் ஆகியவை மதராஸ் மருத்துவக் கல்லூரியிலேயே அம்மாணவர்களுடன் சேர்ந்து இவர்களும் கற்க வேண்டியதாய் இருந்தன. இருப்பினும், இப்படிப் படித்த முதல் செட் மாணவர் டி.எஸ்.கல்யாணம் என்பவரே பல பதக்கங்களை வென்றார். 1948இல் எம்.டி., எம்.எஸ் என்ற முதுநிலைப் படிப்புகள் தொடங்கப்பட்டுத் தனித்து இயங்கியது.


ஸ்டான்லியில் உடல்கூறு, உடல் இயங்கியல்களுக்குப் புதிய கட்டடங்கள் 1950இல் 95 லட்ச ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டது. ஆகவே மாணவர்கள் மதராஸ் மருத்துவக் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டிய கட்டாயத்திலிருந்து மீண்டு, எல்லாப் பாடங்களையும் ஸ்டான்லியிலேயே படிக்கத் தொடங்கினர். முதல் ஆண்டு எம்.பி.பி.எஸ்., மாணவர் எண்ணிக்கை 72இலிருந்து 100 ஆக உயர்ந்தது. உடல்கூறு, உடல் இயங்கியல் வளாகத்தை 1950 செப்டம்பர் 7ஆம் தேதி நலவாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் திறந்து வைத்தார்.

1952இல் உடல்கூறில் எம்.எஸ்.சி. மற்றும் முனைவர் பட்டமும் நடைபெற்றது. (Shobana Menon, p. 16)

ஸ்டான்லி மருத்துவமனையை ஒட்டி ராஜா வெங்கடகிரி சத்திரம் உள்ளது. இதில் வசிப்பவர்கள் இறந்தால், இவர்களின் உடல் ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டு, உடல் கூறு இயல் மாணவர்களுக்குப் பயன்பட வேண்டும், என்ற ஒரு விதி உண்டு. அரசர் வெங்கடகிரி நீதிக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் நீதிக்கட்சியின் சென்னை கூட்டமைப்பு மாநாட்டிற்குத் தலைமை வகித்தார் என்பது ஒரு கூடுதல் செய்தியாகும். ●

NCBH

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





**இலக்கியத் திறனாய்வில் சமூகவியல் அணுகுமுறை**
**துரை சீனிச்சாமி**
விலை ₹ 265/-




**சூழல்மொழி**
**த.சித்தார்த்தன்**
விலை ₹ 100/-




**பரமாத்து விதம்**
**முப்பால்மணி**
விலை ₹ 180/-





**கவிமணி வரலாற்றாய்வாளர்**
**அ.கா.பெருமாள்**
விலை ₹ 85/-





**மனிதனுக்கு மரணமில்லை**
**த. ஸ்டாலின் குணசேகரன்**
விலை ₹ 230/-




**பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்**
முனைவர் **ச. சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ 160/-




**சுற்றுச்சூழலும் அழகியலும்**
முனைவர் **க.குளத்தூரான்**
விலை ₹ 175/-




**வினைப் பாகுபாட்டில் எச்சங்கள்**
**முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ 240/-




**செவ்விலக்கியம் சில பார்வைகள்**
**ந. இரகுதேவன்**
விலை ₹ 100/-

# பரிமேலழகர் எதிர் கொண்ட உலகாயதம்

கி.முப்பால்மணி



**த**மிழில் திருக்குறள் ஒரு சிறந்த நீதி நூல், திருவள்ளுவர் எழுதிய இந்த நூலினுக்குப் பரிமேலழகர் தந்த உரையானது விழுமியதாகப் போற்றப்படுகின்றது. பரிமேலழகர் உரைக்குக் கூட ஒரு உரையானது காணப்பட்டு நிலவுகின்றது. இந்த வகையான உரைக்கு டீகை என்று பெயர். நுண்பொருள் மாலை என்ற பெயரினில் திருமேனி இரத்தின கவிராயர் என்ற அறிஞர் பரிமேலழகர் உரைக்கு டீகை வகையான ஓர் உரை கண்டுள்ளார். அதோடு மட்டும் அல்லாமல் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரை, தமிழ்ச் சங்கத்தில் உயர்புலவராக விளங்கிய மகாவித்துவான் ரா. ராகவையங்கார் அவர்கள் உரை தேற்றம் என்ற நூலைப் பரிமேலழகர் உரைக்குத் தெளிவுரையாக நல்கி உள்ளார்.

**ஊர்**

பரிமேலழகர் வாழ்ந்த ஊர் காஞ்சிபுரம் என்று தொண்ட மண்டல சதகம் சொல்கின்றது. திருக் காஞ்சி வாழ் பரிமேலழகர் என்று அந்த நூல் சுட்டுகின்றது. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள ஏட்டுப் பிரதியில் பரிமேலழகர் உரை பற்றிப் பேசும்போது ஒக்கை, ஒக்கூர் என்று அந்தப் பிரதி காட்டுகின்றது. மதுரை மாவட்டத்தில் அப்படி ஓர் ஊர் உண்டு. ஆதலால் ஒக்கூர் காவலன் என்று புகழ்ந்து உரைக்கப் படுகிறார்.

**காலம்--திருவள்ளுவர்**

திருவள்ளுவருடைய காலம் கி.பி. 20 அல்லது கி.பி. 30 என்று கணக்கிடுவதை விட்டு, அவருடைய சிந்தனை அகன்று விரிந்து இருந்த காலமாகக் கி.பி. 001இல் இருந்து கி.பி. 500 வரைக்கும் திருவள்ளுவரது காலம் என்று கொள்வது உசிதமானது. அந்தக் கால கட்டத்தினில் தமிழகத்தினில் யவனருடைய மெய்யியல் வீறு கொண்டு உலவியது. வணிகம் புரிய வந்த யவனர் கடவுள் இல்லை என்று உரைப்போரை எதிர்த்தனர். சிலை வணக்கத்தை எதிர்த்தனர். பிற கடவுளரை மெய்யான கடவுள் என்று மதிக்க வில்லை. இதற்கான ஆதாரங்கள் நமக்கு இங்குக் கிடைக்கவில்லை. ஆனால், யவனர் அவர்களது தாய் நாடுகளில் தொகுத்தும், வகுத்தும் பாதுகாத்தனர். அவை இன்றும் உண்டு. கிரேக்கம், எகிப்து நாடு களில் உள்ள நூலகங்களில் அவை அணி செய்கின்றன. அன்றைய யவனருடைய கருத்தியல்கள் இன்றும் பேணப்பட்டுத் திகழ்கின்றன. அவர்கள் சித்திரிக்கும் கடவுள் படைக்கும் ஆற்றல் நிறைந்தவர். உருவம் இல்லாதவர். தமிழ்நாட்டினில் மணிமேகலை காப்பியத்தில் கந்திற் பாவை வருவது உரைத்த காதையில்(92--102) நான்கு கருத்தியல்கள் உரைக்கப் படுகின்றன. ஒன்று, உருவம் இல்லாத கடவுள் உருவம் உள்ள பொருள்களைப் படைக்கின்றது. இரண்டு, உருவம் உள்ள கடவுள் உருவம் உள்ள பொருள்களைப் படைக்கின்றது. மூன்று, வினையில் நீங்கியவன் உலகத்து உச்சியில் இன்பமுடன் திகழ்வான். நான்கு, பூதங்கள் சேர்க்கையால் அனைத்தும் உள்ளன என்பன அவை. இந்தக் கருத்தியல்களைப் போதித்த சான்றோர்கள் அப்போது வஞ்சி மாநகரினில் நிலவினர். திருவள்ளுவருடைய காலநிலையினில் இந்த நான்கு கருத்தியல்கள் மேலோங்கித் திகழ்ந்ததாகக் கொள்ளலாம். இந்த நான்கினில் யவனருடைய உருவம் இல்லாத கடவுளைத் ‘தன்னுரு இல்லோன்’ எனவும், உருவம் உள்ள கடவுளை ‘இறைவன் எங்கோன்’ எனவும் மணிமேகலை சுட்டி உரைக் கின்றது. இந்த நான்கு கருத்தியல்கள் திருவள்ளுவர் காலத்தில் ஒளியுடன் விளங்கின.

ஆனால், திருவள்ளுவர் படைப்புத் திறன் கொண்ட படைப்புக் கடவுளைப் போற்றவே இல்லை. இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்(1062) என்பது அனைவரும் அறிந்ததே. உயிரானது பிறப்பு நிலையில் இருந்து பிறவா நிலை அடைய வேண்டும் என்ற பொருளில் தான் தன்னுடைய முப்பாலினை உலகுக்கு நல்கினார். பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு(358). சமணர் மற்றும் பௌத்தர் கூட பிறப்பினைப் பேதைமையானது என்று விவரித்தனர். இவர்கள் கூட மீண்டும் பிறக்காமல் இருப்பதற்காகவே ஐந்து புலன்களையும் வெல்ல ஓர் இடம் நாடினர். உடல் வேறு, உயிர் வேறு, இரண்டும் தனித்தனி என்ற நிலையினில் மட்டுமே உயிர் மட்டும் மீண்டும் பிறக்காமல் இருப்பதை நாட இயலும். அப்படி ஒரு ஞானத்தைக் காண இயலும். இந்தப் பிறவா நிலையே உயிரினது குறிக்கோள் எனத் திருவள்ளுவர் தமது நூலினை இயற்றினார். படைப்புக் கடவுளை அவர் உடன்படவே இல்லை. அப்படிப்பட்ட கடவுளிடம் இருந்து வந்து மீண்டும் இந்தக் கடவுளை அடைவதே பிறப்பின் நோக்கம் என்பதை அவர் போற்றவே இல்லை.

அதே நேரத்தில், கணவன், மனைவி, மக்கள், சந்ததி இல்லறத்தின் அணிகலன் எனப் போற்றினார். இது சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த ஒன்று, ஏனென்றால் சமண ஞானியான குந்தகுந்தர் திருக்குறளினை அளித்தார் என்ற கருத்து சமண சமூகத்தில் இன்றும் வலிமையோடு நிலவுகின்றது. குந்தகுந்தர் திகம்பரர், கருத்தியல் பாங்கினில் திகம்பரர் தமது சொந்தத் தவவாழ்வினில் பெண்ணையும், சந்ததியையும் போற்றுவது இல்லை. பிறவா நிலை எய்த வேண்டும் என்பதற்காகப் பிறப்பிக்காமல் திகழ்பவர்கள். ஆனால், திருவள்ளுவர் இல்லறவியல் கண்டார். நன்மக்கட் பேற்றை மன்னுயிர்க்கு எல்லாம் இனிது எனப் போற்றினார்.

**காலம்--பரிமேலழகர்**

திருவள்ளுவருக்குப் பிறகு, கி.பி. 900--கி.பி. 1400 எனப் பொதுவாகப் பரிமேலழகருடைய காலத்தை உரைப்பது உசிதமானது. அந்த நூற்றாண்டுகளில் வைணவ ஆச்சாரியர் வாழ்ந்தனர். ஆச்சாரியர் களுடைய கருத்தியல் விதந்து காட்டத்தக்கது. அவர் திருமாலினுடைய மேனி அழகிலும், செயல் அழகிலும், குண அழகிலும் ஆழ்ந்து ஆழ்ந்து பரவசப் பட்ட ஆழ்வார்களது பாடல்களில் விளங்கும் நுண்பொருளை உணர்ந்து விவரித்தனர். ஆச்சாரியர் அப்படி உணரும் பொழுது தேகாத்ம வாதத்தையும்,

சுதந்தர சிந்தனையையும், பிற கடவுளரையும் மறுத்தபடி உணர்ந்தனர். இது மிகவும் குறிப்பிடத் தக்கது. இந்த மூன்று கருத்தியல்களை முன்னிட்டுக் கொண்டு பரிமேலழகரது திருக்குறள் உரையினை உற்று நோக்கினால், இந்த மூன்று கருத்தியல்கள் அதில் பொலிவு பெறவில்லை. ஆனால், நாத முனிகள் எழுதிய யோகரகசியம் நூலினைச் சார்ந்து, யோக முதிர்ச்சியை வாழ்வியல் எல்லையாகத் தமது தமது உரையினில் மேற்கொண்டார்(343.353.359). இது பரிமேலழகர் உரை பற்றிய பொதுவான மதிப்பீடு.

பரிமேலழகர் தமது உரையினில் சாங்கியத்தை உடன்பட்டுக் கொள்கிறார். நீத்தார் பெருமை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு(27). இந்தக் குறட்பாவினது உரையினில் மூலப்பகுதி (மூலப்பிரகிருதி) மற்றும் புருடன் எந்த ஒன்றில் இருந்தும் தோன்றாமை யானும் என்று விவரித்தார். மூலப்பிரகிருதி, புருடன் (ஆன்மா) இவை இரண்டும் அநாதியானவை. இவை கடவுளால் தோற்றுவிக்கப்படாதவை. என்றும் இருப்பவை. இஃது ஈஸ்வர கிருஷ்ணரது சாங்கிய தத்வ காரிகா நூலில் உள்ள மூன்றாவது சுலோகம். இருந்தாலும், பரிமேலழகர் பரிபாடலில் திருமாலைப் படைப்புக் கடவுளாகப் போற்றினார்.

நியாயம், சமணம் ஆகியவற்றின் வழிநின்றும் கூடப் பரிமேலழகர் தம்முடைய உரையைப் பொலிவு செய்தார். நல்ஆற்றான் நாடிஅருள் ஆள்க. பல்ஆற்றான் தேரினும் அஃதே துணை(242). நல்ஆற்றான் என்ற சொல்லினுக்கு அளவைகளானும் நன்றான நெறி என அளவையியலையும் உடன் இணைத்துக் கொண்டார். மேலும், தெரிந்து தெளிதல் அதிகாரத்தின் முன்சொல் விளக்கத்தில் அமைச்சர் முதலானோரைப் பிறப்பு, குணம், அறிவு செயலையும் காட்சி, கருத்து, ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல் என்று அளவியல் சூழ்ந்த முறையியலைக் கைக் கொண்டார். காட்சி, அனுமானம், பிறர் கூறும் பேச்சுக்கள் இவை மூன்றும் சமணநெறியின் அளவை களும் ஆகும். அருத்தாபத்தி, அனுபலப்தி ஆகிய நியாய உறுப்புக்களைப் பரிமேலழகர் கையாள வில்லை. சமண நெறியினை அனுசரித்துக் கொண்டார். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார். களவின்கண் கன்றிய காதலவர்(286) என்ற குறளினில் பயிலப்படும் அளவின்கண் நின்று ஒழுகல் என்ற தொடருக்குத் தனக்குப் போதுமான, சிக்கனம் அளவில் வாழாதவர், வரம்புக்குள் நிறுத்தி வாழாதவர் களவு செய்கிறார்கள் என்று தற்காலத்தில் பொருள் உரைப்பர். பரிமேலழகர் உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறி என்று அளவையியலை, தர்க்கவியலைக் கைக் கொண்டார். உயிர்ப் பொருள், இதனுடன் அநாதியாகவே வருகின்ற நல்வினை, தீவினைக்கு உற்ற விளைவுகளையும், அவற்றான் உயிரானது நாற்கதியுள் (நரகர், விலங்கு, மக்கள், தேவர் பிறப்புகளில்) பிறந்து, இறந்து வருதலையும், அது செய்யாமல் (அவ்வாறு வராமல்), அவற்றைக் கெடுத்தற்கு (பிறப்பு, இறப்பை) உபாய மாகிய யோக ஞானங்களையும், அவற்றான் அஃது (உயிர்) எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல் என்று விரிவுரை தந்தார். இப்படி அறிவதற்குச் சமண ஞானியர் ‘தரும தியானம்’ என்பர். பிறப்பு, இறப்பு மீண்டும் பிறப்பது என்பதில் இருந்து விடுபட உயிரினை அளவையியல் முறைப்படி அளந்து அறிய சமண நெறியினில் யோகஞானம் வழியை அளந்து நிற்பவர் களவு செய்ய விழையார் என்பது பரிமேலழகர் உரை நுட்பம். தரும தியானம் என்பது சமணர் போற்றும் ஒழுக்கம். “தத்துவார்த்த சூத்திரம்” சமண ஞானியான உமாஸ்வாதி போதித்தது. “பிரவசன சாரம்” குந்தகுந்தர் உரைத்தது. இவைகளில் தரும தியானம் விளக்கப்பட்டு உள்ளது. இவைகளை அனுசரித்து பரிமேலழகர் உரை கண்டார். பிறப்பு, இறப்பு வினைகளில் இருந்து விடுபட சமண ஞானம் கண்டவர் களவுத் தொழில் செய்யமாட்டார்.

**சங்கரர் மற்றும் பௌத்தத்தை மறுத்தல்**

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு(355). கண் முன்னே ஒரு பொருள் உள்ளது. அது எந்தவொரு இயல்பினைக் கொண்டதாகத் தோன்றினாலும். அப்படித் தோன்றியபடியே பார்த்து அறியாமல். அந்தப் பொருளின்கண் நின்று உள்ள உண்மையாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வு எனப் பரிமேலழகர் உரை காண்கிறார். ஒரு பொருளை ஐம்புலனால் உணர்ந்ததை அறிவு என ஏற்காமல், அந்தப் பொருளின் கண்ணே பொலியும் மெய்ப் பொருளினை அறிவதே மெய்யுணர்வு ஆகும். ஒரு பொருளின் உள்ளே துலங்குவதே மெய்ப்பொருள் என்பது பரிமேலழகரது உரையினது உட்கிடை, கண்முன்னே தோன்றும் ஒரு பொருளில் பலவற்றைக் கற்பித்துக் கொண்டு உலகத்தார் நிலவுகின்றனர், அந்தக் கற்பிதங்களைக் கழித்து விட்டு உண்மையைக் காண்பது என்பது அவரது அணுகுமுறை, கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பது அந்தத் தலைவன் பெயர். இதனில்,(கோ) அரசன் என்பது ஓர் சாதி, சேரமான் என்பது குடி, (யானைக்கண்) வேழ நோக்குடையான் என்பது வடிவம், சேய் என்பது இயற்பெயர். மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பது சிறப்புப் பெயர். இவை ஒரு பொருளின்கண் தோன்றியுள்ள

கற்பனைகள். காதினால் கேட்கப்படும் அல்லது கண்ணால் காணப்படும் பொருளை அப்படியே உணரக் கூடாது. இதனை நிலம் முதல் உயிர் ஈறாக உள்ள தத்துவங்களின் தொகுதியாக உணர வேண்டும். அதன் பிற்பாடு, நிலம் முதலாகக் கொண்டு தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு சென்றால், காரணம், காரியம் இரண்டும் இன்றி முடிவாய் நிற்கும். இதனுள், பரிமேலழகர் சங்கர அத்தியாச வாதம், பௌத்த பஞ்ச கற்பனை, சாங்கிய சற்காரிய ஒடுக்கமுறை ஆகியனவற்றைக் கைக்கொள்ளுகின்றார். கண்முன்னே தோன்றும் ஒரு பொருளை இன்னொன்றாகக் காண்பது அத்தியாசம், காணப்படும் ஒன்றின்கண் நிலவும் பொருள், பெயர், சாதி, குணம், தொழில் ஆகியனவற்றைப் பஞ்சகற்பனை எனத் திந்நாகர் உரைத்தார். இஃது ஒன்று இன்னொன்றாகத் தோன்றுவதே ஆகும். இதில் இருந்துதான் சங்கரர் தமது அத்தியாச வாதத்தை உருவாக்கிக் கொண்டார். மூலப்பிரகிருதியில் இருந்து நிலம் முதலானவை தோன்றி, மீண்டும் தோன்றியவாறே ஒடுங்கி காரண, காரிய அற்ற நிலையில் முடியும் என்பது சாங்கியக் கபிலர் விளக்கம். பரிமேலழகர் ஒரு பொருளின் மெய்யுணர்வான நிலை என்பது காரண-காரியம் அற்ற முடிவுநிலை எனச் சாங்கியம் தழுவி உரை கண்டார். பொருளை அறியத் திந்நாகர் வழி சென்றால் சூன்யத்தில் முடியும், சங்கரர் வழி சென்றால் மாயையில் முடியும், கபிலர் வழி சென்றால் மூலப்பிரகிருதியில் முடியும், இப்போது உயிர்--புருடன்--பிறவா நிலையை எய்தும்.

**உலகாயதத்தை மறுத்தல்**

*பொருள் அல்லவற்றைப் பொருள்என்று உணரும் மருளான்ஆம் மாணாப் பிறப்பு(351).* இந்தக் குறட்பாவினில் பயிலப்படும் உணரும் மருள் என்ற சொற்றொடருக்கு விபரீதமாக உணர்தல் எனப் பரிமேலழகர் உரை கண்டார். தற்காலத்தில் தவறாக உணரும் மயக்க உணர்வு, பிறழ்ந்து உணரும் மயக்கம் எனப் பொருள் தந்தனர். பரிமேலழகர், விபரீத உணர்வாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் இல்லை எனவும், மற்றும் இத்தன்மையவும் சொல்லும் மயக்க நூல் வழக்குகளை மெய்நூல் வழக்கு எனத் துணிதல் என உரை கண்டார். இந்த மயக்க நூல்கள் பரிமேலழகர் காலத்தில் நிலவின. இவைகளை எழுதியவர் உலகாயத நெறியினர். இந்த விபரீத உணர்வை நீக்கி இருவினைப் பயன்களை உணர்ந்து மறுபிறப்பைத் தடுத்த படி இந்தப் பிறப்பை உணர வேண்டும். இந்தப் பிறப்பு துன்பமானது, இதை இன்பம் என்று உணர்தல் மயக்கம். குற்றியை மகன் என்றும், இப்பியை வெள்ளி என்றும், இவ்வாறே ஒன்றனைப் பிறிது ஒன்றாகத் துணிதல் விபரீதம். இஃது அத்தியாச வாதம். இருக்கும் ஒன்றினில் இன்னொன்றை ஏற்றிக் காண்பது அத்தியாசம். சங்கரர் கடைபிடித்தது. இவரது கயிற்று அரவு விளக்கம் உலகப் பிரசித்தம். பரிமேலழகர் உலகாயத நெறியினை மறுக்கப் போய் சங்கர நெறியைக் கைபிடித்து தமது உரைக்கு மேன்மை தேடிக் கொண்டார்.

*எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும் கள்ளாமை காக்க தன்நெஞ்சு(281).* எள்ளாமை என்ற சொல்லினுக்குப் பிறரால் இகழப் படாமை என்று தற்காலத்தில் பொருள் தந்துள்ளனர். வீட்டினை இகழாது எனப் பரிமேலழகர் உரை தந்தார். வீட்டினை இகழ்தலாவது? காட்சியே அளவையாவது என்றும், நிலம், நீர், தீ, வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றி, பிரிவால் மாய்வதாய உடம்பின் கண்ணே, அறிவானது மதுவின்கண் களிப்புப் போல வெளிப் பட்டு அழியும் என்றும், இறந்த உயிரானது பின் மீண்டும் பிறவாது என்றும், இன்பமும், பொருளும் ஒருவனால் செய்யப்படுவன என்றும் சொல்லும் உலகாயதம் முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். உடம்பு அழியும் போது உயிரும் அழியும். உயிரானது வீடுபேறு அடையாது. இப்படி உலகாயதம் உரைக்கும் நூல்களைக் கற்று, அவற்றினைச் சார்ந்து நின்று வீடு பேற்றினை இகழ்தல் என்பது பரிமேலழகரது உரைநயம். புறத்தே போகாது அகத்தேயே மடங்கி ஒரு தலைப்பட்டு உயிரையே உள்நோக்கி வாழும் துறவறத்தினர், உடல் வேறு. உயிர் வேறு, இரண்டும் தனித்தனி எனத் திகழ்பவர். இவரைப் போற்றும் பொருட்டு. உடலும், உயிரும் பிரிவற்றவை, உடல் மறைந்தால் உயிரும் மறையும் என உரைக்கும் உலகாயதரை மறுத்துப் பரிமேலழகர் உரை எழுதினார். உலகாயதம் உரைக்கும் நூல்கள் மயக்க நூல்கள். பரிமேலழகரது கருத்துப்படி இவை ஞானம் தரும் மெய்ந்நூல்கள் அல்ல.

*நில்லாதவற்றை நிலையின என்றுஉணரும் புல்லறிவு ஆண்மை கடை(331).* நில்லாதவற்றை என்ற சொல்லினுக்கு நிலை இல்லாதவைகள். மாறும் பொருள்கள் என்று தற்காலத்தில் பொருள் கொண்டு உள்ளனர். நிலையுதல் இலவாகிய எனப் பரிமேலழகர் பொருள் கண்டார். இந்தப் பிரபஞ்சம், இதில் நிலவும் பொருள்கள் தோன்றிக் கெடுவன. பிறந்து அழிவன. இதுவே நிலையாமை. இஃது ஒரு திறத்தார் கருத்தியல். இந்தப் பொருள்கள் தோன்றிக்

கெடுவன அல்ல, பிறந்து அழிவன அல்ல. இஃது இன்னொரு திறத்தார் கருத்தியல். இப்படி இரண்டு கருத்துத் திறத்தார் இந்தக் குறட்பாவில் காட்டப் படுகின்றனர். நிலையாமைக் கருத்தியலாளர் பலராவர். இந்தப் பொருள்கள் எல்லாம் கானல் நீரினில் தோன்றும் புனல் என மயங்குவர். இந்த மயக்கம் நீங்கி மெய்யுணரும் போது கயிற்றினில் பாம்பு போலப் பொய் என்பார் ஒரு தரப்பினர். இவர் வேதாந்திகள். நிலைவேறு பட்டு வருதலால் கணந் தோறும் பிறந்து இறக்கும் எனச் சொல்லுபவர் ஒரு தரப்பினர். இவர் பௌத்த நெறியினர். ஒருவாற்றான் வேறுபட்டும். ஒருவாற்றான் வேறுபடாமையும் உடையதால் நிலையானவை, நிலையற்றவை என இருதன்மையும் ஒருங்கே கொண்டு உள்ளன எனச் சொல்லுபவர் ஒரு தரப்பினர். இவர் சமண நெறியினர். இவர்கள் எல்லாரும் பொருள்கள் நிலையற்றவை என்பதில் உடன்பாடு கொண்டனர் அவர். இவர் களுக்கு மாறானவர் உண்டு. தோற்றம் உடையன கேடு அடைவது இல்லை என உரைப்பவர் அவர். இவர் உலகாயத நெறியினர். இப்படி இரு திறத்தார் இந்தக் குறட்பாவினால் பேசப்படுகின்றனர். திருவள்ளுவர் நிலையாமையைப் போற்றி இந்தக் குறட்பாவினை அமைத்துள்ளார். அதோடு மட்டும் அல்லாது பொருள்கள் நிலையானவை என உரைப்பது இழிபானது. துறவியர் ஏற்க மாட்டார். இது திருவள்ளுவர் சித்திரம். இதனைப் பரிமேலழகரும் இழிபு என்பதை ஏற்றபடியே புல்லறிவு என விரிவுரை கண்டார். இந்தப் புல்லறிவானது பிறவித் துன்பத்திற்கு அடிகோலும். இந்தப் புல்லறிவாளர் செல்வத்தையும். அதை அனுபவிக்க உடம்பையும் பற்றுக் கோடாகக் கொள்ளச் செய்யும் என்பது பரிமேலழகர் நுட்பம். இப்படிப் பற்றுக் கொண்டவர் உலகாயத நெறியினர். இல்லாளோடு கூடி வாழும் இல்லற நெறியினரும் கூட. செல்வத்தையும், உடம்பினையும் போற்றி வாழ்பவர்கள் இவர்கள். பிறவி என்பது இவர்களுக்கு ஏற்புடையதே, இன்ப மானதே. செல்வத்தை ஈட்டுவதுவும், சந்ததியை ஈன்று புறம் தருவதுவும் இந்த நெறிதனில் பொலிவு பெற்றதாகும். துறவியர் இவற்றைத் துறந்தவர். ஆதலால், இவற்றைப் போற்றும் இல்லறம் மற்றும் உலகாயத நெறியினரைப் புல்லறிவாளர், கடையது, இழிபு எனத் துறவியர் துறப்பர். என்றாலும், சந்ததி போற்றும் இல்லறத்தார் துறவியர்க்குத் துணை யாகவே நிற்பர். உலகாயத நெறியினர் துறவியரை வெறுத்ததாகத் தரவுகள் இல்லை. பரிமேலழகர் துறவியரைப் போற்றி, உலகாயத நெறியை விலக்கினார். இஃது அவரது உரை நுட்பம்.

### பரிமேலழகரது கருத்தியல் பொலிவு

அடல்வேண்டும் ஐந்தின் புலத்தை, விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு(343). வீடு பேறு அடைய விழைபவர் ஐம்பொறிகளுக்கு உரிய ஐம்புல நுகர்வுகளையும் விட்டுவிட வேண்டும். துன்பமும், பாவமும் தரும் தம்மோடு உடன் வராத நுகர்வுப் பொருள்களின் மேல் மனத்தினைச் செலுத்தாமல் ஞான யோகங்களின் பால் செலுத்த வேண்டும். கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார், தலைப்படுவர் மற்று ஈண்டு வாராநெறி(356). வீடு பேறு அடைந்த பின்னர், மீண்டும் இந்த உலகினில் வந்து பிறக்காத நெறிகளை ஒருவர் அனுபவம் உடைய தேசிகர்பால் உபதேசமொழிகளைக் கேட்டு, மெய்ப் பொருளை உணரவேண்டும். அப்போது அவர் மீண்டும் இந்த உலகினில் பிறக்காத வழியைக் காண்பர், ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின், வானம் நணியது(353). இந்தப் பிரபஞ்சம் மற்றும் உலகத்துப் பொருள்கள் உண்மையோ, பொய்யோ என இந்த இரண்டினில் எது உண்மை என்ற விவாதத்தில், எல்லாச் சமய நூல்களும் பேசுவது இயல்பு. அவை முதலில் பிறர் கருத்தியலை மறுத்து விட்டுத் தமது கருத்தியலை உண்மை நிலை என நிறுத்தும். இந்த நூல்களில் காட்டப்படும் கருத்துப் பொருள்களை பரிமேலழகர் வகைப்படுவது சிறப்பானது. ஒன்று: மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் இல்லை என்பது, இஃது உலகாயதம். இரண்டு: இல்லை என்பது, இதனை விரித்து இல்லையெனில் கானல்நீரோ, கயிற்றல் பாம்போ என விளக்கம் கோருவது. இது வேதாந்தம். உலகாயதம் அல்லது வேதாந்தம் இந்த ஒன்றினில் துணியாது நிற்பது. சமய நூல்கள் கூறுகின்ற பொருள் களுள் எந்தக் கருத்து உண்மை என நிகழ்வது ஐயம். யோக முதிர்ச்சி உடையார் தமது அனுபவத்தான் ஒன்றினில் துணிவு பெற்று, ஐயம் நீங்கி மெய் உணர்ந்தவர் ஆவர். அனுபவ உணர்வால் அடிபடப் பட இன்றைய நிலையினில் கடந்தகால உலகியல் உணர்வுகள் சிதைந்து(தூர்ந்து) நீங்கப் பெறுவதினால் ஐயம் நீங்கித் தெளிந்தவர் ஆவர். பொருள்கள் உண்மை அல்ல பொய் என்று உணர்ந்த இப்படிப் பட்ட யோக முதிர்ச்சி உடையவர்களுக்கு வீட்டு உலகமானது இந்த உலகினை விட அண்மையானது, ஐயஉணர்வு உடையவர் இந்த உலகினில் மீண்டும் மீண்டும் பிறப்பர் என்பது பரிமேலழகரது உரைநயம், உலகம் உண்மையானது என்று கூறும் உலகாயதம் நாடுவோர் மீண்டும், மீண்டும் பிறப்பர் என்பது அவரது உரையின் உட்கிடை.

புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு(340). உடம்புகளுக்குள் ஒதுங்கி இருந்து வெளியே போன உயிர்க்கு எப்பொழுதும் இருப்பதற்கான ஒரு இல்லம் இது வரையிலும் அமையவில்லை போலும் எனப் பரிமேலழகர் உரை கண்டார். ஓர் உயிரானது பல உடம்புகளுள் வாழ்ந்து வெளிவரும். உயிரினுக்குப் பல பிறவிகள் உண்டு என்பது இந்த உரையின் மூச்சு. முட்டை உயிருள்ள கருவோடு கூடிச் சேர்ந்தே வந்தது. ஆனால் கருவானது பறவையாக வளர்ந்த உடன் முட்டையைத் தனியே விட்டு விட்டுப் பறந்து போனது(338). முட்டை ஓட்டைப் பரிமேலழகர் கண்டு கொள்ளவில்லை. இருப்பினும் முட்டையை உடம்பாக உரைக்கின்றார். அந்த நிலையினில், முட்டையானது அசேதனம். அநித்த மானது. நிலையாமையானது. உயிரானது சேதனம். நித்தமானது. மேலும், அஃது அருவமானது என்பது அவரது உரை நுட்பம். உடம்பினுள் ஒதுங்கி இருந்த உயிரானது, வாதம் முதலான நோய்கள் நிலவும் வரை உயிரானது உடம்பினுள் இருக்கும். நோய்கள் சினந்து வெகுண்ட போது உயிரானது விட்டுப் போய்விடும். விட்டுப் புறப்படாது புகுந்து ஒதுங்கி இருக்க ஓர் இல்லம் அமைந்தால் பிறருடைய இல்லங்களுள் ஒதுங்காது. அப்படி ஓர் இல்லம் இல்லை என்பது பரிமேலழகர் உரையின் உட்கிடை. உயிரானது நித்தமாயது, நிலையானது. உடம்பானது அநித்தமாயது, நிலையற்றது. இப்படிப்பட்ட, உடம்புகளுக்கு இறப்பும், பிறப்பும் மாறி மாறி வருவன. ஆதலால், உயிர் என்ற பறவைக்கு நிலையாக இருப்பதற்கு ஓர் இல்லம் இதுநாள்வரை அமையவில்லை எனத் திருவள்ளுவர் வியப்பான வினாவினைக் கைக் கொண்டார். பரிமேலழகரும் நுட்பமான உரை கண்டார். உடம்பும், உயிரும் வினை வசத்தால் கூடி உள்ளன, அல்லாமல் இரண்டிற்கும் நட்பு இல்லை என்பது அறிக எனப் பரிமேலழகர் அறிவுறுத்தினார் (338). ஆகவே, உயிரோடு கூடி இருப்பதோர் உடம்பும் இல்லை. உடல்களுக்குப் பிறப்பும். இறப்பும் மாறிமாறி வருகின்றன. மாறிமாறி வரும் இவை இரண்டும், உயிரினுக்கு உரியன அல்ல(340). இவை விதந்து நோக்கத்தக்கன. பரிமேலழகரால் தமது உரையினில் முதல்நிலையில் வைத்து மறுக்கப்பட்ட உலகாயதமானது உரைக்கும் கருத்தியலை நோக்குவது ஈண்டுச் சீரியது. உடம்பின் பண்பாக இணைந்தே பிறக்கும் உயிரானது உடம்பு இறக்கும் போது உயிரும் அழியும். இன்னொரு உடலில் ஒதுங்காது, அதே சமயத்தில் இன்னொரு உயிருள்ள உடம்பைச் சந்ததியாகப் புறம் தந்து அழியும், இஃது உலகாயதம்.

உடல் தனி, உயிர் தனி என்பது திருவள்ளுவர் கருத்தியல். எனினும், உடம்பொடு உயிரிடை என்ன, மற்று அன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு என்பது அவர் சித்திரிக்கும் காதற் சிறப்புரைத்தல் (1122). பரிமேலழகர் இதனில் பிரிவு அச்சம் என்பதை உணர்ந்தார். இது காதல் அணைப்பின் நுட்பம். தலைமகன், தலைமகள் இருவரது இந்தக் கூட்டம் தெய்வப் புணர்ச்சி. இந்தத் தெய்வமானது காமக் கடவுள் ஆகலாம்(1197). உடல், உயிர் உறவைக் குறித்துப் பரிமேலழகர் கருத்து விதந்து சுட்டுவதற்கு உரியது. இரண்டும் தொன்று தொட்டு வேற்றுமை யின்றிக் கலந்து வருதல், இன்ப துன்பங்கள் ஒக்க அனுபவித்தல், இன்றியமையாமை என அந்த உறவிற்கு விரிவுரை கண்டார். உடல் மற்றும் உயிர் இவை ஒன்றுக்கு ஒன்று இன்றியமையாத இணைப்பு உறவுடன் திகழ்வன. இந்த உடலும், உயிரும் படைப்புக் கடவுளால் படைக்கப்பட்டவை என்பதற்குத் திருவள்ளுவர் ஆதரவு இல்லை. பரிமேலழகரும் அதனை அனுசரித்துக் கொண்டார். உடல் மற்றும் உயிர் இரண்டும் தொன்று தொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதல் என்ற பரிமேலழகர் விளக்கமானது உலகாயதத்திற்கு வலிமை தருவதாகும். அநாதி காலமாகவே உடலும், உயிரும் ஒன்றாக இணைந்தவை என்பது உலகாயதம்.

யோகமுதிர்ச்சி எனப் பரிமேலழகர், வெளிப் பொருள்களை விட்டுவிட்டு ஐம்புலன்களும் தம்வயத்தவை ஆதல் என விளக்கி அப்போது மனமானது மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணையின் கண் நிற்கும் என்று உரை விளக்கம் கண்டார்.(354). இஃது அட்டாங்க யோகம் சார்ந்தது. ஆசனம், இயமம், நியமம், இருப்பு (பிராணாயாமம்), பிரத்தயாகாரம்(உயிர்நிலை), தாரணை, தியானம், சமாதி என்பன அவை. இவற்றைப் பரிமேலழகர் ஏற்றார்(359). இந்த யோகநெறி ஒழுக்கமானது நாதமுனி அவர்கள் உரைத்த யோக ரகசியம் மற்றும் அவருடைய மருமகன் கீழையகத்து ஆழ்வான் எழுதிய ஸ்ரீ தர யோக கல்பகத்திரு ஆகியவற்றைச் சார்ந்தது ஆகலாம். இவற்றின் பயிற்சியில் பரிமேலழகர் உரைக்கும் உயிரினது வீடு பேற்று விளக்கத்தினை திருக்குறள் உரை நுட்பத்தில் போற்றி இருக்கலாம். ஏனெனில், இந்த நூல்கள் கிடைப்பது இன்று அரிதாக உள்ளது. இந்த நூல்களது பயிற்சி இன்று விளக்கமுற்றால் பரிமேலழகரது உரை நுட்பம் உணர்ந்து மகிழ மேலும் ஒளி கிட்டும். ●

# வரலாற்று இயங்கியல் பார்வையில் முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்

## சி.ஆர். ரவீந்திரன்




**மஹத்**
ஆனந்த் டெல்டும்ப்டே

**வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.,**
**அம்பத்தூர், சென்னை - 600 098**
**தொலைபேசி எண் : 044-26359906**
₹ 550/-

**கா**லச்சூழலுக்குப் பொருத்தமான வகையில் அடிப்படைக் கண்ணோட்டத்தின் போக்குகளிலிருந்து விழிப்புணர்வு பெரும் நோக்கத்தில் ‘மஹத்’ என்ற இந்த வரலாறு தகுந்த ஆவணங்களின் ஒருங்கிணைந்த ஒரு தொகுப்பாகக் கடந்த 2015ஆம் ஆண்டில் நூல்வடிவம் பெற்று வெளிவந்தது. மராத்தி மொழியில் எழுதப்பட்ட இந்த நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. தற்போது இந்த வரலாறு கமலாலயன் அவர்களின் கடுமையான முயற்சியால் தமிழில் வெளிவந்துள்ளது. இந்த வரலாற்றில் அடங்கியுள்ள ஆவணங்கள், அடிப்படையில் இயங்கியல் கண்ணோட்டத்துடன் விருப்பு வெறுப்பு இல்லாமல் தொகுக்கப்பட்டு ஒருங்கிணைந்த வகையில் வடிவம் பெற்றுள்ளது.

சாதி, மதம், இனம், மொழி, நிலம், நிறம் போன்ற வேறுபாடுகள் நிறைந்த இந்திய வாழ்க்கையை அறிவியல் கண்ணோட்டத்தில் விளக்கும் இந்த அரிய முயற்சி அடிப்படைக் கண்ணோட்டத்திற்கு எதிராக இருப்பதால் இந்தியாவின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் உள்ளது.

> **“மஹத் என்பது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல.**
> **அது, ஒரு சகாப்த காலத்திற்குத்**
> **தொடர் விளைவுகளை உட்பொதிந்து வைத்திருப்பதாகும்.**
> **நவீன காலங்களில் குடிமை உரிமைகளுக்காக**
> **நடைபெற்ற முதல் போராட்டங்களுள் ஒன்று.**
> **சுதந்திரமான தலித் இயக்கமொன்றின் தொடக்கத்தைக்**
> **குறிப்பதற்கான ஓர் அடையாளச் சின்னம் மஹத்.**
> **அது நிரந்தரமாக பாபா சாஹேப் அம்பேத்கருடன் இணைந்திருப்பது.”**

தனது முன்னுரையில், 'மஹத்' என்ற இந்த நூலின் தோற்றத்திற்கான காரணத்தை ஆனந்த் டெல்டும்ப்டே தெளிவுபடுத்துகிறார்: "தோழர். ஆர்.பி. மோரா அவர்களால் முதலாவது மஹத் மாநாட்டைப் பற்றி எழுதப்பட்ட விவரணையில் இந்த நூல் முதன்மையாக உத்வேகம் பெற்றது. அந்த மாநாட்டின் முதன்மை அமைப்பாளர் அவரே. அந்த மாநாடு தலித் மக்கள் தங்களுடைய குடிமை உரிமைகளுக்காக ஒரு காவியப் புகழ்வாய்ந்த போராட்டத்தை நடத்துவதற்கு இட்டுச் சென்றது. தோழர் மோரே, மஹத் மாநாட்டை நடத்துவதற்குத் தான் எப்படித் திட்டம் வகுக்க நேர்ந்தது என்பதை நினைவு கூர்ந்து கிட்டத்தட்ட 35 ஆண்டுகட்குப் பின்னால் ஒரு நீண்ட கட்டுரையினை மராத்தி மொழியில் எழுதியிருந்தார். அக்கட்டுரை மஹத்தில் உள்ள பாபாசாஹேப் அம்பேத்கர் கல்லூரியின் ஆண்டு மலரில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. பிற்பாடு அக்கட்டுரை ஒரு குறுநூல் வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டு, வரையறைக்கு உட்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டது. மராத்தி மொழி வாசகர்கள் கூட, அதைப்பற்றி அறிந்துகொள்ளாமல் தான் இருந்தார்கள். தலித் மக்களின் இந்த முதலாவது போராட்டத்தின் உருவாக்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் கொண்டிருக்கக் கூடிய ஒரு விரிந்த வாசகப் பரப்புக்கு மேற்கண்ட இந்த வரலாற்றைப் பூர்வமான ஆவணம் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்ற தேவை உணரப்பட்டது. அதன் காரணமாகவே அந்தக் கட்டுரை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது."

"இந்த நூலின் தொகுதிகளுடைய முக்கியத் துவம் எதுவெனில், டாக்டர் அம்பேத்கரின் வாழ்க் கையில் முக்கியமான நிகழ்வுகள் பற்றிய ஏராளமான தரவுகளை அவை உண்மையில் கொண்டுள்ளன என்பதே. ஆனால் பதிப்பாசிரியரின் மெருகேற்றலோ, ஆசிரியரின் மறு விளக்கமோ இல்லாமல் அப்படியே தரவுகளாக உள்ளன. இவையன்றி மராத்தியில் அங்கங்கே சிதறிக்கிடக்கின்ற பல குறிப்புக்களும் கிடைக்கின்றன. மஹத் மாநாட்டையும், அதேபோல சத்தியாக்கிரகத்தையும் அமைத்து நடத்திய பிரதான அமைப்பாளர்களுள் ஒருவரான ஏ.வி. சித்ரேவினுடைய வாழ்க்கை வரலாற்று நூல் அவற்றுள் ஒன்று. இந்த நூல் ஏனைய ஆவணங்களில் காணக்கிடைக்காத, தவறிப்போன அம்சங்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது, இவற்றோடு கூட, அரசாங்க ஆவணக் காப்பகமும், இந்தப் போராட்டம் பற்றிய ஆவணங் களைக் கொண்டிருக்கிறது என அறிய முடிந்தது. எமது, தேடல், ஆவணக் காப்பகத்தில் மிகப் பெரும் எண்ணிக்கை அளவுடைய ஆவணங்கள் இடம் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியது. குறிப்பாக முதல் மாநாட்டுக்குப் பிறகு, 'சத்தியாக்கிரக மாநாடு' என்றழைக்கப்படும் இரண்டாவது மாநாட்டை நடத்து வதைப் பற்றியவையாக இருந்த பல ஆவணங்கள் அங்கிருந்தன. காலனிய அரசு நிர்வாகம், இந்தப் போராட்டங்களை எப்படிப் பார்த்தது என்ற முக்கியத் துவம் வாய்ந்த அம்சத்தை அவை பிரதிபலித்தன. போராட்டங்களைப் பற்றிய நிர்வாகத் தரப்பிலான கண்ணோட்டத்தை இந்த ஆவணங்கள் வழங்கு பவையாக இருப்பதால் முக்கியமானவை ஆகும். முதலாவது, இரண்டாவது மஹத் மாநாடுகளின் வரலாறுகளைக் கட்டமைப்பதில் இந்த எல்லா வகையான தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன."

இந்தியாவின் சாதிய அமைப்பு என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் மஹத் மாநாடுகளின் முழுமை யான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதென்பது சாத்தியமில்லை. மகத் போராட்டத்திற்கு முன்னர், சாதிய முறைக்கு எதிரான வரலாற்றுப் பூர்வமான எதிர்ப்பு இலக்கியங்களைப் புரிந்து கொள்வது என்பதும் சம அளவு முக்கியத்துவம் வாய்ந்ததே. அவைகளையும் இனம் கண்டு அறிவியல் கண்ணோட்டத்துடன் தலித் இயக்கங்களின் தோற்றம், வளர்ச்சி, ஒருங்கிணைவு, நடைமுறைப் போராட்டங்கள் ஆகியவை தொகுக்கப் பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மஹத் மாநாடுகள் தலித் மக்களின் முதலாவது புரட்சியின் தொடக்க நிலைகள் என்று மதிப்பீடு செய்யப்படுகின்றன. முதலாவது மாநாடு 1927இல் மார்ச் 19-20களில் மஹத் நகரில் நிகழ்ந்தது. இதனை புறக்கணிக்கப்பட்டோர் மாநாடு என்று ஆய்வாளர்கள் மதிப்பிடுகிறார்கள். அடுத்து, 1927, டிசம்பர் 25-27களில் அங்கேயே நடந்த சத்தியாக்கிரக மாநாட்டை மௌனமாக்கப்பட்ட ஏவுகணைகள் என்று அவர்கள் கருதுகிறார்கள். இரண்டு மாநாடுகளின் பின்னணி களில் போராட்டங்கள் கருக்கொண்டிருந்தன.

"வரலாற்றிலிருந்து நாம் எந்தக் காலத்திலும் எந்த ஒன்றையும் கற்றுக் கொள்வதே இல்லை என்பதை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்" என்ற அறிஞர் ஹெகலின் கருத்துக்களை முன்வைத்து இந்த வரலாற்று நூலை அறிமுகப்படுத்துகிறார்.

"நாட்டுப்புற வரலாற்றில், மஹத் என்பது சாவதார் குளத்து சத்தியாக்கிரகத்துடனே இணைந்திருக்கிறது. உண்மையில் அந்தப் போராட்டம் ஒரு போதும் நடைபெறவேயில்லை. முதல் மாநாட்டின்போது குளத்தை நோக்கிய தலித் நடைப்பயணமும், தங்களுடைய குடிமையியல் உரிமைகளை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக அவர்கள், மார்ச் 20, 1927 அன்று நடைபெற்ற நிகழ்வுகள். அது ஒரு சத்தியாக்கிரகமல்ல. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய மாநாடு அது.

அங்கு, மாநாட்டிற்கு முந்தின நாள் இரவு, திடுதிப் பென்று தங்களின் சிவில் உரிமையைப் பயன்படுத்தி யாக வேண்டுமென்று அந்த மாநாடு தன்னெழுச்சி யாக முடிவு செய்தது. இந்த முதலாவது மாநாட்டின் தொடர்ச்சியாக இரண்டாவது மாநாடு அமைந்தது, சாதி இந்துக்களின் தீவிரமான, மூர்க்கம் நிறைந்த எதிர்ப்புக்கு இது ஓர் எதிர்வினையாக அமைந்தது இந்தமுறை ஒரு சத்தியாக்கிரக மாநாடாக உணர்வு பூர்வமான விழிப்புணர்வுடன் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாநாடு தொடங்குவதற்குச் சற்றே மோசடியான தந்திரங்கள் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றம் மூலம் இந்தப் போராட்டத்திற்குத் தடையுத்தரவு பெறப்பட்டது. அதன் காரணமாக பிந்தைய போராட்டத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுமாறு நேர்ந்தது. இந்த இருமாநாடு களையுமே சத்தியாக்கிரக மாநாடுகள் என்று சேர்த்துக் கூறப்பட்டு வருவது இந்த விதத்தில் தவறான கூற்றாகும். பின் மஹத் என்பது என்ன? மஹத்தில் உண்மையில் துல்லியமாக நடந்தது என்ன? தலித் உணர்வு உலகில் அது இந்த அளவுக்கு அதிகபட்ச முக்கியத்துவத்தை ஏன் பெற்றிருக்கிறது? சமகால தலித் இயக்கத்திற்கு, அதனுடைய பாரம்பரியம் என்ன? எதிர்கால சந்ததிக்கு அதன் படிப்பினைகள் எவை? இதுவே தொடர்ந்து வரவிருக்கும் பக்கங்களில் ஆராயப்படும் கேள்விகளாகி உள்ளன.

தலித் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கிடையில் ஒரு கூட்டுணர்வு மனநிலையை மஹத் உருவாக்கி அதைத் தொடர்ந்து நிலைபெறச் செய்தது. மஹத் நிகழ்வுக்கு முன்பு அங்கும் இங்கும் எங்கேயாவது எப்போதாவது சாதிய ரீதியான கட்டுப்பாட்டை மீறும் நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றில் ஒரு முக்கியமான நிகழ்வைக் குறிப்பிட வேண்டும். மகாத்மா ஐயன் காளி (1863 - 1941) என்ற இணையற்ற மாபெரும் தலைவரால் முன்னெடுக்கப் பட்டுப் பரவிய ராணுவக் கட்டுப்பாட்டுப் பண்புடன் நடைபெற்ற புலையர்களின் (கேரளாவிலுள்ள தலித்துக்கள்) திருவாங்கூரின் தலித் மக்களுக்குப் பொதுச்சாலைகளில் நடந்து செல்வதற்கான உரிமையை 1900-வது ஆண்டில் பெற்றுத் தந்தது. அந்த மக்களுடைய குழந்தைகளைப் பொதுப் பள்ளிகளில் அனுமதிப்பதற்கான உரிமையை 1907ஆம் ஆண்டில் வென்றது. மஹத் நிகழ்வுக்கு இரண்டு தலைமுறைக் காலத்துக்கும் முன்னரே நடைபெற்ற நிகழ்வு அது. தென் கேரளப் பகுதியைத் தாண்டி அந்த இயக்கம் பற்றி அறியப்படாமல் தான் இருந்தது. எந்த அளவுக்கு அறியப்படாமல் இருந்தது என்றால் டாக்டர் அம்பேத்கரே அதைப் பற்றி அறியாதவராய் இருந்தார்.

மஹத்தில்தான் தலித்துக்கள் தங்களுடைய குடிமை உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள் வதற்குத் தாமாகவே முதல் தடவையாக உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டனர்.

சாதிய அமைப்பு இடம்பெயரும் சுதந்திரத்தை முற்றிலுமாக மறுத்தது. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்து விட்ட ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கான வாய்ப்புக்கள் அவனுடைய சாதியினால் உறைநிலை யடைந்து விடுவதைக் கண்டறிகிறான். டாக்டர். அம்பேத்கர் ரத்தினச் சுருக்கமான, தெளிவான ஒரு வரையறையை சாதிக்குக் கொடுத்திருக்கிறார்; "ஒரு சாதி என்பது சுற்றி வேலியிடப்பட்ட வர்க்கம்." வர்க்கத்திற்கும், சாதிக்கும் இடையே நிலவும் குறிப்பிடத்தக்க முரண்பாட்டை இந்த வரையறை தெளிவுபடுத்துகிறது.

இந்திய சமூகவியலின் மதிப்புயர்ந்த முன்னோடிப் பிரமுகரான ஜி.எஸ். குரியே உட்பட பல அறிஞர்கள் முன்வைக்கும் வாதம் என்னவெனில், சாதிய அமைப்பு முறை என்பது இந்தியாவுக்கு மட்டுமே உரிய ஒரு தனித்துவப் பண்பு அல்ல.

சமூக அந்தஸ்து சார்ந்த படிவரிசைப்படி முக்கிய மான சாதிகள் பின்வருவன: பிரபு குடும்பத்தினர், வர்த்தக - தொழிலதிபர்கள், தொழிற்பணியாளர்கள் அடிமைகளின் வழி வந்தவர்கள். வடகிழக்கு கென்யாவிலும் தெற்கு எத்தியோப்பியாவிலும் வாழ்கிற போரானா மக்களிடையே வர்ணாசிரம முறையைப் போன்ற ஒரு நடைமுறை நிலவி வருகிறது. இது போல உலகின் பலவகையான சமுதாயங்களிலும் இது போன்ற பாகுபாடுகள் இருந்து வருகின்றன. அவை பல வகையான வேறுபாடுகளுக்கிடையில் கலந்தும் மோதியும் தொடர்ந்து வரலாற்றில் மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன.

மஹத் என்பது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. அது, ஒரு சகாப்த காலத்திற்குத் தொடர் விளைவு களை உட்பொதிந்து வைத்திருப்பதாகும். நவீன காலங்களில் குடிமை உரிமைகளுக்காக நடைபெற்ற முதல் போராட்டங்களுள் ஒன்று. சுதந்திரமான தலித் இயக்கமொன்றின் தொடக்கத்தைக் குறிப்பதற்கான ஓர் அடையாளச் சின்னம் மஹத். அது நிரந்தரமாக பாபா சாஹேப் அம்பேத்கருடன் இணைந்திருப்பது. ஆகவே, தலித் உலகில் ஓர் உணர்வு மயமான ஒரு வெளியை அது எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக இஸ்லாம், கிறிஸ்துவ சமயங்களின் வருகைகளும், தாக்கங்களும் தலித் மக்களுக்கிடையில் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. அதைத் தொடர்ந்து இந்தியாவில்

நிலவுடைமை வாழ்க்கை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. காலனியாதிக்கங்கள் புதிய தொழில் முறைகளை அங்கங்கே நாடு முழுவதுமாக நிறுவி வேகமாக வளர்த்தன. அதன் விளைவாக சாதிக்குள் ஒடுங்கி அதற்குரிய வேலையைச் செய்து வந்த தலித் மக்கள் புதிய தொழில்களில் இறங்கித் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொண்டனர். கல்வியறிவு பெற்றனர். பொருளாதார மேம்பாட்டை அடைந்தனர் - அரசுப் பதவிகளில் அமர்ந்தனர்.

இவற்றிற்கெல்லாம் ஒரு தூண்டுதலாக அமைந்தவை இரண்டு மஹத் மாநாடுகளே என்பதை வரலாற்று ஆசிரியர் உணர்வு பூர்வமாகத் தெளிவு படுத்துகிறார்.

இரண்டாவது நாள் மாநாட்டில் தலைவர் தன்னுடைய நிறைவுரையை ஆற்றிய பின் ஷிவ்ராம் கோபால் ஜாதவ் நன்றியுரை வழங்கினார். அதை வழிமொழிந்து பாய் சித்ரே பேசினார். மரபு ரீதியான இந்த நிகழ்வுகளை நிறைவு செய்த பின், சித்ரே மாநாட்டில் உரையாற்றினார்: "ஒரு முக்கியமான பொறுப்பை மேற்கொண்டு அதைச் சாதிக்காமல் இந்த மாநாடு முடிவடையக் கூடாதென்று நான் கருதுகிறேன். மஹத்தில் வாழும் மக்கள் குடிநீரைப் பொறுத்தவரை ஏராளமான சிரமங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பானைக்கு ஒரு பைசா வீதம் மொத்தம் ரூபாய் நாற்பது மதிப்புக்கு குடிநீரை இந்த மாநாட்டுக்காக நாமே விலை கொடுத்து வாங்கி யிருக்கிறோம். இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக மஹத் நகராட்சியின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லாக் குளங்களையும், எல்லாச் சாதிகளையும் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் திறந்து விட வேண்டு மென்று ஒரு தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றியதன் மூலம் ஏற்கெனவே, பிரகடனப்படுத்தியுள்ளது. எப்படியாயினும் இத்தகைய குளங்களிலிருந்து குடிநீரைக் கோரி எடுக்கும் நடைமுறை தீண்டத்தகாத மக்களால் இன்னமும் நிறுவப்படவில்லை. இன்றைய தினம் அதைச் செய்வதற்கு இந்த மாநாடு அவர் களுக்கு உதவி செய்யுமானால் ஒரு மிக முக்கியத் துவம் வாய்ந்த பொறுப்பைச் சிரமேற்கொண்டு அது சாதித்துவிட்டது என்று நம்மால் சொல்ல முடியும். ஆகவே, நாம் எல்லாருமாக தலைவருடன் சேர்ந்து சாவதார் குளத்திற்குப் பேரணியாக நடைபோட்டுச் சென்று அதன் குடிதண்ணீரை அருந்த வேண்டுமென முன்மொழிகிறேன்."

"பாய் சித்ரேவிடமிருந்து வெளிப்பட்ட இந்த சில வார்த்தைகள் கூட்டத்தினர் அனைவரையும் மின் தாக்குதலுக்கு ஆளாக்கின. இந்த ஒற்றை அடிவைப்பு அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்துவதாயிருந்தது. ஒட்டுமொத்த அரங்கமே உத்வேகம் நிரம்பிய பேராரவார முழக்கங் களால் நிரம்பிக் கொந்தளித்தது. தலைவர்களின்வழி காட்டுதல்களின் கீழ் விரைவாகப் பிரதிநிதிகள் டாக்டர் அம்பேத்கருக்குப் பின்னால் அணிவகுத்தனர். மஹத் நகரின் சந்தைத் திடல் வழியாக மிக உச்ச பட்சக் கட்டுப்பாட்டுடன் ஒரு நீண்ட ஊர்வலமாக அவர்கள் வீரநடை போட்டுச் சென்றனர்." சமத்துவமே வெல்லும். மகாத்மா காந்திக்கு ஜே, சிவாஜி மகராஜுக்கு ஜே போன்ற முழக்கங்களுடன் பேரணி சென்றது. அனைவரும் சாவதார் குளத்துக் கரையில் நின்றனர். டாக்டர் அம்பேத்கர் குளத்தில் இறங்கித் தன் குவித்த கரங்களில் குளத்து நீரை அள்ளிப் பருகினார். அவரைப் பின்தொடர்ந்து மற்றவர்களும் 'ஹரஹர மகாதேவா' முழக்கத்துடன் அவ்வாறே நீர் பருகினர். இந்த நிகழ்வுக்குப் பின் மாநாடு நிறைவடைந்தது என முறைப்படி அறிவிக்கப்பட்டது.

காவல்துறைக் கண்காணிப்பாளர் அங்கிருந்து சென்றபின் மாநாட்டு உணவுக் கூடத்திற்கு டாக்டர் அம்பேத்கர் சிலரை அனுப்பி இந்தப் பிரச்சினை குறித்து அவர்களை எச்சரிக்குமாறு செய்தார். அங்கிருந்தவர்கள் தங்களின் மதிய உணவை முடித்த பின் அவரவர் வீடுகளுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர். சந்தை வழியே அவர்களுள் சிலர் தங்களின் வீடுகளுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக் கையில் குண்டர்களால் அவர்கள் திடீரெனத் தாக்கப் பட்டனர். குண்டர்களுள் சிலர் மாநாட்டு உணவுக் கூடத்துக்குப் போய் அங்கு இன்னும் மதிய உணவருந்திக் கொண்டிருந்தவர்களைத் தாக்கினார்கள். அவர்கள் குடிதண்ணீர்ப் பானைகளை உடைத்தெறிந்தவுடன் உணவையும் நாசமாக்கினர். ஒட்டுமொத்தமாக 20 பேர் படுகாயமடைந்தனர். மூன்று நான்கு பெண்கள் உட்பட 60-70 பேர் காயமடைந்தனர். பூனாவிலிருந்து வந்திருந்த முக்கியமான தீண்டத்தகாதார் தலைவர் களான பி.என்.ராஜ்போஜ் மற்றும் பானுதாஸ் குண்டோஜி ராவ், காம்ப்ளே ஆகியோர் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டதுடன் பிரதான சாலையிலேயே படுமோசமாகத் திரும்பத் திரும்ப அடிக்கப்பட்டனர். காம்ப்ளேயின் மனைவி தனது கைக்குழந்தையுடன் சென்று கணவரைக் காப்பாற்ற முயன்றார். தாக்குதல் நடத்தியவர்கள் அவரையும், குழந்தையையும் கூட விட்டு வைக்கவில்லை. அந்தத் தருணத்தில் சில முஸ்லிம்கள் அவர்களுடைய உதவிக்கு வந்திருக் காமற் போயிருந்தால் அங்குச் சில உயிர்ப்பலிகளும் கூட நேர்ந்திருக்கக்கூடும்.

எதிர்காலத்தில் சாவதார் குளத்துப் பக்கம் வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கே அஞ்ச வேண்டியிருக்கும் நிலைக்கு தீண்டத்தகாத மக்கள்



ஆளாகும் விதத்தில் அந்த ஒட்டுமொத்த உறவு திட்ட மிட்டு அரங்கேற்றப்பட்டது. அங்கிருந்த விஷ்ணு கோயிலில் எல்லாப் பிராமணப் பூசாரிகளும் பங்கேற்ற ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. 'தீட்டுப் பட்டுவிட்ட குளத்து நீர்' புனிதமறை நூற் செயல் முறையின்படி ஓராயிரம் பானைகளில் இறைத்து நிறைக்கப்பட்டு சுத்தி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, சத்தியாக்கிரக மாநாட்டின்போது இவ்வாறு குறிப்பிட்டார்: "இன்றைய தினம் நாம் நடத்தும் இந்தக் கூட்டத்துக்கும், பிரான்சிலுள்ள வெர்சைல்ஸில் 1789, மே 5 தேதியன்று நடைபெற்ற புரட்சிகரமான தேசியப் பேரவைக் கூட்டத்துக்கும் இடையே ஒரு மாபெரும் ஒற்றுமை நிலவுகிறது."

இது தொடர்பாக, மஹத்தின் சாதி இந்துக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்கள் அவர்கள் அதன் செயல்முறைகளில் தீவிரமான தொடர் பங்கேற்புச் செய்யவில்லை. அந்த நிலையில் நீதி மன்றத் தீர்ப்பு தீண்டப்படாத மக்களுக்குச் சாதகமாக, சாவதார் குளத்தைத் தீண்டப்படாத மக்களுக்குத் திறந்து விட வேண்டுமென்று ஜூன் 13, 1929 அன்று வந்தது.

சாதி இந்துக்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள். அந்த நீதிமன்றமும் அதே தீர்ப்பை வழங்கியது.

அதே சமயத்தில் கொலாபா மாவட்ட ஆட்சியர் திரு. ஹாட் மிகவும் சாமர்த்தியமான முறையால் நிலைமைக் கட்டுப்படுத்தியிருந்ததால் பெருமளவு பாராட்டுப்பெற்றார்.

சத்தியாக்கிரகம் கைவிடப்பட்ட செயலானது தீண்டத் தக்கோர் நடுவே ஒரு மாபெரும் நிம்மதி உணர்வை அளிப்பதாகக் கட்டாயம் அமைந்திருக்க வேண்டும். சாவதார் குளத்தில் நடத்தப்பட வேண்டு மென்று திட்டமிடப்பட்டிருந்த சத்தியாக்கிரகம் நிகழாமல் போன அதே வேளையில் 'மனுஸ்மிருதி'யை எரிப்பதில் மாநாடு வெற்றியடைந்திருந்தது. சாதிய அமைப்பு முறையின் அடிப்படையான தத்துவார்த்த அடித்தளத்தையே நிராகரிப்பதற்கான அடையாள பூர்வ நடவடிக்கையாக அது அமைந்தது.

மஹத் என்ற இந்த வரலாறு இந்திய சமுதாயத்தில் தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்டுவரும் மக்களுக்குப் புதுவகையான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும். முதல் தலித் புரட்சியின் தோற்றம், வளர்ச்சி, சாதனை போன்றவற்றைத் தகுந்த ஆவணங் களுடனும், தகவல்களுடனும் இந்த வரலாற்று நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ●


# நியூ செஞ்சுரியின் விற்பனை சாதனைத் தொகுப்பு நூல்கள்

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்

தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்

**20 தொகுதிகள்**

பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**




**₹ 5000/-**


## நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு

**பெரியார் ஈ.வெ.ராமசாமி**

**5 தொகுதிகள்**

தொகுப்பாசிரியர்: **பசு.கவுதமன்**




**₹ 4800/-**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098


☎ 044-26251968, 26258410, 48601884 | Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர்: 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# வட்டார இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்

## பொன்னீலன்



இந்தியா 1947-இல் விடுதலை பெற்று, 1950-இல் ஒரு ஜனநாயகக் குடியரசாக மலர்ந்தது. எல்லா அம்சங்களிலும், புதிய இந்தியாவை இந்தியமயப்படுத்த வருங்காலத் தலைமுறையினரின் கல்வியில் கல்வியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும், முதன்மையாகக் கல்வியை இந்தியமயமாக்க வேண்டும் என்று அன்றைய இந்தியப் பெரியார்கள் விரும்பினார்கள். மகாத்மா காந்தி, டாக்டர் அப்துல் கலாம் ஆசாத், டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலிய அக்காலப் பேராளுமைகள் இந்தியக் கல்வியை இந்தியமயப்படுத்தப் பல வழிகளைக் காட்டியுள்ளார்கள். எல்லா வளர்ச்சிகளுக்கும் மூலமாக இந்திய அறிவியலும், அறவியல், அழகியலும் அமைய வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். பல அம்சங்களில் இந்த நோக்கங்கள் பெருமளவு நிறைவேறி வருகின்றன. தாய்மொழி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தாய்மண்ணின் வரலாறும், புவியியலும் கவனம் பெறுகின்றன.

ஆனாலும் ஆங்கில இலக்கியத்தைப் பொறுத்தவரையில், இன்றும் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலேயரின் படைப்புகள், குறிப்பாக இங்கிலாந்து மக்களையும், மரபுகளையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட ஆங்கிலேய அறிஞர்களின் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், நாவல்கள் முதலியன பெருமளவு மேற்கத்திய நாடுகளில் இருந்தே பெறப்பட்டு நம் நூல்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது வருத்தம் தருகின்ற ஒரு செயல். இந்திய ஆங்கிலக் கல்வியில் இது ஒரு பின்னோக்குச் செயல்.

என்ன காரணமோ தெரியவில்லை, தமிழ் நாட்டுக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பணி செய்யும் பேராசிரியர்களுக்குத் தாய்மொழி மீது அக்கறை மிகக் குறைவாகவே உள்ளது. ஆங்கிலத்தை உயர்ந்த மொழியாகவும் தமிழைத் தாழ்ந்த மொழியாகவும் கருதும் போக்கு அவர்களிடம் மிகுதியாகக் காணப்படுகிறது.

ஆங்கிலப் பேராசிரியர்கள் தாய்மொழியிலும் தேர்ச்சி உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் யாரும் கல்லூரிக்கு வெளியே வீட்டிலும் வீதியிலும் பெருமளவுக்கு ஆங்கிலத்தில் பேசுவதில்லை. தாய்மொழியில்தான் பேசுகிறார்கள். அவர்கள் தாய்மொழியை நேசித்தால், தாய்மொழியிலிருந்து ஆங்கிலத்துக்குப் பல படைப்புகளை எளிதில் மொழி மாற்றம் செய்து, உலக இலக்கிய அரங்குக்குத் தர முடியும். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எத்தனை ஆங்கிலப் பேராசிரியர்கள் இந்த முக்கியமானப் பணியைச் செய்கிறார்கள்? செய்யவில்லை என்பதே பதில். ஏன் செய்யவில்லை? காரணம் அவர்கள் தாய்மொழியை ஒரு தாழ்ந்த மொழியாகவும் ஆங்கிலத்தை உயர்ந்த மொழியாகவும் கருதுகிறார்கள். இந்தக் குறையைப் போக்கத் தாய்மொழி இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, நூல்கள் உருவாக்கி, அவற்றை ஆங்கிலப்

பேராசிரியர்கள் வகுப்பறைகளில் மாணவர்களுக்கு நடத்தும்படிச் செய்வதே.

இரண்டு நூற்றாண்டுகளாக இங்கு நவீனத் தமிழ் இலக்கியம் பெருமைக்குரிய அளவில் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. நாடகங்கள், கதைகள், கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள், மொழி பெயர்ப்புகள் எனத் தமிழில் ஏராளம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பல உலகத் தரம் உள்ளவைகளாகவே தோன்றுகின்றன. ஆனால் பள்ளி களிலும் கல்லூரிகளிலும் மாணவர் பயிலும் ஆங்கில இலக்கியப் பாடத்தில் இவை பாடங்களாக இடம் பெற்றுள்ளனவா? பதில் மனதுக்கு நிறைவு தரவில்லையே!.

இன்றும்

Baa baa black sheep

Have you any wool

Yes sir, yes sir

Three bags full.

என்றுதானே அன்னியத்தனமாகத் தொடக்கக் கல்வியிலேயே பிரிட்டிஷ் வியாபாரச் சூழலை நம் குழந்தைகளின் மூளையில் நுழைக்கிறோம். இதை மாற்றி

Love to do good.

Calm yourself against anger.

என்று ஆத்திசூடியை அருமையான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தரலாமே.

விடுதலை பெற்ற இந்தியாவில் படிப்படியாக எல்லாத் துறைகளும் இந்தியமயமாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தியம் என்னும் அடித்தளத்தின் மீது உலக அறிவியலும், அறவியலும், அழகியலும் கட்டி எழுப்பப்பட்டிருக்க வேண்டும். முழுக்க இந்திய மயமாதல் இன்று எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று சிலர் சந்தேகப்படலாம். அதற்கு அடித்தளமிட, நம் பாடத்திட்டங்கள் தொடக்க நிலையிலிருந்தே பெருமளவு இந்தியமயப்படுத்தப்பட வேண்டும்.

விடுதலைக்கு முன் நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் அவர்களுடைய நாட்டையும், மொழியையும், பண்பாட்டையும், நம் மீது திணிக்க வேண்டிய அவசியம் இருந்தது. இந்தத் திணிப்பு களின் வழியாக நம் இளைஞர்கள் உள்ளங்களை ஆங்கிலேயருக்கு வசப்படுத்தி, இந்திய சமூகத்தை அடிமைப்படுத்த அவர்கள் முயன்றார்கள்.


ஆனால் நாடு சுதந்திரம் பெற்றபின், நம்மைப் பொறுத்தவரையில் உலகத்தின் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் ஒன்றுதான் இங்கிலாந்து. நம்முடைய இலக்கியமும், மொழியும், பண்பாடும்தான் நமக்கு முக்கியம். தமிழ்மொழி சார்ந்தும், பண்பாடு சார்ந்தும் அவற்றைப் படிப்பதன் மூலம்தான் மாணவர்களுக்குப் பாடத்தில் ருசி ஏற்படும். அதன் வழியே ஆங்கிலத்திலும் அவர்களுக்கு ஆர்வம் ஏற்படும். இந்த நிலையில் பெரிய அளவுக்கு நம்மோடு உறவு ஏதும் இல்லாத மேற்கத்தியப் பண்பாட்டை நம் மூளையில் திணிக்கும் ஆங்கில இலக்கியங்கள் இன்று நம்மை ஆக்கிரமிப்பது நல்லதல்ல. அது நம் மனதில் பழைய அடிமைப் புத்தியையே நிலைநிறுத்தும்.

எனவே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் ஆங்கிலப் பாடத்திட்டத்தில் அந்த அந்த மாநிலத் தாய்மொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பாடங்களோடு, பிற இந்திய மொழிகளிலும் இருந்து மொழிபெயர்க்கப் பட்ட பாடங்களும் சிறிய அளவில் சேர்க்கப்படலாம். மூன்றாவது நிலையில்தான் உலக நல்லிலக்கியங்கள். அதுவும் ஆங்கிலம் மட்டுமல்லாமல், ஜெர்மன், பிரஞ்சு, ரஷ்யன், சீனம், ஜப்பான் இலக்கியங்களும் நம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படலாம். நமக்கு சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள். பாரதி, பாவேந்தர் முக்கியம். அடுத்த இந்திய நிலையில் தாகூர் முக்கியம், வள்ளத்தோளும், தகழியும், கேசவ தேவும் முக்கியம்.

இந்த முறையில் உருவாக்கப்படும் பாடத் திட்டமே மாணவர்களுக்கு உகந்தது. கவர்ச்சிகர மானது. அவரவரும் அவர்களுடைய பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும், சுவீகரித்துக் கொள்ளவும் இந்த முறையே வழி வகுக்கும். அதுமட்டுமல்ல, வட்டார மொழிகளில் எழுதும் எழுத்தாளர்களை அந்த மொழி மாணவர்கள் ஆங்கில மொழி வழியாகக் கற்றுக் கொள்ளவும், அதன் வழி தங்கள் பண்பாட்டுப் பெருமைகளை உணரவும் வழி செய்யும்.

இப்படிப்பட்ட நூல்கள் மாணவர்களின் மனதில் ருசி ஏற்படுத்தும். இன்று ஆங்கில நூல்கள் தருகின்ற அன்னியத் தன்மையை, அதன் மூலம் மாணவர்களுக்கு வருகின்ற கசப்பை இந்த முறையில் பெருமளவுக்குக் குறைத்து விடலாம். தாய்மொழியையும், தாய் மொழியில் எழுதும் எழுத்தாளர்களையும் ஆங்கிலம் வழியாகக் கற்பவர்கள், அவரவர் அவர்கள் தாய் மொழியில் விசாலம் பெறுவார்கள். தாய்மொழி மீது மதிப்பும் மரியாதையும் பெருமிதமும் கொள் வார்கள். வளர்வார்கள்.


*[நெல்லை ம.சு.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை 2019, பிப்ரவரி 7,8 ஆகிய இரு நாட்கள் நடத்திய மொழிபெயர்ப்பு வட்டார இலக்கியங்கள் என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் முதல்நாள் ஆற்றிய வழி காட்டும் உரையின் சுருக்கம்.]* ●


காவ்யா
பேரா சு.சண்முகசுந்தரத்தின்
சிறப்புத் தொகுப்புகள்
பாரதிதாசனின் 6 தொகுதிகள் ரூ.7000/-
கவி காமு ஷெரீப் 3 தொகுதிகள்
ரூ. 2600/-
விந்தனின் 3 தொகுதிகள்
ரூ. 3000/-
வ.ரா.வின் 2 தொகுதிகள்
ரூ. 2100/-
ராமாமிர்தம் 2 தொகுதிகள்
ரூ. 2100/-
அ.ச.ஞா. 2 தொகுதிகள்
ரூ. 2300/-
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com

# தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறார்களுக்கான நூல்களை வெளியிடும் நெஸ்லிங்கின் புதிய வெளியீடுகள்



₹ 65.00



₹ 45.00



₹ 70.00




₹ 70.00



₹ 70.00



₹ 70.00



₹ 70.00



₹ 70.00



₹ 70.00




₹ 70.00





₹ 100/-
(இரண்டு புத்தகங்களும் சேர்த்து)



₹ 70.00

Nestling

**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
☎: 044- 26251968, 26258410, 48601884,
Email: nestlingbooks@gmail.com | www.ncbhpublisher.in

# பண்பாட்டுச் செயல்பாட்டாளன் ஏ.எம்.சாலன்

**எஸ்.கே.கங்கா**



கல்லூரிக் காலத்தில் ஆரல்வாய்மொழி கலை இலக்கியப் பெருமன்றக் கிளையில் அங்கமாகி ஒரு அமைப்பாளனாக, ஒரு படைப்பாளியாக, ஒரு விமர்சகனாக, ஒரு மொழிபெயர்ப்பாளனாக பன்முகங்களில் பரிணமித்துக்கொண்டிருந்த, எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதர்களின் நெஞ்சங் களை தன் நேசத்தால் நாளும்பொழுதும் நெகிழ வைத்துக்கொண்டிருந்த ஏ.எம்.சாலன் என்னும் தோழன், யாரும் எதிர்பாராதநிலையில், எல்லோரையும் தவிக்கவிட்டுவிட்டு, கழிந்த பிப்ரவரி 10ம் தேதி நள்ளிரவுக்குப் பின்னிரவில் திடுதிப்பென்று தன் பௌதீக வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்துவிட்டார்.

ஆரல்வாய்மொழி அழகியநகர் ஊரைச் சார்ந்த திரு.அணஞ்சான், திருமதி பேரின்பம் ஆகியோருக்கு மூத்தப் புதல்வனாக 29.05.1960 அன்று பிறந்த மதி, கலை இலக்கியப் பெருமன்றத்துக்காரனாகியபோது ஏ.எம்.சாலனாக உருவானார். நாட்டுப்பாடல் சேகரிப்பில் அக்கறை கொண்டிருந்த அவர் நாளடைவில் ஒரு சிறுகதையாசிரியராகவும் பரிணமித்தார். அழகியநகர் பகுதியைச் சார்ந்த ஒரு இளைஞர் கூட்டத்தையே தன் அன்பாலும் அரவணைப்பாலும் ஒன்றுதிரட்டி கலைஇலக்கியப் பெருமன்றத்துக்கும், இளைஞர் பெருமன்றத்துக்கும் உரம் சேர்த்த ஒரு அமைப்பாளனாகவும் அவர் வளர்ந்தார்.

மத்திய அரசு பணிநிமித்தம் ஏ.எம்.சாலனின் வாழ்வு புகழ்பெற்ற கொச்சி மாநகரில் நங்கூர மிட்டது. தன் கடைசிக்காலம் வரையிலும் அவர் கொச்சிவாசியாகவே வாழ்ந்தும் வந்தார். ஆனாலும் ஆரல்வாய்மொழி தொப்புள்கொடி உறவுக்கும் உண்மையாகவே இருந்தும் வந்தார். அவருடைய பெரும்பாலான இலக்கியப்பணிகள் அவருடைய கொச்சி வாழ்க்கையில் பூத்த மலர்களே. ‘‘வட்டத்தை மீறிய விரிவுகள்,’’ ‘‘அழுக்கு,’’ ‘‘ஒதுக்கப்பட்டவர்கள்’’ என்னும் சிறுகதைத் தொகுப்புக்களும், ‘‘படைப்பு, படைப்பாளி, விமர்சனம்,’’ ‘‘தலித் பண்பாடு சில பார்வைகள்’’

என்னும் கட்டுரைத் தொகுப்புக்களும், “ஓ.என்.வி. குருப்பின் சில கவிதைகள்,” “தேர்ந்தெடுத்த மலையாள சிறுகதைகள்,” “விளம்பர உலகம்,” “கானலில் நீர் தேடிய மான்கள்,” பி.கே.வாசுதேவன் நாயரின் “எனது வாழ்க்கைப் பயணம்” என்னும் மொழியாக்க நூல்களும் ஏ.எம்.சாலன் என்னும் படைப்பாளியின் பன்முகங்களுக்கு அடையாளங் களாகத் திகழ்கின்றன.

அன்றாடம் நாம் சந்திக்கும் எளிய மனிதர்களின், அடித்தட்டு மக்களின் உறவுப்பின்னல்களில் விளையும் மோதல்களையும், உணர்ச்சித்தளங்களில் உருவாகும் முரண்மோதல்களையும் சிறுகதைகளில் எதார்த்தமாக வடித்தவர் ஏ.எம்.சாலன். அதே வேகத்தில் விவேகத் துடன் அவர் கருத்தியல் களங்களில் இயங்கியபோது விளைந்த அவருடைய கட்டுரைகள் அவரின் முற்போக்கு இடதுசாரி முகத்தை நமக்கு பரிச்சயப்படுத்துகின்றன.

ஏ.எம்.சாலனின் படைப்புலகில் மிகவும் காத்திரமான இடத்தை வகிப்பவை அவருடைய மொழிபெயர்ப்புக்களாகும். மலையாளத்திலிருந்து அருமையான சிறுகதைகளைத் தமிழுக்கு ஆக்கித் தந்த அவர், மலையாள மகாகவி ஓ.என்.வி.குருப்பின் கவிதைகள் சிலவற்றையும், கேரளா முன்னாள் முதல்வர் பி.கே.வாசுதேவன் நாயரின் “எனது வாழ்க்கைப் பயணம்” என்னும் நூலையும் எளிய தமிழில் மொழியாக்கம் செய்திருந்தார். அவருடைய மொழியாக்கங்கள் அசல் படைப்புக்கள் என்னுமளவுக்கு வாசக நெஞ்சங்களை வசியப்படுத்தியவை.

59 வயது நிறையுமுன்னே தன் அன்பு மனைவி திருமதி பானுமதியையும், மக்களையும், மருமக்களையும், பேரக்குழந்தைகளையும், குடும்பத் தாரையும் மட்டுமல்லாமல், இயக்கத் தோழர் களையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு, தன் கதைக்கு ஒரு முடிவைத் தேடிகொண்ட ஏ.எம்.சாலனின் இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒரு இழப்பு.

குமரி மாவட்டத்தில் ஒரு பண்பாட்டுச் செயல் பாட்டாளனாக மலர்ந்த ஏ.எம்.சாலன் மலையாள இலக்கிய உலகிலும் ஒரு பண்பாட்டுச் செயல் பாட்டாளனாக வாழ்ந்துகொண்டிருக்கையில், இன்னும் இன்னும் சாதிக்க வேண்டிய பருவத்தில் மறைந்தது தமிழுக்கு மட்டுமல்ல, மலையாளத்துக்கும் இழப்பே.


பிறந்த மண்ணுக்கு மட்டுமல்லாமல், தொழில் சார்ந்து வாழ்ந்த கொச்சி மாநகருக்கும் பெருமை சேர்த்த ஏ.எம்.சாலனின் வாழ்வும் படைப்புகளும் காலத்தை வென்று பயணிக்கும் திறம்படைத்தவை என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ●

# அஞ்சலி



இடதுசாரிய, பெரியாரிய, தலித்திய,
பெண்ணுரிமை ஆகிய முற்போக்கு இயக்க மேடைகளில்
உணர்ச்சிப் பெருக்கோடு பாடப்பட்ட நூற்றுக்கணக்கான
பாடல்களை எழுதிய கவிஞர் வையம்பட்டி முத்துச்சாமி
அவர்களின் மறைவுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**
முனைவர் பா.ஆனந்தகுமார்
விலை ₹ 80/-





**எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்**
ராஜ் கௌதமன்
விலை ₹ 100/-





**லண்டனில் சிலுவைராஜ்**
ராஜ் கௌதமன்
விலை ₹ 145/-





**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**
தமிழில் : எம். பாண்டியராஜன்
விலை ₹ 99/-




**சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை**
சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்
விலை ₹ 365/-




**தமிழால் மருத்துவக் கல்வி முடியும்**
டாக்டர் சு.நரேந்திரன்
விலை ₹ 165/-




**பீகாரிலிருந்து திகார் வரை**
கன்னையா குமார்
விலை ₹ 110/-




**பழந்தமிழில் எழுத்தியல் ஆய்வுகள்**
முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்
விலை ₹ 155/-





**சொல் பண்பாட்டு அடையாளம்**
இரா.வெங்கடேசன்
விலை ₹ 200/-

# நியூ செஞ்சுரியின் ராகுல்ஜி நூல்கள்





**ராகுல்ஜியின் சுயசரிதை**
(இரண்டு பாகங்கள்)
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**சிந்து முதல் கங்கை வரை**
(சிம்மசேனாபதி) ஆராய்ச்சி நாவல்
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: மாஜினி





**மனித சமுதாயம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**ஊர்சுற்றிப் புராணம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**இஸ்லாமியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**இந்துத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**ஐரோப்பியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**விஞ்ஞான லோகாயத வாதம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**பௌத்தத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு, ஆர்.பார்த்தசாரதி

# குழந்தை இலக்கியத்தில் இதழ்கள்

சுகுமாரன்



**கு**ழந்தை இலக்கியத்தில் இதழ்களின் (Magazines) முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்வது அவசியம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ‘பத்திரிகை’ என்ற தனது பாடலில் குழந்தைகளுக்கு இதழ்கள் எவ்வளவு முக்கியம் என்பதை இவ்வாறு விளக்குகிறார்,

“கருப் பெற்றுருப் பெற்றிள நடை
பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை வாசித்தல்
உண்டென்றால் வாழ்க்கைப் பெற்றார்”

குழந்தைகளின் வாழ்வு வளம் பெற பத்திரிகையே துணை செய்கிறது என்பதை புரட்சிக் கவிஞர் அழுத்தமாகக் கூறியுள்ளார்.

‘குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்’ என்று கூறிய இயேசு நாதரிடம் குழந்தைகளை அழைத்துச் செல்ல, கிறிஸ்தவ மதத்தினரே தமிழில் முதல் சிறுவர் இதழை வெளியிட்டனர். 1840-ஆம் ஆண்டில் வெளி வந்த அவ்விதழின் பெயர் ‘பாலதீபிகை,’ சுமார் 22-ஆண்டுகள் வெளிவந்த அவ்விதழ் நின்று போனது. தமிழில் வெளிவந்த முதல் சிறுவர் இதழ் என்ற பெருமையைப் பெற்றது. கிறிஸ்தவ குடும்பத்தினரின் குழந்தைகளிடம் செல்வாக்குப் பெற்ற மேலும் இரண்டு பத்திரிகைகள் உண்டு. ஒன்று ‘பாலியர் நேசன்,’ இன்னொன்று ‘பூக்கூடை’ அழகிய தமிழ்ப் பெயரில் வந்த ‘பூக்கூடை’க்கு கவிஞர் தயானந்தன் பிரான்சிஸ் ஆசிரியராக இருந்தார். அதனால் அது குழந்தை இலக்கியத்தின் தாக்கத் தோடு வெளிவந்தது. பைபிள் கதைகளோடு சிறுவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட கதைகளும் அதில் இருந்தன.

1940 முதல் 1970 வரை தமிழில் நிறைய சிறுவர் இதழ்கள் வந்தன. அக்கால கட்டத்தை குழந்தை இதழ்களின் ‘பொற்காலம்’ என்று குறிப்பிடலாம். குழந்தை இதழ்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மிகும். பாலியர் நேசன், பாலவிநோதினி, பாலர் மலர், பாலர் முரசு, பாப்பா, பாப்பா மலர், அணில்,

அணில் மாமா, சங்கு, டமாரம், டிங் - டாங், கரும்பு, பார்வதி, அம்பி, முத்து, கண்ணன், சின்னக் கண்ணன், முயல், கிளி, அல்வா, பூஞ்சோலை, சிறுவர் உலகம், ரேடியோ, குஞ்சு, ஜில் ஜில், வானர சேனன், மத்தாப்பு, ஜிங்லி, சாக்லெட், மிட்டாய், சந்த மாமா, அம்புலி மாமா, பொம்மை வீடு, சித்திரக் குள்ளன், சித்திரா, சிற்பி, அன்னம், சந்திர ஒளி, கங்கணம், மயில், தமிழ்ச்சிட்டு, கோகுலம், துளிர், ரத்னபாலா, பூந்தளிர், கல்கண்டு, அரும்பு... என்று இன்னும் உண்டு.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பிறந்த புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து தான் நிறைய குழந்தை இதழ்கள் வெளிவந்தன. 'பாலர் மலர்' நடத்திய வெ.சுப.நடேசன் டமாரம், சங்கு என்று மேலும் இரண்டு இதழ்களை நடத்தினார். அதற்குக் காரணம், சிறுவர் இதழ் நடத்துவதில் அவர் பெற்ற வெற்றியே, மூன்று இதழ்களுக்கும் ஆசிரியராக அழ.வள்ளியப்பா தான் இருந்தார். அழ.வள்ளியப்பா எழுதியவைகளில் பெரும்பான்மை இதழ்களில்தான் வந்தன.

'டமாரம்' குழந்தைகளின் படைப்புகளுக்கு அதிக இடமளித்தது. அதன் விற்பனை 20,000 பிரதி களுக்கு மேலாக இருந்தது. வாரம் இருமுறை வெளி வந்த டமாரத்தின் விலை காலணா.

குழந்தைகளுக்கு இதழ்கள் நடத்த வேண்டு மென்ற இலட்சிய வேகத்துடன் 'பால விநோதினி'யை நடத்திய வரகலி அ.சுப்பிரமணியமும் 'பாப்பா'வை நடத்திய தியாகராஜனும் விளங்கினர். வார இதழாக வந்த 'பாப்பா' தீபாவளி மலர்களைக் கூட வெளி யிட்டது.

அக்காலத்தில் காலணா, அரையணா, ஒரணா நிலையில் வண்ண ஓவியங்களுடன் குழந்தை இதழ்கள் வந்தன. 'அணில்' எனும் இதழை நடத்திய சக்தி வை.கோவிந்தன் சாதனைகளைப் படைத்தவர். அணிலில்தான் தமிழ்வாணன் முதலில் அறிமுக மானார். பின்னர் 'கல்கண்டு' இதழில் புகழ் பெற்றார்.

'குழந்தைகள் செய்தி' என்ற தினப் பத்திரிகை (Daily)யை குழந்தைகளுக்காக முதன் முதலில் நடத்தியவர் சக்தி வை.கோவிந்தன் ஆவார். 'குழந்தைகள் செய்தி'தான் தமிழ்க் குழந்தைக்கான முதல் தினசரி. கடைசி தினசரியும் அதுதான்.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படை குழந்தை இதழ்களின் வளர்ச்சியே என்று கூறினால் அது மிகையான கூற்றல்ல, இதழ்கள் உருவம் என்றால் குழந்தை இலக்கிய வளர்ச்சி அதன் நிழல், குழந்தை இலக்கிய இதழ்கள் நிறைய வந்தால்தான் குழந்தை எழுத்தாளர்கள் நிறைய தோன்றுவார்கள் என்பது திண்ணம்.

ஏனென்றால் குழந்தை இதழ்கள் மூன்று பணிகளைச் செய்கிறது. ஒன்று, குழந்தைகள் படிக்க வாய்ப்பளிக்கிறது. இரண்டு, குழந்தை எழுத்தாளர்கள் நிறைய எழுத வாய்ப்பளிக்கிறது. மூன்று, குழந்தைகள் படைப்புகளுக்கும் இடமளிக்கிறது. எனவே குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு இதழ்களே ஆதாரம்.

அக்காலத்தில் வந்த சிறுவர் இதழ்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று குழந்தை எழுத்தாளர்கள் நடத்தியது. பூவண்ணன் கரும் பையும், அழ.வள்ளியப்பா பூஞ்சோலையையும், மகிழ்ச்சிக் கண்ணன் மத்தாப்பையும், சக்தி கோவிந்தன் அணிலையும், நாரா. நாச்சியப்பன் முத்துவையும், சௌந்தர் ரேடியோவையும், வாண்டு மாமா வானவில், 'கிங்கிணி,' என்று இரண்டு இதழ் களையும், எஸ்.வஜ்ரவேலு பூந்தோட்டத்தையும், ரா.கி.ரங்கராஜன் வானர சேனையையும் ஓவியர் சந்தனு சித்திரக் குள்ளனையும், புலிவேந்தன் அணிலையும், நவீனன் யுவனையும், கலைவாணர் மானையும் நடத்தினர்.

குழந்தை இதழ்களின் செல்வாக்கைப் பார்த்த பெரியோர் இதழ்களான கலைமகள், ஆனந்த விகடன், கல்கி தங்கள் இதழ்களில் முதலில் சிறுவர் பகுதியை இடம் பெறச் செய்தன. பின்னர் கலை மகள் 'கண்ணன்' என்ற சிறுவர் இதழை வெளி யிட்டது. இதன் ஆசிரியராக பிரபல எழுத்தாளர் ஆர்.வி. இருந்தார். ராஜாஜி, கி.வா.ஜ. கிருபானந்த வாரியார், பெ.தூரன், கி.சந்திரசேகரன் போன்ற பெரியோர்களும் சிறுவர்களுக்கு எழுதினர். 22 ஆண்டுகள் வெளிவந்த 'கண்ணன்' 1971-இல் நின்று போனது.

கல்கி 'கோகுலம்' என்ற சிறுவர் இதழைக் கொண்டு வந்தது. 40 ஆண்டுகளுக்கு மேலாக வெளி வந்த கோகுலம் சமீப ஆண்டுகளில் நின்று போனது. மூத்த குழந்தை ஏழுத்தாளர் ரேவதி ஆசிரியராக இருந்து புதியவர்கள் எழுத ஊக்கமளித்தார். கோகுலம் எழுதுவோருக்கு பணமும் அளித்தது.

விகடன் 'சுட்டி விகடனை' வெளியிட்டது. 'உயிர்த்தமிழ் பயிர் செய்குவோம்' என்று தலைப்பில் போட்டுக் கொண்டு ஆனந்த விகடனின் ஆங்கிலம் கலந்த தமிழ்நடையை சிறுவர்களுக்கு வழங்கியது. சுட்டி க்ரியேஷன்ஸ், புக் க்ளப், குறும்புக்காரன் டைரி, எஃப், ஏ பக்கங்கள், ஈஸி 'டிப்ஸ்' ஆகியவை சுட்டி பயிர் செய்யும் உயிர்த் தமிழாகும். சுட்டி விகடனும் சமீபத்தில் நின்று விட்டது.

'கண்ணன்' நிறைய சிறுவர் கதைகளை வெளியிட்டது. சிறுவர் நாடகங்களையும் பாடல்களையும் வெளியிட்டது. 'கண்ணன் கழகம்' என்றும் சிறுவர்கள் பங்கேற்கும் கூட்டங்களை நடத்தி, குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது.

'கோகுலம்' பத்திரிகையும் சிறுவர் சங்கங்களை நடத்தி குழந்தைகளிடம் படைப்பார்வத்தை ஊட்டியது.

கூத்தபிரான், வாண்டுமாமா, மகிழ்ச்சிக் கண்ணன், தமிழ்வாணன் ஆகியோரும் தங்கள் பத்திரிகைகளின் பெயரில் சிறுவர் சந்திப்புகளை நடத்தி குழந்தைகளுக்கு ஊக்கமூட்டினர், வழிகாட்டினர்.

1947 முதல் வெளிவந்த 'அம்புலிமாமா' என்ற இதழ், சிறுவர்களைக் கட்டிப் போட்ட இதழ்களில் ஒன்று. இந்தியாவிலுள்ள 11 மொழிகளில் வெளிவந்தது. அதில் தமிழும் ஒன்று. 60,000 பிரதிகளுக்கும் மேலாக விற்பனையானது. இரு வண்ணங்களில் வந்தது. இன்று நின்று விட்டது.

சிறுவர் இதழ்களின் வெற்றியைப் பார்த்து அயல்நாட்டு நிறுவனங்களும் தமிழில் 'பொன் மலர்,' 'பால்கன்' ஆகிய இதழ்களை வெளியிட்டன. இது அந்தக் காலத்தில்.

சிறுகதை, தொடர்கதை, பாடல், சிரிப்பு, புதிர், படக்கதை, புராண கதை, நாடோடி கதை என்று வெளியிட்டு நிறைய குழந்தை இதழ்கள் ஒரு பொதுவான போக்கை ஏற்படுத்தி இருந்தன.

அதிலிருந்து மாறுபட்டு தனித்துவமான போக்கைக் கொண்ட இதழ்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

'தமிழ்ச்சிட்டு' எனும் இதழ் தனித்தமிழ் இயக்கத்தின் சார்பில் வந்தது. இவ்விதழின் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் குழந்தைகளுக்காக தூய தமிழில் பாடல்கள் எழுதினார்.

'துளிர்' எனும் இதழ் தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கத்தின் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழாகும். தமிழ்க் குழந்தைகளின் அறிவியல் தேவைகளை நிறைவு செய்யும் பத்திரிகை குழந்தைகளின் பார்வையில் அறிவியலைத் தரும் இதழாகவும் இது உள்ளது சிறப்பாகும்.

'பிக்கிக்கா' மூட நம்பிக்கைக்கு எதிரான படைப்புகளைக் கொண்ட சிறுவர் இதழ். சிறிது காலமே வந்தாலும் முக்கியமான பத்திரிகை.

'அரும்பு' இளைஞர்களுக்கான இதழ் என்று கூறிக் கொண்டாலும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் பத்திரிகை. தந்தை மரிய சார்லஸின் முயற்சியால் தன்னம்பிக்கை நூல்கள் சிறுவர்களுக்காக நிறைய அரும்பு வெளியிட்டது.

'வளர்நிலா' சிங்கப்பூர் தமிழ்க் குழந்தைகளுக்காக தமிழ்நாட்டிலிருந்து நடத்தப்பட்ட சிறுவர் இதழ். 'ஆர்ட்' தாளில் பல வண்ணத்தில் தரமான தயாரிப்பாக வெளிவந்தது.

தந்தை பெரியாரின் சிந்தனையான பகுத்தறிவை குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கத்தில் பளபளப்புத் தாளில் பல வண்ணங்களில் வெளிவரும் இதழ் 'பெரியார் பிஞ்சு.' இது திராவிடர் கழகத்தின் வெளியீடு. இன்றும் வருகிறது.

'பூவுலகு மின்மினி' பூவுலகின் நண்பர்கள் என்ற இயக்கம் நடத்தும் சிறாருக்கான சுற்றுச் சூழல் மாத இதழ். சுற்றுச் சூழல் பற்றிய அக்கறையை குழந்தைகளிடம் ஏற்படுத்தும் பத்திரிகை.

'தும்பி' என்ற சிறுவர் மாத இதழ் பிரபலமான அயல்நாட்டு கதை ஒன்றை தமிழிலும் ஆங்கிலத்திலும் அழகாக அச்சிட்டுத் தருகிறது. அதில் சிறுவர் இதழ் 'மசாலா'க்கள் இடம் பெறுவதில்லை.

இன்று சிறுவர் இதழ்கள் குறைந்து விட்டன. சிறுவர்களிடம் படிக்கும் பழக்கத்தை வளர்த்த கல்கண்டு இல்லை. கற்பனைச் சிறகைக் கொடுத்த அம்புலிமாமா இல்லை. பெரும் நிறுவனங்கள் நடத்திய கோகுலம், கண்ணன், சுட்டி விகடன் நீண்ட கைகளால் குழந்தைகளைத் தொட்டன. அந்தக் கைகள் இன்றில்லை. தமிழ் நாட்டில் என்ன நேர்ந்தது? தமிழ்க் குழந்தை இலக்கிய வானில் வானவில்போல் தோன்றி இவைகள் மறைந்து விட்டனவே! 'ஜீபூம்பா' சொல்லி மறைவது போல் காணாமல்போய் விட்டனவே!! இதற்கான காரணங்களை ஆராய வேண்டும்.

பெரும்பாலான குழந்தை இதழ்கள் குழந்தை எழுத்தாளர்களால் நடத்தப்பட்டவை. அவர்களின் ஆர்வம் மட்டுமே மூலதனம்; அவர்களின் ஆயுளே இதழ்களின் வயது. அதனால் அவைகள் நின்று போயின. பெரும் நிறுவனங்கள் நடத்திய சிறுவர் இதழ்கள் நின்று போனதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. விற்பனைக் குறைவினால் நின்று போனது என்றால் அது கவலைக்குரிய விஷயந்தான். குழந்தைகள் தமிழ் சிறுவர் இதழ்களை படிப்பதை நிறுத்திவிட்டார்கள் என்பதுடன் தொடர்புடையது;

1980-க்குப் பிறகு தமிழ்நாட்டில் ஆங்கில வழிக் கல்வி கோலோச்சத் தொடங்கியது. கல்வி முறை மாறியதால் குழந்தைகளின் வாழ்க்கை முறையும் மாறியது, படிக்கும் பழக்கம் மாறியது.

*1990-க்குப் பிறகு நாட்டில் புகுந்த உலகமயம், தாராளமயம், நுகர்வு கலாச்சாரம் பெற்றோர்களின் பார்வையில் மாற்றங்களை ஏற்படுத்தியது.*

தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் குழந்தைகளின் இலக்கிய தேவைகளைப் பாதித்தன. பாடப் புத்தகங்களின் சிறைக்குள் குழந்தைகள் தள்ளப்பட்டனர். குழந்தைகளுக்கு இதழ்கள் படிப்பது அவசியமற்றுப் போய் விட்டது.

அதனால் சிறுவர் இதழ்களின் எண்ணிக்கையும் சுருங்கி விட்டது. குழந்தை இலக்கியமும் சுருங்கி விட்டது.

சிறுவர் இதழ்கள் குறைந்து விட்ட நிலையில் பிரபல நாளிதழ்கள் சிறுவர் இதழ்களை இலவச மாகத் தருகின்றன. தினமணி சிறுவர் மணியையும், தினந்தந்தி தங்க மலரையும், தினமலர் சிறுவர் மலரையும் வெளியிடுகின்றன. இவை ஒரு சூத்திரத்தைக் கடைப்பிடிக்கின்றன. தேசபக்தி, கடவுள் பக்தி, தலைவர் மரியாதை, பழமைக்கு மரியாதை, கல்விச் செய்திகள் என்ற சூத்திரங்கள்தான் அவை.

குழந்தை இலக்கியம் பற்றிய பார்வை, தெளிவு, புரிதலுடன் சிறுவர் இதழ்கள் வர வேண்டும்.

விரல் விட்டு எண்ணக் கூடிய எண்ணிக்கையிலே இன்று சிறுவர் இதழ்கள் வருகின்றன. மின்மினி, பொம்மி, சம்பக், குட்டி ஆகாயம், றெக்கை, பஞ்சு மிட்டாய் ஆகியனவே அவை. இதில் மின்மினி, பொம்மி, சம்பக் தவிர மற்றவை தனிச் சுற்று இதழ்கள்.

'சம்பக்' அம்புலி மாமா மாதிரி 8 மொழிகளில் வரும் இதழ். அதில் தமிழும் ஒன்று. அதனால் அதில் மொழிபெயர்ப்பு வாசனையே அதிகம். புராண, இதிகாச, நாடோடிக் கதைகளுக்கு முக்கியத்துவம் தரும் இதழ்.

'பொம்மி' முந்தைய சிறுவர் இதழ்களின் சூத்திரத்தைக் கடைப் பிடிக்கும் இதழ். இதில் சித்திர ராமாயணம் தொடராக வருகிறது.

குட்டி ஆகாயம், றெக்கை, பஞ்சு மிட்டாய் குழந்தை இலக்கிய ஆர்வலர்களால் நடத்தப்படும் இதழ்கள். இவ்விதழ்கள் குழந்தைகளின் உலகோடு நெருக்கமானவையாகத் தென்படுகின்றன.

'றெக்கை' சிறார் கலகல மாத இதழ் என்று முகப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் படைப்புகள், ஓவியங்கள், கதைகள் றெக்கையில் வருகின்றன. குழந்தைகளின் பேட்டி என்பது இவ் விதழில் வித்தியாசமானது. கதைகளே குழந்தை களை 'கல கல' என்று வைத்திருக்கும் என்ற அடிப் படையில் றெக்கையின் இரண்டு இதழ்கள் சிறுகதை சிறப்பிதழ்களாக வெளிவந்துள்ளன. பளபளப்புத் தாளில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு வரும் றெக்கை, குழந்தைகள் கற்பனை வானில் பறக்க றெக்கைத் தருகிறது. இதழின் ஆசிரியர் சரா சுப்ரமணியம்.

'குட்டி ஆகாயம்' ஒவ்வொரு குழந்தையும் நட்சத்திரம் என்று குழந்தையைக் கொண்டாடுகிறது. குழந்தைகள் குறித்த உரையாடல், பயிற்சிப் பட்டறைகள், இயற்கைக்கு நெருக்கமானவர்கள் குழந்தைகள் என்று காடறிதல் நிகழ்ச்சி இவை யெல்லாம் 'குட்டி ஆகாயம்' இதழ் ஆசிரியர் டி.எஸ்.வெங்கடேசனை குழந்தைகள் மீது அக்கறை யுள்ளவராகக் காட்டுகிறது. 'குட்டி ஆகாயத்தின் எழுத்தாளர்கள் குட்டி குழந்தைகள்தான்.' அதில் அரசுப் பள்ளிக் குழந்தைகளும் இருக்கிறார்கள் என் மீது நம்பிக்கைத் தரும் விஷயமாக இருக்கிறது, பளபளப்புத் தாளில் பல வண்ண அச்சில் வரும் 'குட்டி ஆகாயம்' அந்த ஆகாயம் போலவே குழந்தைகளுக்கு ஆச்சரியமூட்டுகிறது.

'பஞ்சுமிட்டாய்' குழந்தைகளுக்கு உண்ணப் பிடித்தமானது. இதழும் அப்படித்தான். சிறுவர் படைப்புகளையும் ஓவியங்களையும் 'பஞ்சு மிட்டாய்' முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகிறது. பஞ்சு மிட்டாய்க்கு ஆசிரியர் இல்லை. ஆசிரியர் குழுதான். இதுவே கூட்டு உழைப்பைக் காட்டுகிறது. இதழை வெளியிடுவதும் குழுதான். தமிழ்க் குழந்தை இலக்கிய வளர்ச்சி என்ற குறிக்கோளுடன் இக்குழு செயல்படுவதற்கு 'பஞ்சுமிட்டாய்' அத்தாட்சி. இதழுக்குத் தேவையான கதைகள், ஓவியங்கள், பாடல்களை 'கதைப் பெட்டி' வைப்பதின் மூலம் ஆசிரியர் குழு சேகரிக்கிறது. புத்தகக் காட்சியிலும் பள்ளிகளிலும் 'கதைப் பெட்டி' வைக்கப்படுகிறது. இது ஒரு புதுமையான முயற்சி. குழந்தைகளைத் தேடிப் போகும் செயல். இதுவே இன்றைய தேவை.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு குழந்தை இதழ்களின் வளர்ச்சியே அடிப்படை. இன்று குழந்தை இதழ்களின் எண்ணிக்கை சுருங்கிவிட்டது என்பது வெளிப்படையான உண்மை. இந்நிலையை மாற்ற வேண்டும். நிறைய சிறுவர் இதழ்கள் வர வேண்டும். அப்போது குழந்தைகளின் வாசிக்கும் பழக்கம் அதிகரிக்கும். புதிய குழந்தை எழுத்தாளர்களும் அதிகரிப்பார்கள்.

அரசும் பள்ளிகளும் பெற்றோரும் குழந்தை இதழ்களை வாங்கி குழந்தைகள் படிக்க ஊக்கமளிக்க வேண்டும். அப்போதுதான் குழந்தை இதழ்களின் 'பொற்காலம்' திரும்பும். ●

- கட்டுரை -

# தாழ்த்தப்பட்ட மக்களின் குரலை ஒலிக்கும் மலையாள இலக்கியப் படைப்புகள் ஒரு பார்வை

ஏ.எம்.சாலன்



'**சா**திக் கொடுமைகளும் அநீதிகளும், சாதிக் கருவமும் மிகுந்திருந்த காலத்தில் அடக்கப் பட்டிருந்த சாதியினர் அவற்றை எதிர்த்துப் பல்வேறு விதங்களில் போராடியுள்ளனர். இப்போராட்டங்களில் சாதி உயர்வு தாழ்வுகளை நிலைநாட்டப் பயன்படும் கருத்துக்களையும் தத்துவங்களையும் எதிர்த்துப் பல கருத்துக்களையும் தத்துவங்களையும் உருவாக்கினர்.

'இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதி சமத்துவத்தை விளக்கும் பல நூல்கள் தோன்றின. சாதி அமைப்பு முறையில் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களைப் பற்றி இவை எழுதப்பட்டன'. *(தமிழ் நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள்' பேராசிரியர். நா. வானமாமலை, 1980, மக்கள் வெளியீடு).*

"

**நீ, சாதியில் தாழ்ந்தவன்.**
**எனவே நான் குடித்துச் சாகும்**
**நல்ல தண்ணீரை**
**நீ, குடித்துச் சாகவேண்டாம்!**
**நீ, கலங்கிய சேற்று நீரைக்**
**குடித்துச் செத்தால் போதும்**
**என்று சொல்லியவாறு**
**பிராமணர் தண்ணீரில் மூழ்குகிறார்.**

"

மேற்கண்ட பேராசிரியர். நா.வா.வின் கூற்றுக்கு உதாரணமாகக் கேரள இலக்கியத்திலிருந்து சில உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும்.

கேரளத்தில் ஸ்ரீ நாராயணகுரு, குமரன் ஆசான், கவிஞர் பண்டிட் கருப்பன், சகோதரன் அய்யப்பன், தகழி சிவசங்கரபிள்ளை போன்றவர்களின் கலை- இலக்கியப் படைப்புகளில் மேற்சுட்டிய கருத்துக்கள் அதிகமாகக் காணக்கிடைக்கின்றன.

'திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவலில் இந்து சமூக அமைப்புக்கு ஒரு வரையறை கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்துச் சமூக அமைப்பு என்பது பிராமண நில உடைமையாளர்களையும், சத்திரிய நிலக்காவலர்களையும், சூத்திர உழைப்பாளிகளையும் கொண்ட ஒரு சமூக அமைப்பு என்று அதில் திரு. நாகம் ஐயா தெளிவாகக் குறிப்பிடுகின்றார்' (பக்கம் - 36, 'தெற்கிலிருந்து' - பொன்னீலன், மக்கள் வெளியீடு, 2001)

பூமியிலுள்ள அனைத்துமே பிராமணருக்குச் சொந்தம் என்ற மனுதர்மக் கோட்பாட்டுக்கு இந்த வரையறை ஒத்ததாக இருக்கிறது (Law of manuel Part - 1, 99, 89, 100, 9R, 91). ஒரு காலத்தில் இந்தியாவில் எல்லா இடங்களிலுமே இந்த மாதிரி, இந்து சமூக அமைப்பு இருந்ததாகவும், பல்வேறு சூழ்நிலை மாற்றங்களினால் மற்ற இடங்களில் படிப்படியாக இது அழிந்துவிட்டதாகவும், திரு. நாகம் அய்யா கூறிச் செல்கிறார்.

கேரளத்திலுள்ள பண்பாட்டுப் போராளிகளில் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர், ஸ்ரீ நாராயண குரு அவர்கள். தென்னை மரமேறிப் பிழைத்துவரும் ஈழவர் குலத்தில் பிறந்தவர், இவர். ஒரு குறிப்பிட்டக் காலம் வரையில் கேரளத்தில், ஈழவர்கள் தீண்டத் தகாதவர்களாகவே கருதப்பட்டு வந்தனர். இம் மக்களின் முக்கியத் தொழில் கள் இறக்குவதும், மதுக்காய்ச்சுவதும் ஆகும். இவர்களில் பெரும் பான்மையினர் ஏழைகளும், கல்வியறிவு அற்றவர் களாகவும் இருந்தார்கள். பல சாதிக் கொடுமை களுக்கும், வரிக் கொடுமைகளுக்கும் ஆளாகிக் கொண்டிருந்ததை எதிர்த்துக்கிளம்பிய பண்பாட்டுப் போராளி ஸ்ரீ நாராயண குரு அவர்கள்.

குரு நிரம்பக் கவிதைகள் இயற்றி இருக்கிறார். அனைத்தும் வருணாசிரமத்தின் கீழ், சாதிச் சிந்தனைக்குள் சிக்கிக்கிடக்கும் ஒவ்வொரு மனிதனும் பிற மனிதர் களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை மையமாகக் கொண்டே எழுதப்பட்டன. அதை அடிப்படையாகக் கொண்ட குருவின் சில வாசகர்கள் இப்பூமியில் எக்காலத்தும் நிலைத்து நிற்கக் கூடியவையாக விளங்குகின்றன.

சாதிக் கொடுமை உச்சக்கட்டத்திலிருந்து கொண்டிருந்த வேளையில் குருவின் கீழ்க்கண்ட வாசகங்கள் கேரளத்திலுள்ள மூலை- முடுக்குகளி லெல்லாம் ஓங்கி ஒலித்தன.

(உ.ம்) 'ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் மனிதனுக்கு'; 'மதம்' ஏதாயாலும் மனுசன் நன்னாயால் மதி' (ஒருவர் எந்தச் சாதியைச் சேர்ந்த வராக இருந்தாலும் சரி, அவர் நல்லவராக நடந்து கொண்டால் போதும்).

காட்டிலும், மேட்டிலும், சேற்றிலும் வேலை செய்யும் தலித் சமூகத்தினரும் (பள்ளர், பறையர், புலையர், சாம்பவர், முக்குவர், ஈழவர்) பூலோகத்தில் தேவர்களைப்போல் உலாவிக் கொண்டிருக்கும் நம்பூதிரி, நாயர் குலத்தவர்களும் ஒரே குலம்தான் என்று, எந்தவொரு மனிதராலும் பேச இயலாதக் காலகட்டம் அது என்பதை நாம் இந்த வேளையில் நினைவில் கொள்ள வேண்டும்.

இதே மாதிரியான ஒரு பண்பாட்டுப் போராளி தான் கவிஞர் பண்டிட் கருப்பன் அவர்களும். கொச்சி சமஸ்தானத்தில் தீண்டாமைக் கொடுமை உச்சத்தில் இருந்த வேளையில், தன் கலை- இலக்கிய ஆயுதம் கொண்டு அவற்றுக்கு எதிராக மூர்க்கத் தனமாகப் போராடிய பண்பாட்டுப் போராளி, கவிஞர் பண்டிட் கருப்பன் அவர்கள்.

முக்குவர் குலத்தில் பிறந்து, தனக்கு இருந்த ஓரளவு வசதியைப் பயன்படுத்திக் கல்வி கற்றுக் கொண்டதுடன், தன் கலைத்திறனையும் வளர்த்துக் கொண்டவர், இவர். ராஜவம்சத்தினரின் மொழியான சமஸ்கிருதத்தையும், தாய்மொழியான மலையாளத் தையும், ஆங்கில மொழியையும் கற்றுக்கொண்டவர். அக்கால சமூக அவலங்களைக் கிராமியக் கலை- இலக்கிய வடிவங்களின் வழியாக நாகரீக மனிதர் களுக்கும் கிராமத்தான்களுக்கும் எடுத்துக் காட்டியவர், பண்டிட் கருப்பன் அவர்கள்.

உதாரணத்திற்கு இவருடைய 'ஜாதிக்கும்மி' கவிதை நூலிலிருந்து சில வரிகளைக் காண்போம்.

'பசுக்களை அடித்தாலோ

**அவைகளின் சொந்தக்காரன்**
**அதைத் தடுத்திடுவான்!**
**புலையரை அடித்தாலோ**
**கேள்வி கேட்பார் எவருமில்லை!**
**அவன் சாலையில் இறங்கினால்**

**ஓட ஓடத் துரத்துகிறார்கள்;**
**பயந்து, பக்கத்திலுள்ள**
**நீரோடையில் இறங்கினாலோ**
**அவன் மீது கல்லெறிகிறார்கள்.'**

*அக்காலத்தில், கொச்சி சமஸ்தானத்தில் தாழ்த்தப் பட்ட மக்கள் சமூகத்தில் அனுபவித்துக் கொண் டிருந்த சாதிக்கொடுமையினை பண்டிட் கருப்பன் நம் கண்முன் வரைந்து காட்டுகிறார்.*

*அதே நூலில் இன்னொரு காட்சியினையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறார், பண்டிட் கருப்பன்.*

*அதன் உள்ளடக்கம் பின்வருமாறு:*

*'புலையர் சாதியைச் சேர்ந்த ஒருவரும், ஒரு பிராமணரும் ஓர் ஓடத்தில் ஒன்றாக அமர்ந்து, ஏரியில் பயணம் செய்கிறார்கள். ஓடம் அக்கரையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. திடீரென்று பயங்கரக் காற்றும், மழையும் வரவே, ஓடம் தடுமாறி தண்ணீரில் கவிழ்கிறது.*

*ஓடத்தில் பயணம் செய்த இருவருக்கும் நீந்தத் தெரியாது. முதலில் பிராமணர் தண்ணீருக்குள் விழுகிறார். தான் சாவது உறுதி எனத் தெரிந்த அவர், மூழ்கிக் கொண்டிருக்கும் போது, கை, கால்களைப் போட்டு தண்ணீரைக் கலக்குகிறார். அடியில் படிந் திருந்த சேறு தண்ணீரோடு கலந்து, அசிங்கமாகுகிறது. மூழ்கிக் கொண்டிருக்கும் ஓடத்தின், ஒரு விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்த புலையர், அர்த்தம் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்.*

*அப்போது பிராமணர் சொல்கிறார்:*

*"நீ, சாதியில் தாழ்ந்தவன். எனவே நான் குடித்துச் சாகும் நல்ல தண்ணீரை நீ, குடித்துச் சாகவேண்டாம்! நீ, கலங்கிய சேற்று நீரைக் குடித்துச் செத்தால் போதும்" என்று சொல்லியவாறு பிராமணர் தண்ணீரில் மூழ்குகிறார். கடைசியில் இருவரும் தண்ணீரில் மூழ்கி இறந்து போகிறார்கள்.*

*இது போக 'புலையர்' என்ற தலைப்பிலேயே ஒரு கவிதை இயற்றி இருக்கிறார், பண்டிட் கருப்பன். அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படுவதையும், தசையுருக அவர்கள் காட்டிலும் மேட்டிலும் படும் கஷ்டங்களை எடுத்துக் காட்டுகிறார்.*

*சாதியமைப்பையும், மனுநீதியின் வழிகாட்டுதலில் வருணாசிரம அமைப்பைக் கட்டிக் காக்கும் நிலவுடைமை அமைப்பையும், பண்டிட் கருப்பன் தன் 'பாலா கலேசம்' என்ற நாடகத்தின் மூலம் கடுமையாக விமர்சிக்கிறார்.*

*அதன் உள்ளடக்கம் பின்வருமாறு:*

*'கொச்சி மன்னர் ஆண்டு கொண்டிருக்கும் கொச்சி சமஸ்தானம் கால வளர்ச்சியை ஒட்டி மாற வேண்டும்; வழக்கத்திலிருக்கும் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க சட்டம் கொண்டுவர வேண்டும்' என்றெல்லாம் பேசும் இந்த நாடகத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.*

*அதாவது, தாழ்த்தப்பட்டக் குலத்தைச் சேர்ந்த புலையர் ஒருவர் ஒரு பிராமணரைத் தொட்டுவிட்டார் என்ற காரணத்திற்காக வேண்டி, அந்த ஊரைச் சேர்ந்த தம்பிரான்களும் பிராமணர்களும் ஒன்று கூடி, அந்தத் தாழ்த்தப்பட்டவரைப் போட்டு நையப் புடைக் கிறார்கள். இந்தச் சம்பவம் அந்தப் பிராந்தியத்தில் பெரிய பிரச்சினையாகி, நியாயாதிபன்மார்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, விசாரணை நடைபெறுகிறது.*

*விதி கீழ்க்கண்டவாறு அமைகிறது.*

*புலையரைப் போட்டு அடித்த பிராமணர்களில் சிலரையும், தம்பிரான்களில் சிலரையும் நாடுகடத்த வேண்டும்; சிலரைத் தூக்கிலேற்ற வேண்டும் என, நியாயாதிபன்மார் தீர்ப்பு அளிக்கிறார்கள்.*

*இந்த நாடகம் அன்று, ஆதிக்கச் சாதியினரின் கோபத்தைக் கிளறியது.*

*அவர்கள் சொன்னார்கள்:*

*மன்னர் ஆண்டு கொண்டிருக்கும் நாட்டில் இம்மாதிரி கொடுமைகள் நடைபெறுவதாக எடுத்துக் காட்டுவதை அனுமதிக்கக்கூடாது! தீண்டாமை என்பது, நம் நாட்டில் ஆண்டாண்டுக் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஓர் ஆசாரம் ஆகும். இது போக, என்ன குற்றம் செய்தாலும் சரி, பிராமணச் சாதியினருக்குத் தூக்குத்தண்டனை வழங்கக்கூடாது அது, நாடகமாக இருந்தாலும் கூட!*

*இப்படி, அவரது நாடகத்திற்கு எதிராக பல எதிர்ப்புகள் கிளம்பின.*

*இவரது 'ஜாதிக்கும்மி' கவிதையில் ஸ்ரீ சங்கராச்சாரியாரிடம் காணப்படும் சாதியுணர்வை எடுத்துக்காட்டும் பகுதி ஒன்று கட்டமைக்கப் பட்டிருக்கிறது.*

*அக்கவிதையின் உள்ளடக்கம் பின்வருமாறு:*

*ஸ்ரீ சங்கராச்சாரியார் கங்கை நதியில் நீராடி விட்டு, காசிநாதனைக் கும்பிடுவதற்காக வேண்டிச் செல்கிறார். செல்லும் வேளையில் அவர் கண்ணெதிரே பறையர் குலத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் ஜோடியாக வருகிறார்கள்.*

*சங்கரர் கேட்கிறார்: "பிராமணனாகிய நான் வருவது, உங்கள் கண்களுக்குத் தெரியலையா? என் உடம்பைத் தொட்டுவிடாதீர்கள்; விலகிச் செல்லுங்கள்" என.*

*உடனே, அதைக் கேட்ட ஆண், தன் மனைவியிடம் அவர் பேசியதன் பொருளை விளக்கிச் சொல்லிவிட்டு, சங்கராச்சாரியாருக்குப் பதில் சொல்கிறார்:*

**'சாமீ...**
**நாமெல்லாம் மாடும், மரமும் இல்லை!**
**மனிதப் பிறவிகள்...**
**இந்த மாதிரிக் கண்ணோட்டம் உள்ளவனே**
**நல்ல சாதிக்காரன்' என்று.**

*பின், தன் சாதிப் பெருமையை எடுத்துக் காட்டி சங்கரர் அதைக் கண்டித்துப் பேசுகிறார்.*

*உடனே தாழ்த்தப்பட்ட மனிதர் கேட்கிறார்:*

**'சாமீ...**
**ரெண்டுபேரும் சமூகத்தில்**
**சேவை புரிபவர்கள் தானே?**
**பிறகு ஏன், நீங்கள் மனிதகுலத்தை**
**இப்படி வேறுபடுத்திப் பேசுகிறீர்கள்?'**

*இந்த உரையாடல் இவ்வாறு நீண்டுகொண்டே போகிறது.*

*குமரன் ஆசானின் படைப்புகள் பெரும்பாலும் சமூகத்தின் அடித்தட்டில் கிடந்து நெரிந்து கொண்டிருக்கும் தலித் மக்களின் அவலங்களையும், பெண்கள் படும் கஷ்டங்களைப் பற்றியும், அதிகமாகப் பேசுகின்றன.*

*அவரது, 'துராவஸ்தை'ப் படைப்பை அன்றையக் காலகட்டத்தின் ஒரு புரட்சிகரமான படைப்பு என்று கூடச் சொல்லலாம்!*

*நம்பூதிரிக்குலத்தைச் சேர்ந்த இளம் பெண்ணொருத்தி, நிலவுடைமையாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த கலகத்தின் போது பயந்து ஒரு தலித் இளைஞனின் வீட்டில் சென்று அடைக்கலம் புகுகிறாள். அந்த இளைஞனின் குடும்பம், அப்பெண்ணின் குடும்பத்திற்கு அடிமை வேலை செய்யும் குடும்பமாகும். ஆதரவற்ற அவ்விளம்பெண், கடைசியில் அங்கேயே உண்டு, உறங்கி, தங்கியிருந்து, ஏழைத் தாயும் மகனும் மட்டும் உள்ள அந்தக் குடும்பத்தின் அன்புக்குப் பாத்திரமாகி, தன் சாதியுணர்வைத் தூக்கியெறிந்துவிட்டு, அந்தத் தலித் இளைஞனையே தன் வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக் கொள்வதாகக் கட்டமைக்கப்பட்டக் குறுங்காவியம், அது.*

*வழக்கத்திலிருக்கும் வருணாசிரம தர்மம் சிதைக்கப்பட வேண்டும்; சாதியக் கட்டமைப்பு உடைத்து, நொறுக்கப்பட வேண்டும்.*

*'சமூகத்தில் எல்லா மனிதர்களும் சரி-நிகர் சமானமானவர்களே!' என்ற புரட்சிகரமான கருத்தை தன் இலக்கியப் படைப்புகளுக்குள் ஏற்றிவைத்துப் பாடியவர், மகாகவி குமரன் ஆசான்.*

*இவருடைய 'சண்டாளப்பிட்சுகி' என்ற குறுங்காவியத்தில், கௌதமபுத்தரின் சீடரான ஆனந்த பிட்சு, ஒரு நாள் நடுமதிய வேளையில் தாகத்தால் நாக்கு வரண்டு நடந்துவரும் போது ஊருக்கு வெளியே கிணற்றிலிருந்து தாழ்த்தப்பட்டப் பெண்ணான (சண்டாளர்குலத்தைச் சேர்ந்த ஊர்த்தலைவரின் மகள், அவள்) மாதங்கி தண்ணீர் எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அருகில் போய் குடிப்பதற்கு தண்ணீர் கேட்கிறார்.*

*"அம்மா, தாகமா இருக்கிறது; குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தா" என.*

*சந்நியாசியை ஏற இறங்கப் பார்த்த அப்பெண், "ஐயா, நானொரு சண்டாளர் குலத்துப் பெண். நீங்களோ, ஆரியப்புத்திரர். ஆரியப்புத்திரராகிய நீங்கள், என் கையிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பது தர்மமாகுமா அவ்வாறு நான் தருவதுதான் நியாயமாகுமா? என்று கேட்கிறாள்.*

*"சாதி எதுவென்று கேட்கவில்லை சகோதரி! நான் கேட்பது தண்ணீர். நாக்கு வரளுது... பயப்பட வேண்டாம்; தண்ணீர் தா" என்று, அந்தப் பிட்சு தண்ணீர் குடிப்பதற்காக வேண்டி தன் இரு கைகளையும் கூட்டிப்பிடித்து, அப்பெண்ணின் முன்னால் குனிந்து நிற்கிறார்.*

*செய்வதறியாமல் திகைத்து நின்ற அப்பெண், கடைசியில் பிட்சுவுக்குத் தண்ணீர் கொடுக்கவே, அதைக் குடித்துமுடித்து ஏப்பம் விட்டபடி அந்தச் சந்நியாசி தான் தங்கி இருக்கும் புத்தமடத்தை நோக்கி விரைந்து சென்று விடுகிறார்.*

*ஆரியப்புத்திரரான அந்தச் சந்நியாசியின் புதிய செய்கையைக் கண்டு வியந்து போன மாதங்கி, அவரது சுவடுகளைப் பின் தொடர்ந்து புத்த மடத்திற்குச் சென்று, புத்தமதத்தை ஏற்றுக் கொண்டு புத்த சந்நியாசினி (சண்டாளப் பிட்சுகி) ஆகிவிடுகிறாள்.*

இந்த விஷயம், அரண்மனையில், பிராமணர் களுக்கு இடையே பெரிய விவாதத்தை ஏற்படுத்து கிறது, மன்னர் காரணம் கேட்பதற்காக வேண்டி புத்தமடத்தின் தலைமை சந்நியாசியிடம் வருகிறார்.

"ஒரு தாழ்த்தப்பட்டக் குலத்துப் பெண்ணை நீங்கள் எப்படி சந்நியாசினியாக ஏற்றுக் கொள்ளலாம்?" - இதுதான் மன்னரின் கேள்வி.

அங்கே விவாதம் காரசாரமாக நடைபெறுகிறது.

கடைசியில் தலைவரான புத்த சந்நியாசி கீழ்க் கண்ட சில கேள்விகளை மன்னரிடமும் கூடி நின்ற பிராமணர்களிடமும் கேட்கிறார் அதாவது,

"பிராமணர்கள் பிறந்து வந்தது போன்ற அதே மாதிரிப் பெண்ணுறுப்புக்குள்ளிருந்து பிறந்து வந்த வர்கள் தானே, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களும்?" என்று.

இதைக் கேட்டதும் மன்னரும், பிராமணர்களும் வாயடைத்துப் போகிறார்கள்.

இதுதான் 'சண்டாளப்பிட்சுகி' என்ற குறுங் காவியத்தின் சாரம்.

ஆக, அன்று கேரளத்தில், ஆதிக்கம் பண்ணிக் கொண்டிருந்த சனாதன தர்மத்திற்கு எதிரான கலகக்குரலை குமரன் ஆசானின் சண்டாளப்பிட்சுகி - யினுள் கேட்கமுடிகிறது.

சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற வேண்டிய உரிமைகளைப் பெறாமல் சமத்துவம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்ற நோக்கில் சமூகப் போராட்டங்களில் இறங்கியவர் - சகோதரன் அய்யப்பன் தாழ்த்தப்பட்ட மக்களை ஓரணியில் திரட்டி, சாதிபாகுபாடின்றி பிற சாதி மக்களோடு ஒரே பந்தியில் சமமாக உட்கார வைத்து சமபந்தி போஜனம் நடத்தியவர் சகோதரன் அய்யப்பன், அவர்கள்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏராள மான பாடல்களையும் அவர், இயற்றியுள்ளார். அது மட்டுமல்ல; இந்து மதத்தின் ஆசார - அனுஷ்டானங் களை சகோதரன் அய்யப்பன் கலை - இலக்கிய ரீதியாகவும், நடைமுறை வாழ்க்கையிலும் மிகக் கடுமையாக விமர்சித்தவர்.

**"பிராமண மதம் கெட்ட மதம்,**
**சேவை புரிபவர்களை அது மிதிக்கும் மதம்,**
**நமக்கு இடையே வெறுப்பைத் தூண்டும் மதம்;**
**நாம் நலமாக வாழ**
**அதை உதறித் தள்ள வேண்டும்"**

- இது, சகோதரன் அய்யப்பன் எழுதிய ஓணம் பாட்டில், சில வரிகள்.

**"காலம் மாறிப்போச்சு**
**எல்லாரும் சரிசமம்**
**என்ற புதுவழக்கம்**
**பரவத் தொடங்கியாச்சு**
**எல்லாரும் ஓர்குலம் - என்ற புதுக்கருத்து**
**பழைமைகளை அடித்து நொறுக்கிவிட்டு**
**கால மாறுதலுக்கேற்ப - இப்பூவுலகில்**
**நம்மை வழி நடத்திச் செல்லும்"**

- இது, அவருடைய 'ராஜ நிவேதனம்' என்ற கவிதையிலுள்ள வரிகளாகும்.

மலையாள இலக்கிய ஜாம்பவனான தகழி, 'தோட்டியினுடைய மகன்' என்ற தன்னுடைய நாவல் மூலம், மலையாளக் கலை - இலக்கிய உலகில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியவர்.

இந்த நாவல் கேரள மாநிலத்தில் ஆலப் புழையிலுள்ள சந்தனக் காவு வார்டை மையமாகக் கொண்டு சுழல்கிறது. வீடுகளிலும், ஹோட்டல் களிலும் உள்ள மிக அருவருக்கத் தக்க கழிவுகளை அப்புறப்படுத்தும் அருந்ததி வகுப்பைச் சார்ந்த இசக்கிமுத்து, அவர் மகன் சுடலை முத்து, இசக்கி முத்துவின் பேரன் மோகனன் ஆகியவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இன்றைய சாதிக்கட்டமைப்பை தகழி, இந்நாவல் மூலம் கடுமையாக விமர்சிக்கிறார். 'இதுநாள் வரையில் படைக்கப்பட்ட கலை இலக்கியங்களில் வேலை செய்பவர்களாகவும், அடிமைகளாகவும், அசுத்த மானவர்களாகவும், கீழானவர்களாகவும், வந்து போய்க் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை, தம் தோட்டியின் மகன் நாவலின் மூலம் மையத்துக்குக் கொண்டு வந்த பெருமை தகழியையே சேரும்.

ஆக, நம் நாட்டுக் கலை - இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் மலையாள மொழியில் தோன்றியது போல் (சாதிக்கட்டமைப்பைப் பாதுகாத்து வரும் வருணாசிரம தருமத்தை விமர்சித்து,) தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சார்பான படைப்புகள் பிற மொழி களில் இந்த அளவுக்குத் தோன்றியிருக்கிறதா, என்பது சந்தேகம்தான்!


**துணைநின்ற நூல்கள்:**


1. குமரன் ஆசானின் கவிதைகள்
2. 'ஜாதிக்கும்மி' - பண்டிட் கருப்பன்
3. 'சகோதரன் அய்யப்பன்' - பேரா. எம்.கே. சானு
4. 'தோட்டியுடெ மகன்' - தகழி.


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




கருத்தியல் பற்றிய சிந்தனைகள்
தேவி பிரசாத் சட்டோபாத்தியாய
தமிழில்: பேராசிரியர் சே.கோச்சடை
₹ 120/-





தீவுச் சிறையில்
விடுதலை இலக்கியம்
எஸ்.வி. ராஜதுரை
₹ 240/-





மோடியின் ஆட்சி
ஒரு விமர்சனப் பார்வை
டாக்டர் சித்தன கௌட பட்டீல்
முரளிதர. எம்.சத்தியானந்த் | ₹ 30.00





இந்துத்துவாவா இந்திய சுயராஜ்யமா
யு.ஆர்.அனந்தமூர்த்தி.
த: டாக்டர் வெ.ஜீவானந்தம் | ₹ 65.00





காந்தியத்தின் உதிரிப்பூக்கள்
முனைவர் ப.பாலமுருகன்
₹ 90.00




கம்பனில் தெய்வமும் மகனும்
முனைவர் க.முருகேசன்
₹ 130/-





தமிழகப் பண்பாடு
அ.கா.பெருமாள்
₹ 145/-




தமிழ்ச் சமூகத்தில்
அறமும் ஆற்றலும்
ராஜ் கௌதமன் | ₹ 110/-




பாட்டும் தொகையும் தொல்காப்பியமும்
தமிழ்ச் சமூக உருவாக்கமும்
ராஜ் கௌதமன்
₹ 290/-




கண்மூடி வழக்கம் எலாம்
மண்மூடிப் போக...!
முனைவர் பா.ராம்மனோகர்
₹ 105/-





ஆரம்ப கட்ட முதலாளியமும்
தமிழ்ச் சமூக மாற்றமும்
ராஜ் கௌதமன்
₹ 70.00




வரலாறு சொல்லும் பாடம்
சுப்பாரதிமணியன்
₹ 195/-

# தமிழ் வானில் ஒளிர்ந்த தாரகை திருவாசகமணி

## இரா. மோகனசுந்தரம்



**செ**ந்தமிழ் வானில் தாரகைகளாய் ஒளிவீசியவர் பலர். அவர்களுள் பகல் நட்சத்திரங்களாய் நம் கண்ணுக்குத் தெரியாமல் விளங்கியவர் பலர். அத்தகு பலருள் ஒருவராய்த் திகழ்ந்த திருவாசகமணி கே.எம்.பாலசுப்பிரமணியம் அவர்களைப் பற்றி இளைய தலைமுறைக்குச் சில செய்திகளைப் பகிர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

'திருவாசகமணி' கே.எம்.பாலசுப்பிரமணியம் இருபதாம் நூற்றாண்டில் தமிழகம் கண்ட தலை சிறந்த வழக்கறிஞர்; தமிழ் எழுத்தாளர்; மொழி பெயர்ப்பாளர். திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். திருக்குறளை மொழிபெயர்ப்பதற்கு முன்னரே, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் 'திருவாசகமணி' எனும் பெயரால் அழைக்கப்பட்டவர். சமுதாயத்தில் வர்ணாசிரமத்தை விரட்டும் வேலையைச் செய்யத் துணிந்த பெரியார் 1926-இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். தொடக்கம் முதலே கே.எம்.பாலசுப்பிரமணியம் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றினார்.

தொடர்ந்து கே.எம்.பாலசுப்பிரமணியம் திராவிட இயக்கத்தின் தலைவர்களான தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடன் நெருங்கிப் பழகிப் பணியாற்றித் திராவிட இயக்கத்தின் தளபதி எனும் இடம் பெற்றார். தமிழகத்தில் 1938-இல் மூண்ட இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான மொழிப்போர்க் கிளர்ச்சியில் முன்னணித் தலை வர்கள் ஐவருள் ஒருவராக விளங்கிப் போராட்டக் களம் கண்டவர் இவர். இதன் விளைவாக ஆறு மாதம் சிறைத்தண்டனை அடைந்தார். 'திராவிட நாடு' பிரிவினைக் கோரிக்கை தொடர்பாக இந்திய முஸ்லீம் லீக் தலைவரான முகம்மது அலி ஜின்னாவுடன் விவாதிக்கத் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவுடன் பம்பாய் சென்றபோது உடன் சென்றார். இந்நிகழ்வின் போது சட்டமேதை பி.ஆர்.அம்பேத்கரும் இருந்தார்.

பின்னர் கே.எம்.பாலசுப்பிரமணியம் திராவிட அரசியல் பாதையை விட்டு விலகி ஆன்மிக வழியில் நாட்டம் கொண்டார். தத்துவம், சைவ இலக்கியம், சைவ சித்தாந்தம் முதலானவற்றில் அவருக்கு மிகவும் ஈடுபாடு ஏற்பட்டது. கே.எம்.பாலசுப்பிர மணியத்தின் இத்தகைய மனமாற்றம் பற்றித் திராவிட இயக்க மூத்த ஆய்வு அறிஞரும் எழுத்தாளருமான க.திருநாவுக்கரசு பின்வருமாறு கருத்துத் தெரிவிக் கிறார்; 'திருநெல்வேலியில் 1930-இல் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நாத்திகத்துக்கு ஆதரவாகத்

தீர்மானம் கொண்டு வந்தவரின் இத்தகைய மன மாற்றம் குறித்துச் சுருக்கமாகச் சொல்வதற்கு இயலாது.' மேலும் அவர், 'கே.எம்.பாலசுப்பிர மணியம் அவர்களின் திருவாசகச் சொற்பொழிவை நான் நேரில் கேட்டுள்ளேன்,' என்றும் நினைவு கூர்கிறார். தூய தமிழ்க் காவலர் கு.மு.அண்ணல் தங்கோவின் 'அறிவுப்பா' என்னும் நூலுக்குக் கே.எம்.பி. அணிந்துரை வழங்கியுள்ளார்.

கே.எம்.பாலசுப்பிரமணியம் திருவாசகத்தை 1958-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 500 பிரதிகள் வெளியிட்டார். தென்ஆப்பிரிக்கத் தமிழ் மக்களின் பெருத்த ஆதரவால் பாதிக்கும் மேலான அவரின் திருவாசக மொழிபெயர்ப்பு நூல்கள் விற்றுத்தீர்ந்தன. கே.எம். பாலசுப்பிரமணியம் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் மிகச்சிறந்த புலமை யாளர் என்று 'வெள்ளிநாக்குச் சொற்பொழிவாளர்' என்று பெயர் பெற்ற ரைட் ஆனரபிள் வி.எஸ். சீனிவாச சாஸ்திரி புகழ்ந்துள்ளார். இவரின் திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலுக்கு அந் நாளைய தமிழக உள்துறை அமைச்சர் எம்.பக்தவத்சலம் முன்னுரை வழங்கியுள்ளார்.

13.05.1961-இல் சென்னை திருமயிலையில் உள்ள கபாலீசுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்த கே.எம்.பாலசுப்பிரமணியத்தின் பெரியபுராணச் சொற்பொழிவில் கலந்து கொண்ட அந்நாளைய குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன், பாலசுப்பிரமணியத்தைப் பலபடப் பாராட்டியதுடன், திருவாசகத்தைப் போன்றே திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கு மாறு கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்து உரையாற்றிய பாலசுப்பிரமணியம் தான் திருக்குறளை மொழியாக்கம் செய்து வருவதாகத் தெரிவித்து, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் விரைவில் இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கிட அனைவர் சார்பில் விரும்புவதாகவும் தெரிவித்தார். அவ்வாறே ஓராண்டுக்குப் பின் 13.5.1962-இல் இந்தியக் குடியரசுத் தலைவராக டாக்டர் எஸ்.இராதா கிருஷ்ணன் பொறுப்பு ஏற்றார் என்பது வரலாறு. அவ்வாண்டிலேயே குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் முன்னுரையுடன் பாலசுப்பிர மணியத்தின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலும் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கே.எம்.பாலசுப்பிரமணியத்தின் திருக்குறள் மொழி பெயர்ப்பு மிகவும் சுருக்கமானது; கவித்துவ மானது; முந்தைய மொழிபெயர்ப்புகளைவிடத் தனித்து விளங்குவது. திருக்குறள், திருவாசகம் - இரு ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களையும் மறு பதிப்புச் செய்துள்ளார், 'சென்னை சிவாலயம்' ஜெ.மோகன், 'கவியோகி' சுத்தானந்த பாரதியார், பாலசுப்பிரமணியத்தின் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவரின் கருத்துகளைச் சரியாக உள்வாங்கி ஒளிதிகழும் வண்ணமாக அமைந் துள்ளதாகப் பாராட்டுகிறார். கே.எம்.பாலசுப்பிர மணியத்தின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு முன்னுரை வழங்கிய இன்னொருவர் செக்கோஸ்லோவேகியா நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர் கமில் சுவலபில் ஆவார். அவர் கூறுவது: "ஈடிணையற்ற தமிழ் நூலான திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு மூலநூலைப் படிப்பது போன்றே சிறப்பாக உள்ளதாக மேற்குலகம் கருதுகிறது" என்பதாகும். பாலசுப்பிரமணியம் தமது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பில் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கராயர் ஆகியோரின் உரைகளையும், பைபிள், குரான், ஷேக்ஸ்பியர், மில்டன், அலெக்சாண்டர் போப், டிரைடன், பிரான்சிஸ் பேகன், டாக்டர் ஜான்சன் ஆகியோரின் ஆக்கங்களிலிருந்து மேற்கோள்களாகப் பலவற்றைச் சுட்டியும் விளக்கிக் காட்டியுள்ளார். இவையே இவரின் திருக்குறள் மொழிபெயர்ப்பில் பாதியளவு இடம் பெற்றுள்ளன என்பது கூடுதல் சிறப்பாகும். திருவாசகமணி கே.எம்.பாலசுப்பிரமணியம் தன் திருவாசகம் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை ஜி.யு. போப் அவர்கட்குக் காணிக்கையாக்கியுள்ளார். ஜி.யு.போப் திருவாசகத்தை ஆங்கிலத்தில் முதன் முதலாக மொழி பெயர்த்து 1900 ஏப்ரல் 24-இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் வெளியிட்டவர்.

கே.எம். பாலசுப்பிரமணியம் தென் ஆப்பிரிக்கா வுக்கு வருகை தந்தபோது தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட பெரும் தாக்கம் குறிப்பிடத்தக்கது என்று தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அமைச்சர் பழனிசாமி அய்யண்ணதேவன் கூறியுள்ளார். (பழனிசாமி அய்யண்ணதேவனின் 'தென் ஆப்பிரிக் காவில் சமயமும் தமிழும்' உரை-செம்மொழி மாநாடு, கோவை, 2010) சைவம் பரப்பிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு கூறும் பெரிய புராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் கே.எம்.பாலசுப்பிரமணியம் ஈடுபட்டு இருந்தபோது 03.10.1974 அன்று இயற்கை அடைந்தார். இதனால் இப்பணி முற்றுப்பெறவில்லை. திருவாசக மணி கே.எம். பாலசுப்பிரமணியம் பெரிய அளவில் சமூக, அரசியல் ஆளுமையாகத் தமிழ்ச் சமூகத்தில் இடம் பெற இயலவில்லையாயினும், ஆன்மிக வாதியாக மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், திருவள்ளுவரின் திருக்குறளையும் ஆங்கிலத்தில் சிறப்பாக மொழிபெயர்த்த சீரிய தமிழ்த் தொண்டுக்காக என்றென்றும் தமிழுலகில் நினைவு கூரப்படுவார். ●


## நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,





**நரசீபுரத்தில் நான்கு கில்லாடிகள்**
இரா.கற்பகம்
₹ 90/-





**என்னை நோக்கிப் பாயும் நியூட்ரான்**
இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப
₹ 80/-




Great Scientists of india
**B.G.Ramesh**
₹ 160/-





Be Successful in 30 Days
Dr. Kavidasan
₹ 45/-





Improve your General Knowledge
S.ANANTHA KUMAR
₹ 70/-

## அறிவுப் பதிப்பகம் (பி) லிட்.,




**தந்தை பெரியாரின் வாழ்வும் வாக்கும்**
தொகுப்பு: ச.குமார்
₹ 110/-




**நானும் எனது இயற்கையும்**
கன்யூட்ராஜ்
₹ 110/-

## தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,




**வீட்டில் இருந்தே சம்பாதிக்கலாம்!**
முனைவர் ப.பாலமுருகன்
₹ 100/-




**இராமானுஜர் எளியோரின் ஆச்சாரியர்**
கன்யூட்ராஜ்
₹ 175/-

**நூல்கள் கிடைக்கும் இடம்**

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,


41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர் (H.O.): 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223448.

# உத்தமதானபுரம் வே. சாமிநாதையர்: சிறப்பினும் பெரிய தனிச்சிறப்புப் பெற்றவர்

முனைவர் **இரா. வெங்கடேசன்**



**நி**றுவனம் சார்ந்த எந்தக் கல்விப் புலத்திற்கும் சென்று பயின்று பட்டம் பெறாத உ.வே. சாமிநாதையர் அவர்கள் பல நிறுவனங்களிடமிருந்து பரிசுகளையும் பட்டங்களையும் பெற்றுச் சிறப்புற்றிருக்கிறார். கடும் உழைப்பினால் மட்டுமே பல மதிப்புமிக்க பட்டங்களைப் பெற்றுப் புகழின் எல்லையைக் கண்டவர் சாமிநாதையர். இசை அறிந்த குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் அவற்றின்பால் ஈடுபாடுகொள்ளாமல் தமிழை மட்டுமே நம்பி, தமிழை மட்டுமே படித்தறிந்து, தமிழின்பால் மட்டுமே தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டவர் சாமிநாதையர். அவரிடமிருந்த தமிழ்ப் பற்றால்தான் இந்திய மகாகவிகளான தாகூர், பாரதி ஆகிய இருவராலும் ‘அகத்தியர்’ என போற்றிக் கொண்டாடப்பட்டார். கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ‘தமிழ்த்தாத்தா’ என அன்போடு அழைத்து மகிழ்ந்ததும் உ.வே.சா. தம்மைத் தமிழின்பால் ஈடுபடுத்திக்கொண்ட காரணத்தால் மட்டுமேயாகும்.

உ.வே.சா. பெற்ற பட்டங்கள் எல்லாவற்றையும் இணைத்து அவர் பெயரை எழுதினால் ‘மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் உ.வே. சாமிநாதையர்’ என அமையும். தாம் பதிப்பித்த பல நூல்களின் முகப்பில் தம் பெயருக்கு முன்னால் இந்தப் பட்டப் பெயர்களையெல்லாம் இணைத்து அச்சிட்டு அழகு பார்த்திருக்கிறார் சாமிநாதையர்.

இளமைக் கல்வியைப் பல ஊர்களில் பல அறிஞர் பெருமக்களிடம் கற்றறிந்த பின்னர் 1871இல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்து பயின்று, புலமைபெற்று, பிள்ளையின் இறப்பிற்குப் பின்னர் 1876ஆம் ஆண்டி லிருந்து திருவாவடுதுறை மடத்தின் ஆதீனகர்த்தராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரிடம் தமிழ் கற்று அறிந்திருக்கிறார் உ. வே. சாமிநாதையர். தேசிகரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் (1877, ஈசுவர வருஷம் தை மாதம்) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மகாகும்பாபிஷேகத்திற்குத் தேசிகரைக் கும்பாபிஷேகம் நடத்தும் அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் அழைத்திருந்தனர். அந்த விழாவிற்குச் செல்வதற்குரிய யாத்திரையில் உ.வே. சாமிநாதை யரையும் உடன் அழைத்துச் சென்றிருக்கிறார் சுப்பிர மணிய தேசிகர். அந்தப் பயணத்திற்கு முன்பாகக் கௌரீசங்கர கண்டியும் (உத்திராக்கமாலை), சால்வையும் சுப்பிரமணிய தேசிகரால் இவருக்கு அளிக்கப்பட்டு உள்ளது.

உ.வே.சாமிநாதையரவர்களின் வரலாற்றுவழி பார்க்கும்போது சுப்பிரமணிய தேசிகரிடம் பெற்ற கண்டி, சால்வை இரண்டும் அவர் பெற்ற முதல் சிறப்பாகக் கருதமுடிகிறது. இந்தச் சிறப்பைப் பெறும்போது அவருக்கு வயது 16. சுப்பிரமணிய தேசிகரிடம் பெற்ற சிறப்பு குறித்து என் சரித்திரத்தில் இப்படிக் குறிப்பிட்டு மகிழ்கிறார் உ.வே. சாமிநாதையர்:

> "யாத்திரையில் எனக்குப் பலவகை நன்மைகள் உண்டாகுமென்பதற்கு அந்த ஸம்மானங்கள் அறிகுறியாக இருந்தன. என் தந்தையாரிடம் முன்பே பிரயாண விஷயத்தைத் தெரிவித்திருந் தாலும் நான் பெற்ற சிறப்புக்களை அவர் பார்த்து இன்புற வேண்டுமென்ற நினைவோடு தான் திருவாவடுதுறைக்குப் போய் வரும்படி தேசிகர் கூறினாரென்பதை நான் உணர்ந்தேன். திருவாவடுதுறை சென்று கண்டியையும் சால்வையையும் என் தாய் தந்தையருக்குக் காட்டியபோது அவர்கள் அடைந்த சந்தோஷம் சாமான்யமானதன்று" (என் சரித்திரம், ப. 440)

சுப்பிரமணிய தேசிகரின் யாத்திரை திருவாவடு துறையிலிருந்து புறப்பட்டு, ஆலங்குடிவழியாக மன்னார்குடியை அடைந்தது. மன்னார்குடியில் தங்கியிருந்தபோது இவருக்குச் சிவப்புக் கல் வைத்த கடுக்கன் அணிவிப்பதற்குரிய ஏற்பாட்டைத் தேசிகர் செய்திருக்கிறார். மன்னார்குடியிலிருந்து புறப்பட்டுப் பட்டுக்கோட்டை சென்றடைந்ததும் தேசிகர் உ.வே.சா. அவர்களுக்கு மோதிரம் வாங்கிக் கொடுத்துக் கையில் அணிந்துகொள்ளச் செய்திருக்கிறார்.

உ.வே.சாமிநாதையர், திருவாவடுதுறை மடத்தில் சுப்பிரமணிய தேசிகரிடம் (1876 - 1880) பாடம் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் இளைய தம்பிரான்களுக்குப் பாடம் சொல்லும் வித்துவானாகவும் விளங்கியிருக்கிறார். தம்பிரானாகவும் வித்து வானாகவும் விளங்கிய காலத்திலேயே தமது புலமைத்திறத்தால் பலவகை சிறப்புக்களைப் பெற்று விளங்கியிருக்கிறார் சாமிநாதையர்.

உ.வே.சா. மடத்தில் இருந்த காலத்தில், சுப்பிரமணிய தேசிகரிடத்தில் ஈடுபாடுகொண்ட பரமசிவத் தம்பிரான் என்பவர் தேசிகர்மீது மும்மணிக் கோவை ஒன்றை இயற்றியுள்ளார். அந்தப் பிரபந்தம் தேசிகருடைய முன்னிலையில் அரங்கேற்றப்பட்டு உள்ளது. அம்மும்மணிக்கோவைக்குப் பத்துபேர் சிறப்புப் பாயிரச் செய்யுள் வழங்கியிருந்தனர். அவர்களுள் சாமிநாதையரும் ஒருவர். சிறப்புப் பாயிரச் செய்யுளுக்கு முன்னர் அதனை எழுதினவர் பெயர் அமைப்பது வழக்கம். அதன்படி 'திருவாவடு துறை ஆதீன மகாசந்நிதானத்திடத்துக் கல்வி கற்கின்ற வரும் வேங்கடசுப்ப ஐயரவர்கள் புத்திரருமாகிய திருவாவடுதுறைச் சாமிநாதையரவர்கள் இயற்றிய அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்' என்று அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைத்தது குறித்து என் சரித்திரத்தில் இப்படி எழுதிப் பெருமை கொள்கிறார் சாமிநாதையர்:

> "என்னைத் திருவாவடுதுறைச் சாமிநாத ஐயரென்று வழங்குவது உறுதியாயிற்று. திருவாவடுதுறையென்பது ஊர்ப் பெயராக இருந்தாலும் அதை என் பெயரோடு சேர்த்த போது எனக்கு ஒரு கௌரவப் பட்டம் கிடைத்தது போன்ற மகிழ்ச்சி உண்டாயிற்று" (என் சரித்திரம், ப. 435).

திருவாவடுதுறை மடத்தில் வித்துவானாக இருந்தபோதே தியாகராச செட்டியார் வழியாகக் கும்பகோணம் கல்லூரித் தமிழ் ஆசிரியர் பணி வாய்ப்பு வரப்பெற்றது. தியாகராச செட்டியாரின் முயற்சியினால் 1880ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் நாள் கும்பகோணம் கல்லூரியில் தமிழ் ஆசிரியர் பணியை ஏற்றிருக்கிறார். கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர் பணி ஏற்கச் செல்லும்போது சுப்பிரமணிய தேசிகர் இவரைப் பற்றி இவ்வாறு எழுதியனுப்பியிருக்கிறார்:

> "இந்தப் பத்திரிகையிலெழுதப்பட்டிருக்கிற சாமிநாதையர் நமது ஆதீன வித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் ஆறு வருஷ காலம் இலக்கண இலக்கியங்கள் நன்றாய் வாசித்ததுமன்றி நம்மிடத்திலும் நான்கு வருஷ காலமாக வாசித்துக் கொண்டிருக்கிறார். இலக்கண

*இலக்கியங்களைத் தெளிவாய்ப் போதிக்கிற விஷயத்தில் நல்ல சமர்த்தர்; நல்ல நடையுள்ளவர்'' (என் சரித்திரம், ப. 484).*

*1903ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் மாணவர்கள் போற்றும் நல்லாசிரியராக அங்குப் பணியாற்றியிருக்கிறார். கும்பகோணம் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது 1903, ஜனவரி, 1ஆம் நாள் தஞ்சையில் ஏழாவது எட்வர்டு மன்னர் முடிசூட்டு விழா தொடர்பாக நடந்த நிகழ்ச்சி யொன்றில், இவரது தமிழ்ப்பணியைப் பாராட்டும் வகையில் மாவட்ட துணை ஆட்சியரால் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பெற்றது. இந்தப் பட்டத்தை உ.வே.சா. அவர்கள் பெற்றபோது பதிமூன்று ஆண்டு கால ஆசிரியர் பணி அனுபவங்களையும், சீவக சிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதி காரம் (1892), புறநானூறு (1894), மணிமேகலை (1898) உள்ளிட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பாசிரியர் அனுபவங்களையும், மணிமேகலை (1898) நூலுக்கு உரை எழுதி வெளியிட்டதன் வழியாக உரையாசிரியர் அனுபவத்தையும் பெற்றிருந்தார். 1903ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்து தமிழாசிரியர் பணியைச் செய்யத் தொடங்கினார். கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வந்தபின்னர் மேலும் பல சிறப்புக்களை அவர் பெற்று விளங்கி யிருக்கிறார்.*

*1906, ஜனவரி, 1ஆம் நாளன்று சாமிநாதையர் அவர்களின் தமிழ்ப் பணியைப் போற்றும்வகையில் அரசு 'மகாமகோபாத்தியாய' பட்டம் வழங்கிப் பாராட்டியது. இந்தப் பட்டத்துடன் ஆண்டுதோறும் 100 ரூபாய் பெறுவதற்குரிய வழிவகையும் செய்து தரப்பட்டது. இந்தப் பட்டத்தைப் பெறும்போது சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றிக் கொண் டிருந்தார். உ.வே.சாமிநாதையர் அவர்களுக்கு மகாமகோபாத்தியாய பட்டம் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை அந்தக் காலத்தில் வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் புகழ்பெற்று விளங்கிய வி. கிருஷ்ண சாமி ஐயர் செய்திருந்தார். கிருஷ்ணசாமி ஐயர் பிரிட்டிஷ் அரசு கவர்னரது நிர்வாகச் சபையில் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக்கழக செனட், சிண்டிகேட் ஆகிய இரு அவைகளின் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவர். மயிலாப்பூரில் சமஸ்கிருத கல்லூரி, வேங்கடரமண வைத்தியசாலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்.*

*உ.வே.சாமிநாதையர் மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றதற்குப் பலரும் நேரில் கண்டு பாராட்டியுள்ளனர்; பலர் கடிதங்கள் மூலமாகத் தங்களின் மகிழ்ச்சியையும் பாராட்டையும், வாழ்த்தினையும் தெரிவித்துள்ளனர். 1903, ஜனவரி, 3ஆம் நாள் சுதேசமித்திரன் இதழ், சாமிநாதையர் அவர்கள் மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றதைப் பாராட்டி இவ்வாறு எழுதியிருந்தது:*

> ''ஸ்ரீமான் ஸ்வாமிநாதையர் தமது பாஷாபிமானம், தேசாபிமானம் என்னும் பெரிய ஆயுதங்களைக் கொண்டே அசௌகர்யங்களை வென்று உயர்வுற்றிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இவருடைய அருந்திறமையை நன்கு மதித்துக் கவர்ன்மெண்டார் இவருக்குப் புதுவருஷப் பட்டமாக மகாமகோபாத்தியாயர் என்ற உயர் பட்டமளித்திருப்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மகாமகோபாத்தியாய ஸ்வாமிநாதையர் அவர்கள் இன்னும் நெடுங் காலம் இருந்து, அவருக்கு நெடுங்காலம் முன்னரே கிடைத்திருக்க வேண்டியதாகிய மதிப்பு முழுதையும் அடைந்தவராகி, இத் தமிழுலகத் தாருக்குப் புதிய புதிய விருந்துகள் ஊட்டிக் கொண்டிருப்பாரென்று மனப்பூர்த்தியாக விஸ்வசிக்கின்றோம்'' (மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர், பக். 57 - 58)

*1906, மார்ச்சு, 17இல் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றதற்குப் பாராட்டு விழா நடைபெற்று உள்ளது. இந்தப் பாராட்டுவிழாவிற்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வந்திருந்து கீழ்வரும் வாழ்த்துப்பாக்களைப் பாடி அளித்திருக்கிறார்:*

"செம்பரிதி யொளிபெற்றான் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
றெவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கீன் நீரே?"
"அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை யாள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ?"
"நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
யின்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க;
குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலை பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்

துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே!"
(மேலது, பக். 61 – 62)

அப்போது பாரதியார் சுதேசமித்திரன் இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்திருக்கிறார். உ.வே.சா. அவர்கள் 1918, மே, 15இல் புதுச்சேரியில் நடைபெற்ற சங்கர ஜெயந்தி விழாவிற்குத் தலைமைதாங்கச் சென்றபோது அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த பாரதியாரைச் சந்தித்து மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றபோது தம்மைப் பற்றிப் பாடிய பாடல்களுக்காக நன்றி தெரிவித்திருக்கிறார்.

மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றதற்கு நடந்த பாராட்டு விழாவில், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும் கலந்துகொண்டு உ.வே.சா. அவர்களுக்கு வாழ்த்துரை வழங்கியிருக்கிறார். அவர் உரையின் எழுத்து வடிவத்தைச் சுதேசமித்திரன் இதழ் 1906, பிப்ரவரி, 13இல் வெளியிட்டு மகிழ்ந்துள்ளது.

உ.வே.சாமிநாதையர் ஆற்றிவரும் தமிழ்ப் பணியை அறிந்து 1917, ஜனவரி, 31ஆம் நாள் காசியிலிருந்த பாரத தர்ம மகா மண்டலம் 'திராவிட வித்யா பூஷணம்' (திராவிடக் கலையழகன்) என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டியுள்ளது. மகா மண்டலத்தார் சாமிநாதையருக்கு இந்தப் பட்டத்தை அளிப்பது குறித்து இவரது பழைய மாணவரும் திருச்சியில் வழக்கறிஞர் தொழில் செய்துவந்தவருமான டி.வி. சுவாமிநாத சாஸ்திரி என்பவருக்குக் கடிதம் எழுதித் தெரிவித்திருக்கிறார்கள். சாஸ்திரி அவர்களே அங்குச் சென்று அந்தப் பட்டத்தைப் பெற்றுவந்து சாமிநாதையரிடம் அளித்திருக்கிறார்.

1906, ஜனவரி மாதத்தில் வேல்ஸ் இளவரசர் துணைவியாருடன் சென்னைக்கு வந்திருக்கிறார். ஒரு வாரத்திற்கு மேல் சென்னையில் அவர்கள் தங்கியிருந்துள்ளனர். அவர்களின் வருகையைப் பாராட்டிப் பெருமைப்படுத்தும் வகையில் சென்னையில் பல்வேறு விழாக்கள் நடத்தப்பெற்றுள்ளன. அரசு, அறிஞர் பெருமக்கள் பலருக்குப் பட்டங்களும் பரிசுகளும் வழங்கிச் சிறப்புசெய்திருக்கிறது. கவர்னர் மாளிகையில் நடைபெற்ற தர்பாரில் உ.வே.சாமிநாதையர் அவர்களுக்குத் தங்கத் தோடா அணிவித்துப் பெருமைப் படுத்தியுள்ளனர். வேல்ஸ் இளவரசர் மீண்டும் 1922, ஜனவரி, 13இல் சென்னைக்கு வந்திருக்கிறார். அப்போது தமிழிலும் வடமொழியிலும் சிறந்து விளங்கும் பல அறிஞர் பெருமக்களுக்கு அரசு மரியாதை செய்திருக்கிறது. சாமிநாதையர் அவர்களுக்குக் 'கில்லத்' வழங்குவது என முடிவாகியிருந்தது. சாமிநாதையர் அப்போது திருவாவடுதுறையில் இருந்து சென்னைக்கு வந்து அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு சிறப்பித்திருக்கிறார்.

1925, ஜூன், 8ஆம் நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 24-ஆம் ஆண்டுவிழா நடைபெற்றது. சர் சி.பி.இராமசாமி தலைமையில் நடைபெற்ற அந்த விழாவில் சாமிநாதையரின் தமிழ்நூல் பதிப்புப் பணியைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் வகையில் ரூ. 5000/- பொற்கிழி அளித்துச் சிறப்பித்தனர். இத்தொகை, மதுரையில் வழக்கறிஞராகவும், அப்போது மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினராகவும் இருந்த டி. ஸி. சீநிவாஸையங்கார் பல செல்வந்தர்களிடமிருந்து திரட்டி வைத்திருந்த தொகையாகும். நிதி அளித்து உதவி செய்தவர்களின் பெயர்களை, அந்த ஆண்டு பதிப்பித்து வெளியிட்ட நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரைப் பதிப்பில் அச்சிட்டு நன்றி செலுத்தியிருக்கிறார் சாமிநாதையர்.

ஸ்ரீமான் ஸர். எம். ஸி. டி. முத்தையா செட்டியார், உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீமான் கனம் வி.வி. ஸ்ரீ நிவாஸையங்கார், இந்து பத்திரிகை அதிபர் ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், சுதேசமித்திரன் பத்திரிகை அதிபர் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்கார், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமணிய ஐயர், வெள்ளக்கால், ஸ்ரீமான் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் நிதி அளித்தவர்களுள் சிலராவர்.

அதே விழாவில், சாமிநாதையருக்குக் காஞ்சி காமகோடிபீடத் தலைவர் சங்கராச்சாரிய சுவாமிகள் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' பட்டம் வழங்கிச் சிறப்பித்து, இரட்டைச் சால்வையும், தோடாவும் அணியச் செய்திருக்கிறார்கள். சங்கராச்சாரியர் வழங்கிய தாக்ஷிணாத்ய கலாநிதி என்னும் பட்டத்தைப் பிற்காலத்தில் தாம் பதிப்பித்து, எழுதி வெளியிட்ட பல நூல்களில் தம் பெயருக்கு முன்னர் பெருமையுடன் சேர்த்துப் பதிப்பித்து மகிழ்ந்திருக்கிறார் சாமிநாதையர்.

சாமிநாதையரின் தமிழ்ப் பணியைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழகம், 'டாக்டர்' (D. LITT.) பட்டம் வழங்கிக் கௌரவித்தது. சாமிநாதையருக்கு டாக்டர் பட்டம் அளிப்பது குறித்துச் சென்னைப் பல்கலைக்கழகம் 1932, மார்ச், 21ஆம் நாள் தெரிவித்தது; 1932, ஆகஸ்ட் 3ஆம் நாள் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அந்தப் பட்டத்தை வழங்கியது. இவருடன் டாக்டர் பட்டம் பெற்றவர்களுள் சர் சி.வி. இராமன் அவர்களும் ஒருவராவார். வடமொழி, தமிழல்லாத ஏனைய துறைசார்ந்த அறிஞர்களுக்கு மட்டுமே வழங்கிவந்த இந்தப் பட்டம் தமிழில் முதன் முதலாகச் சாமிநாதையருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

1935, மார்ச் மாதம் சாமிநாதையருக்கு எண்பதாம் ஆண்டு நிறைவுற்றது. இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வழக்கறிஞர் கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். விழா 1935, மார்ச் 5ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் ஸர் முகமது உஸ்மான் தலைமையில் நடைபெற்றது. விழாவின் நிறைவில் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் சாமிநாதையரின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. அப்போது சாமிநாதையருக்கு ரூ3000/- பண முடிப்பும் அளித்துச் சிறப்பிக்கப்பட்டது.

எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் பலரும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்திருக்கின்றனர். உ.வே.சா. அவர்களின் நண்பர்களும், நலம் விரும்பி களும் சேர்ந்து அளித்த வாழ்த்துரையில்,

> "நிரம்பிய கல்வியாலும், நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்பே நூல்களை வெளியிடும் பொறுமையாலும், இடையூறுகளைப் பொருட் படுத்தாத விடாமுயற்சியாலும் அபாரமான ஞாபக சக்தியாலும், உள்ளதை உள்ளபடி பதிப்பிக்கும் அரிய குணத்தாலும், தூய்மை நிலையாலும், செய்ந்நன்றி மறவாத பெருந் தன்மையாலும், உடல்தளர்ந்தும் தமிழ்ப் பணியில் தளராத மன உறுதியாலும் தாங்கள் தமிழ்நாட்டிற்கு ஒரு திலகமாக விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள்" (எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் அளிக்கப் பெற்ற உபசாரப் பத்திரங்கள், ப. 8)

என்று வாழ்த்தி சிறப்பித்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் அளித்த வாழ்த்துரையில்

> "செயற்கரிய செயல்களைத் தமிழுலகத்திற்குத் தாங்கள் செய்து வந்திருப்பதோடு துரைத்தனக் கல்லூரிகளில் தமிழாசிரியராகவிருந்தே தங்கள் வாழ்நாளிற் பெரும்பாகத்தைக் கழித்தீர்களென்று அறிந்து தங்களைப் பெரிதும் நாங்கள் பாராட்டு கின்றோம். தங்கள்பாலுள்ள தெய்வபக்தி, உண்மை, அன்பு, உறுதி, சொல்வன்மை, கலைபயில் தெளிவு முதலிய அரிய குணங்கள் தங்கள் மாணவரின் மனத்தை முற்றிலும் தம்பால் வசீகரித்து அவர்தம் வாழ்க்கையையும் புனிதமாக்கின" (மேலது, ப. 26)

என்று சிறப்பித்துப் போற்றியுள்ளனர். இளமை தொடங்கி தமிழ் மீது பற்றுகொண்டு படித்து, உழைத்து, உயர்ந்து, சிறப்புற்று விளங்கியவர் சாமிநாதையர். தமிழ் மீது அளவுகடந்த ஈடுபாடு அவருக்கு இருந்தது என்பதற்கு ஏராளமான சான்று களைக் காட்டலாம். அவற்றுள் ஒன்றை இங்குச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். 'தமிழ் வரலாறு' எனும் வரலாற்று நூலை எழுதிய சீனிவாசபிள்ளை அவர்கள் ஒருமுறை (22.3.23) சாமிநாதையருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் ஐயரின் தமிழ்ப் பணியைச் சிறப்பாகப் பாராட்டி எழுதிவிட்டு 'இன்றுவரை தமிழுக்காகத் தாங்கள் பாடுபட்டது போதுமே; இனி அந்தச் சிரமமான வேலையை அடியோடு நீக்கிவிட்டு, ஈசுவர பக்தியை அபிவிருத்தி செய்துகொண்டு முன்னோர்களுக்கும் திருப்தியளிக்கச் செய்யலாமே' என்று எழுதியிருந்தார். அவரின் உள்ளக் கிடக் கையைப் புரிந்துகொண்டு நன்றிசெலுத்திச் சாமி நாதையர் பதில் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் ஒருபகுதி இவ்வாறு இருக்கிறது.

> "என் வாழ்நாள் முடியும்வரை, என் உடலில் சிறிதேனும் பலம் உள்ளவரை, நான் தமிழாராய்ச்சி ஒன்றில்தான் ஈடுபட முடியும். என்னை மூச்சு விடாதே என்று ஒருவர் சொன்னாலும் அப்படியே செய்ய முயல்வேன். ஆனால் தமிழ்ப் பணியை நிறுத்திவிடு என்றால் அது என்னால் முடியாத காரியம். நீங்கள் நல்ல நோக்கத்துடன்தான் எனக்கு எழுதினீர்கள். எனக்குச் சிரமமாக இருக்குமேயென்று நீங்கள் எண்ணுகிறீர்கள். எனக்கு அதுவே இன்பம். நான் மேற்கொண்ட தமிழ் ஆராய்ச்சிப் பணியே எனக்கு மிக உயர்ந்த மோட்ச சாதனம்" (என் ஆசிரியப்பிரான், ப. 136).

டாக்டர் உ.வே. சாமிநாதையரிடம் இருந்த இந்தத் தமிழ் ஈடுபாடுதான் பல சிறப்புகள் அவரைத் தேடிவரக் காரணமாக இருந்தது. அவர் காலத்திலோ, அவர் காலத்திற்கு முன்னரோ இவரையன்றி வேறு யாரும் தமிழால் இத்தனைச் சிறப்புக்களைப் பெற்ற தில்லை. அதுவே சாமிநாதையரின் தனிச் சிறப்புக் களுள் ஒன்றாக விளங்குகிறது.

### துணைநின்ற நூல்கள்


1. சாமிநாதையர், உ.வே. 2008 (ஏழாம் பதிப்பு). என் சரித்திரம். சென்னை: மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
2. சுந்தரராகவன், கே. 1942. மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர். சென்னை: அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடு
3. ஜகந்நாதன், கி.வா. 1983. என் ஆசிரியப்பிரான். சென்னை: மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
4. மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவில் அளிக்கப்பெற்ற உபசாரப் பத்திரங்கள், 6-3-1935. சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம்

   (1935, மார்ச் 5, சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் உ.வே. சாமிநாதையரின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்ட நாள்)